விலை: ரூபா 20 பக்கங்கள் 24

# உதயன்

31 °C | °F
தெளிவான வானம்

சுடர் 30 கதிர் 278 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 14, திங்கட்கிழமை 31.08.2015

## பாதுகாப்பு கருத்தரங்கு நாளை

கொழும்பு, ஓக.31

இலங்கை இராணுவத்தால் வருடாந்தம் நடத்தப்படும் பாதுகாப்புக் கருத்தரங்கு 6ஆவது தடவையாக நாளை கொழும்பு கலதாரி விடுதியில் நடைபெறவுள்ளது. அதில் சிறப்பு அதிதியாக முன்னாள் ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் கர்ஷாய் கலந்துகொண்டு விசேட உரையாற்றவுள்ளார்.

'பூகோள அச்சுறுத்தல்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் தேசிய பாதுகாப்பு' எனும் தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் தேசிய பாதுகாப்புக்கு எழுந்துவரும் அச்சுறுத்தல்கள் மற்றும் அழுத்தங்கள், வளர்ந்துவரும் சமாதானம், பயங்கரவாதம் மற்றும் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் சவால்கள் போன்ற விடயங்கள் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது

பக்கம் 21.....

# சர்வதேச விசாரணையே வேண்டும்

### காணாமற்போனோரின் உறவுகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 31

சர்வதேச சுதந்திர குழுவின் கௌரவ உறுப்பினர்கள் பங்கு கொண்ட விசாரணைக்குழு உட்பட சிறிலங்காவின் எந்தவொரு உள்ளக விசாரணைப் பொறிமுறையும் எவ்வித பலனையும் தரவில்லை. பொறுப்புக் கூறலும் நீதியும்தான் பாதிக்கப்பட்டவர்களுக்கான பார்வையில் சர்வதேச தர நெறிமுறைகளுக்கு அமைய சுதந்திரமான பங்களிப்பை செய்வதற்கு உதவியாய் அமையும். எனவேதான் சர்வதேச தரத்திலான விசாரணையே எங்களுக்கு வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பக்கம் 21.....

## ஐ.நாவில் மைத்திரி சிங்களத்தில் உரை!

கொழும்பு, ஓக.31

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிங்களத்தில் உரையாற்றுவார் என கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. ஐ.நா பொதுச்சபையில் வரும் செப்ரெம்பர் 30 ஆம் திகதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றவுள்ளார்.

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பல்வேறு நாடுகளின் தலைவர்கள், தமது சொந்த நாட்டில் பேசப்படும் மொழியிலேயே உரையாற்றுவது வழக்கம். இந்தியத் தலைவர்கள் பலரும் ஹிந்தி மொழியில் உரையாற்றியுள்ளனர்.

அந்த வகையில், ஜனாதிபதி சிங்கள மொழியில் உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு முன்னர், ஐ.நாவில் இலங்கைத் தலைவர்கள் சிங்கள மொழியில் உரையாற்றவில்லை. மகிந்த ராஜபக்ச ஆங்கிலத்திலேயே

பக்கம் 21.....

## தமிழ்க் கூட்டமைப்பின் 3 கட்சிகள் உள்ளகப் பொறிமுறைக்கு எதிர்ப்பு

### ஐ.நா. மனித உரிமையாளரிடம் நேரில் வலியுறுத்துவது என்றும் தீர்மானித்துள்ளன

யாழ்ப்பாணம், ஓக. 31

உள்ளக விசாரணைப் பொறிமுறையை ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை என்றும் இந்த விடயத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைனிடம் நேரடியாக வலியுறுத்துவது என்றும் தமிழரசுக் கட்சி தவிர்ந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஏனைய மூன்று கட்சிகளும் கூட்டாக முடிவெடுத்துள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசுக் கட்சியின் எதேச்சதிகாரப் போக்கை கட்டுபடுத்தும் வகையில் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்வதுடன், கூட்டமைப்பை பலப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்றும் அதில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும், இலங்கை தமிழ் அரசுக் கட்சி தவிர்ந்த, ஈ.பி.ஆர்.எல்.எவ்.,

பக்கம் 21.....

## காணாமல் ஆக்கப்பட்டோர் சர்வதேச தினம் நேற்று

கொழும்பு, ஓக.31

காணாமல் ஆக்கப்படுதலுக்கு எதிரான சர்வதேச தினம் நேற்று மன்னாரில் கடைப்பிடிக்கப்பட்டது. காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் சங்கம், மன்னார் பிரஜைகள் குழு ஆகியன இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலய மண்டபத்தில் மேற்படி நிகழ்வு நடைபெற ஏற்பாடுகள்

பக்கம் 21.....

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி 2 ஆண்டுகள் கூட்டமைப்புக்கு

### மைத்திரி–சந்திரிகா மந்திராலோசனை

கொழும்பு, ஓக.31

இரண்டு வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வகையில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்குவது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆகியோர் ஆலோசித்துள்ளனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவரை நியமிப்பது தொடர்பில் இன்று தீர்மானிக்கப்படும் என்று ஜனாதிபதி செயலக தகவல்கள் தெரிவித்தன. எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்யும் விடயத்தில் இறுதித் தீர்மானமொன்றை எடுப்பதற்கான கலந்துரையாடலுக்கு சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

இதன் போது பெரும்பாலும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கே எதிர்க்கட்சித் தலைவர்

பக்கம் 23.....

## கதிர்காமரின் கொலை தொடர்பில் புதிய விசாரணைக்கு கோரிக்கை

### புலிகள் மட்டும் காரணமல்ல என அஜிதா கதிர்காமர் சந்தேகம்

கொழும்பு, ஓக.31

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலை தொடர்பாக, புதிய விசாரணையை ஆரம்பிக்க வேண்டும் என்று கதிர்காமரின் குடும்பத்தினர் வேண்டுகோள் விடுக்கவுள்ளனர்.

எல்லாவற்றுக்கும் விடுதலைப் புலிகள் மீது குற்றம் சாட்டி விடுவது இலகுவானது. இதில் வேறு காரணிகளும் தொடர்புபட்டிருக்கலாம் என கதிர்காமரின் மகள் சந்தேகம் வெளியிட்டுள்ளார்.

கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே லக்ஸ்மன் கதிர்காமரின் மகள் அஜித்தா கதிர்காமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின்

பக்கம் 23.....

## முறைசாராக் கூட்டத்தை 17இல் நடத்த அமெ. திட்டம்

### இலங்கைக்கு ஆதரவான தீர்மானத்தை விவாதிப்பதற்கு

ஜெனிவா, ஓக.31

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானம் ஒன்றை முன்வைப்பது குறித்து, முதலாவது முறைசாரா கூட்டத்தை அமெரிக்கா எதிர்வரும் 17ஆம் திகதி ஜெனிவாவில் நடத்தவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30ஆவது கூட்டத்தொடர், எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை குறித்து அமெரிக்கா முன்வைக்கவுள்ள தீர்மானம் தொடர்பில் ஆலோசனை நடத்தவே, வரும் 17ஆம் திகதி, முதலாவது முறைசாரா கலந்துரையாடலுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஜெனிவாவில் உள்ள ஐ.நா

பக்கம் 23.....

## தடுத்து வைக்கப்பட்ட ஜெயக்குமாரி

யாழ்ப்பாணம், ஓக. 31

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்துக்கு நேற்றுக் கையெழுத்திடச் சென்ற ஜெயக்குமாரி சுமார் ஒரு மணி நேரம் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

வெலிஓயா நீதிமன்றத்தில் இடம்பெறும் வழக்கில்

பக்கம் 21.....

## தேசிய அரசுக்கு சபையின் ஒப்புதலைக் கோரி மனு

### செப். 1 இல் பிரதமர் பிரேரணை சமர்ப்பிப்பு

கொழும்பு, ஓக.31

தேசிய அரசு அமைப்பதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்வதற்கான பிரேரணையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் முதலாம் திகதி சபையில் சமர்ப்பிக்கவுள்ளார்.

எட்டாவது நாடாளுமன்றத்தின் கன்னி அமர்வு முதலாம்

பக்கம் 21.....

## ஐ.நா. அறிக்கை வெளியாகியதன் பின்னரே கூட்டமைப்பின் முடிவு

### அதன் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

பீஜிங், ஓக.31

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னரே, தமது நிலைப்பாட்டை வெளியிடமுடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரால், இலங்கையின் போர்க் குற்றம் தொடர்பில் விசாரணைக்கென்று நியமிக்கப்பட்ட, சன்ட்ரா பெய்டாஸ், மார்ட்டி அடிசாரி, அஸ்மா ஜகாங்கிர் மற்றும் சில்வியா காட்ரைட் ஆகியோரின் அறிக்கை

பக்கம் 23.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரில் உடல் உறுப்பை இழந்து நாடாளுமன்றம் செல்லும் சாந்தி

## முதலாவது உறுப்பினராக நாளைய அமர்வில்

சென்னை, ஓக.31

நாடாளுமன்றத்துக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 63 புதுமுக உறுப்பினர்களில் ஒருவரான சாந்தி சிறீஸ்கந்தராஜா, போரினால் உடல் உறுப்பினை இழந்த முதலாவது உறுப்பினராக நாடாளுமன்றத்துக்குள் பிரவேசிக்கவுள்ளார்.



எட்டாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு நாளை நடைபெறவுள்ளது. இம்முறை நாடாளுமன்றத்துக்கு 63 புதுமுகங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராக நாடாளுமன்றம் செல்கிறார் சாந்தி சிறீஸ்கந்தராஜா.

வன்னி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு மிக குறைந்தளவு விருப்பு வாக்குகள் வித்தியாசத்தில் தோல்வியுற்றவர் இவர். எனினும், கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்லும் இவர், இம்முறை நாடாளுமன்றத்தில் இடம்பெறும் 13 பெண் உறுப்பினர்களில் ஒருவராவார்.

சாந்தி சிறீஸ்கந்தராஜா நாடாளுமன்றத்துக்குள் நுழையும், போரில் தமது உடல் உறுப்பினை இழந்த முதல் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது. இறுதிக்கட்டப் போரின் போது,– 2009 பெப்ரவரி மாதம், படையினரின் பீரங்கித் தாக்குதலில் தனது ஒரு காலை இழந்தார்.

துணுக்காய் பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளராக இருந்த இவர், முழங்காலுக்குக் கீழ் தனது காலை இழந்த போதும், போரில் தமது உடல் உறுப்புக்களை இழந்த, காயமடைந்தவர்களின் சார்பில் குரல் கொடுக்க நாடாளுமன்றம் செல்கிறார்.

போரில் உடல் உறுப்பை இழந்த நிலையில் நாடாளுமன்றம் செல்லும் முதல் நபர் நானே. என்னைப் போன்ற நிலையில், உள்ள பலரின் சார்பிலும், குரல் கொடுத்து அவர்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வேன், என்று தெரிவித்துள்ளார் சாந்தி சிறீஸ்கந்தராஜா. (ற)

# மகிந்த ஒரு சந்தர்ப்பவாதி

## எஸ்.பி.திசாநாயக்க கூறுகின்றார்



கொழும்பு, ஓக.31

மகிந்த ராஜபக்ச மற்றும் அவரது குடும்பத்தினரும் சேர்ந்தே தன்னைத் தோற்கடித்தனர் என்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கள மொழி வார இதழுக்கு அளித்துள்ள பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் தோல்வி குறித்த கேள்விக்குப் பதிலளித்துள்ள அவர், தான்திட்டமிட்டு தோற்கடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இதுவரை நடைபெற்ற அனைத்துத் தேர்தல்களிலும் நான் ஒரு லட்சத்திற்கும் அதிகமான வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளேன். ஆனால் இந்தத் தடவை தேர்தல் பரப்புரை ஆரம்பித்தவுடன் மகிந்த ராஜபக்ச, பசில் மற்றும் கோத்தபாய ஆகியோர் எங்களைத் தோற்கடிப்பதில் குறி வைத்து இயங்கினார்கள்.

எங்கள் பிரதேசத்தின் இரண்டாம் கட்ட அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்களிடம் நாங்கள் வெற்றி பெற்றால் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளோம் என்ற வதந்தியைப் பரப்பினார்கள். அதனை நம்பி மக்கள் எங்களுக்கு வாக்களித் தயங்கிய தன் காரணமாகவே நாங்கள் தோற்கடிக்கப்பட்டோம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உடைந்து விடக் கூடாது என்ற நோக்கத்தில் முன்னாள் ஜனாதிபதிக்கும் தேர்தலில் போட்டியிட வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதில் நாங்கள் முன்னின்றோம். ஆனால் அவர் எங்களைத் தோற்கடிப்பதில் குறியாக இருந்தார். இதுதான் நன்றி கெட்ட அரசியல் சந்தர்ப்பவாதம், – என்று தெரிவித்துள்ளார். (ற)

# சிறுபான்மையின மக்களுக்கு தேசிய அரசு நன்மையானது

## முத்து சிவலிங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.31

தேசிய அரசு சிறுபான்மை மக்களுக்கு மிகவும் உதவியாக அமையும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.



பெரும்பான்மை பலத்தை பெற்றுக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைக்க தீர்மானித்துள்ளன. இந்த தீர்மானமானது நாட்டு மக்கள் அனைவருக்கும் நல்லவற்றை பெற்றுக்கொடுக்கும் எனவும் முத்து சிவலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குப் பதிலாக ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக போட்டியிட்டு இருந்தால், தமது கட்சி அதிகளவான வாக்குகளை பெற்றிருக்கலாம் என்றும் சிவலிங்கம் தெரிவித்துள்ளார்

# நாடாளுமன்றில் கம்யூனிஸ்ட் கட்சி சுயாதீனமாக செயற்படும்

கொழும்பு, ஓக.31

நாடாளுமன்ற நடவடிக்கைகளின் போது சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியானது எதிர்க்கட்சியில் சுயாதீனமாக செயற்படப் போவதாக அறிவித்துள்ளது.

நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை பிரதிநிதிப்படுத்தி செயற்படப் போவதில்லை என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் டீயூ குணசேகர தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சந்தரசிறி கஜதீர இந்த முறை நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளார். இந்நிலையில் அவர் நாடாளுமன்ற நடவடிக்கைகளின் போது, சுயாதீனமாக செயற்படுவார் என்று டீயூ குணசேகர தெரிவித்துள்ளார். (ற)

# வானில் விமானங்கள் பறக்கும் அச்சமடையத் தேவையில்லை

## இராணுவம் அறிவிப்பு

சென்னை, ஓக.31

எதிர்வரும் மூன்றாம் திகதி ஆரம்பமாகவுள்ள நீர்க்காகம் கூட்டுப் பயிற்சியின் போது கிழக்கு மாகாண வான் பரப்பில் விமானங்கள் பறக்கக் கூடும் என்றும் இதனால் மக்கள் அச்சமடைய தேவையில்லையென்று இலங்கை இராணுவத்தின் பிரதான அதிகாரி மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை இராணுவத்தின் ஏற்பாட்டில் 6ஆவது தடவையாக முப்படையினர் இணைந்து நடத்தும் நீர்க்காகம் கூட்டுப் பயிற்சியானது இம்முறை கொக்கிளாய் தொடக்கம் யாழ்ப்பாணம் வரை நடைபெறவுள்ளது.

பயிற்சி நடக்கவுள்ள பிரதேசங்களில் விமானங்கள் பறப்பதையிட்டு மக்கள் அச்சமடையத் தேவையில்லையென்றும் இதனால் மக்களின் அன்றாட நடவடிக்கையில் எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லையென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற)

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு போதைப்பொருள் விழிப்புணர்வு

புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, போதைப்பொருள் அற்ற அரசியலில் ஈடுபடுவது மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பிலான தெளிவுபடுத்தும் வேலைத் திட்டங்கள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை இதனை முன்னெடுக்கவுள்ளதாக, சபையின் தலைவர் வைத்தியர் திலங்க சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கென நாடாளுமன்ற செயலாளரின் அனுமதியைப் பெற, எதிர்வரும் 10ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ற)

# முன்னேஸ்வரத்தில் இம்முறையும் மிருக பலி பூசை நடைபெறவில்லை

## வேள்வி பொங்கலுடன் வழிபாடு

கொழும்பு, ஓக.31

சிலாபம் முன்னேஸ்வரம் ஶ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருடாந்த மிருகப் பலி பூஜை இம்முறை நடைபெறவில்லை. ஆனால் வேள்விப் பொங்கல் நேற்று நடை பெற்றதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக மிருகப் பலி பூஜை நடாத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் நேற்று நடைபெறவிருந்த மிருகப்பலி பூஜையின் போது சிலாபம் பிரதேச சபையிடம் அனுமதி பெற்று பொது சுகாதார பரிசோதனையின் பின்னர் இந்த மிருகப்பலி பூஜை நடைபெற வேண்டும் என நீதிமன்றின் உத்தரவிட்டுள்ள நிலையில் பிரதேச சபையினால் அனுமதி வழங்கப்படாமை காரணமாக மிருகப் பலி பூஜை நடைபெறவில்லை.

அத்துடன் ஆலயத்தை அண்மித்த பகுதியில் பொலிஸார் காவல் பணியில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். 2012 ஆம் ஆண்டு பௌத்த அமைப்புகளின் கடுமையான எதிர்ப்பு காரணமாக மிருகப் பலி பூஜை கைவிடப்பட்டு இருந்தது.

குறித்த இப் பிரச்சினைக்கு உயர் நீதிமன்றமும் சிலாபம் நீதிமன்றமும் வழங்கிய தீர்ப்பிற்கு அமைய பிரதேச சபையின் அனுமதியுடன் மிருகப் பலி பூஜைகளை நடத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால், இம்முறையும் பிரதேச சபை அனுமதியை மறுத்துவிட்டதாக ஆலய நிர்வாகம் மேலும் தெரிவித்துள்ளது. (ற)

# அரசியலில் இருந்து விலகி துறவியாகவுள்ளாராம் அநுர

கொழும்பு, ஓக.31

தான் அரசியலைவிட்டு விலகி துறவியாக போவதாக ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.



பொது தேர்தலில் தோல்வியடைந்தவர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நான் மீண்டும் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை. அரசியலில் ஈடுபடுவதனை விட துறவியாக செயற்படுவதே மேல்.

உங்களுக்கு வேண்டும் என்றால் தலைவரிடம் சென்று இம்முறை எங்களுக்கு நியாயமானதை செய்யுமாறு கூறுங்கள். – என்று தெரிவித்துள்ளார்.

அநுர பிரியதர்ஷன யாப்பா சிறிலங்கா சுதந்திர கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளராவார். (ற)

# முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு புதிதாக நாலாயிரம் பேருக்கு நியமனம்

## பொது நிர்வாக அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஓக.31

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்கு 4429 பேரை இணைத்துக் கொள்வதற்கு பொது நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அரச முகாமைத்துவ உதவியாளர் சேவைக்காக கடந்த வருடத்தில் இடம்பெற்ற போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய புதிய உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக பொது நிர்வாகம் மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சின் செயலாளர் ஜே.தடல்லகே தெரிவித்துள்ளார்.

3027 பேர் திறந்த போட்டி பரீட்சையினூடாகவும் 1202 பேர் வரையறுக்கப்பட்ட போட்டி பரீட்சையினூடாகவும் புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரச முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு தெரிவாகியுள்ளவர்களுக்கு அடுத்த மாதம் நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாகவும் பொது நிர்வா கம் மற்றும் உள்ளூராட்சிகள் அமைச்சின் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த பிரதமர் ஆகிவிடுவாரென தேர்தலுக்கு முன் அச்சமடைந்தேன்

## அதனாலேயே அவருக்கு எதிராக கடிதம் எழுதினேன்– மனம்திறந்தார் மைத்திரி

கொழும்பு, ஓக.31

புலனாய்வுப் பிரிவினரின் அறிக்கைக்கமைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 115 ஆசனங்கள் பெற்று கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாக தேர்தலுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டதனால் மகிந்த பிரமதர் ஆனால் தனக்கு அழுத்தம் பிரயோகிக்கப்படும் என்ற அச்சத்தினாலேயே அவருக்கு எதிராக கடிதம் ஒன்றை வெளியிட்டேன் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திர கட்சியின் கடந்த கூட்டத்தில் ஜனாதிபதி மைத் திரி பால சிறிசேன இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது தொடர்ந்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி:–

எங்கள் புலனாய்வுப் பிரிவு ஊடாக முன்னணிக்கு 115 ஆசனங்கள் கிடைக்கும் என நான் அறிந்து கொண்டேன். இதன் போது தான் முன்னணியின் முன்னாள் அரசியல்வாதிகள் சிலர் எனது பெயரைக் கூறி அரசியல் மேடைகளில் கூச்சலிட ஆரம்பித்தார்கள்.

சிலர் மகிந்தவை வெற்றி பெற செய்து பிரதமராக்கியதன் பின்னர் எனக்கு எதிராக செயற்படப் போவதனையும் பகிரங்கமாக கூற ஆரம்பித்து விட்டார்கள். எனக்கும் அச்சம் ஏற்பட்டு விட்டது.

இதன் போது தான் அவ்வாறான கடிதம் ஒன்றை வெளியிட்டேன்.

முன்னணி மற்றும் சுதந்திர கட்சி செயலாளர்களை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும், மகிந்தவுக்கு பாதகமான வகையில் உரையாற்றவும் நேரிட்டது. சில சந்தர்ப்பங்களில் முன்னனரியின் எதிர்கால பயணத்துக்கு இதன் மூலம் அழுத்தம் ஏற்படும் என்று எனக்கு தெரியும். – என்று தெரிவித்துள்ளார். (ற)

# மூன்றாம் தவணை இன்று ஆரம்பம்

கொழும்பு, ஓக.31

இந்த ஆண்டின் மூன்றாம் தவணைக்காக அனத்து தமிழ் மற்றும் சிங்கள மொழி மூல பாடசாலைகளும் இன்று மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

ஜீ.சீ.ஈ. உயர் தரம் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில பரீட்சையின் வினாத் தாள்கள் திருத்தும் பாடசாலைகள் தவிர்ந்த மற்ற அனைத்து பாடசாலைகளினதும் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் இன்று முதல் ஆரம்பிக்கப்பம் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜீ.சீ.ஈ. உயர்தர பரீட்சையின் விடைத் தாள்களை திருத்தும் பாடசாலைகள் வரும் 28ம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும். அத்துடன் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் பாடசாலைகள் வரும் 15ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தவிர ஜீ.சீ.ஈ. உயர்தர பரீட்சை வரும் 8ஆம் திகதி வரை நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# யோகாசன விளக்க அட்டை வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 31

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் யோகாசனம் பயின்ற 4 ஆம் அணியினர் யோகாசனப் பயிற்சி நெறியை நிறைவு செய்ததோடு, யோகாசன விளக்க அட்டையும் அண்மையில் வெளியிட்டுள்ளனர்.

சில வருடங்களாக நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இந்த யோகாசனப் பயிற்சி நெறி இடம்பெற்றுவருகிறது. அவ்வாறு பயின்ற 4 ஆம் அணியினரே அண்மையில் குறித்த பயிற்சி நெறியை நிறைவு செய்தனர். அந்த அணியில் ஆண்கள் பெண்கள் என சுமார் 50 இற்கும் மேற்பட்டோர் பயிற்சி பெற்றிருந்தனர். அவ்வாறு பயிற்சி பெற்ற நிறைவிலேயே யோகாசனம் பயின்றவர்களால் அளிக்கை செய்யப்பட்ட யோகாசன விளக்க அட்டை வெளியிடப்பட்டது.

அந்த யோகாசன விளக்க அட்டையை யோகாசன மூத்த போதனாசிரியர் வி.என்.சிவனேஸ்வர ராஜா வெளியிட்டு வைக்க யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ம.கருணாநிதி பெற்றுக் கொண்டார். அதில் நாவலர் மண்டபத்தில் யோகா பயிற்சியை வழங்கிவரும் – 4 ஆம் அணியினருக்கு யோகாசனம் கற்பித்த போதனாசிரியர் எஸ்.நதிபரன் உட்பட நாவலர்மணி மண்டபத்தைச் சேர்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

இது தவிர நாவலர் மண்டபத்தில் இலவசமாகப் பயிற்று விக்கப்படும் இந்த யோகாசனப் பயிற்சி நெறியின் 5 ஆம் அணியினருக்கான பயிற்சி நெறியும் எதிர்வரம் ஒக்ரோபர் 3 ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்து கலாசாரத் திணைக்களத்தின் கீழ் இவை இயங்கி வருகின்றது. (ற–4)

# அபிஷேக விஞ்ஞாபனம்

முள்ளியான் மண்டலாய்ப் பிள்ளையார் கோவிலின் வருடாந்த மணவாளக் கோல அபிஷேக விஞ்ஞாபனம் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது. இந்நிகழ்வில் அபிஷேகமும் ,விஷேட பூசையும் இடம்பெறும். (ற)

# உள்நாட்டுப் பொறிமுறைக்கு ஐ.நாவில் அனுமதி கிடைக்கும்

## வெளிவிவகார அமைச்சு நம்பிக்கை

கொழும்பு, ஓக.31

அடுத்த மாதம் ஆரம்பமாகும் ஜெனீவா மனித உரிமைகள் சபை அமர்வில், போர்க்குற்றங்கள் குறித்த உள்நாட்டு விசாரணை பொறிமுறைக்கு அனுமதி வழங்கப்படும் என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்காவின் உதவி ராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால், இலங்கையின் உள்நாட்டு பொறிமுறைக்கு ஆதரவாக அமெரிக்கா பிரேரணை ஒன்றை முன்வைக்கும் என்று தெரிவித்திருந்தார். இந்த பிரேரணை இலங்கை மீதான குற்றச்சாட்டுகள் குறித்த சர்வதேச அறிக்கை முன்வைக்கப்பட்டதன் பின்னர், சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதன்படி இலங்கை மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் உள்நாட்டு விசாரணைகளை மேற்கொள்வதற்கான அனுமதி வழங்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. எதிர்வரும் 14 ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் நடைபெறும் மனித உரிமைகள் மாநாட்டின் ஆரம்ப விவாதத்தில் இலங்கையின் சார் பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பங்கேற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# நிதி மோசடி விசாரணையைத் தவிர்க்க அமெரிக்காவுக்கு சென்றாரா சுசில்?

## கொழும்பு அரசியலில் பரபரப்பு

கொழும்பு, ஓக.31

மகிந்த ராஜபக்ச ஆட்சியின் போது இடம்பெற்ற முறைகேடுகள் குறித்து விசாரிக்கும், நிதிக்குற்ற விசாரணைப் பிரிவினால் விசாரணைக்கு அழைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்ட, முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த திடீரென அமெரிக்காவுக்குச் சென்றிருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில், பெற்றோலியக் கொள்வனவில் இடம்பெற்றதாக கூறப்படும் மில்லியன் கணக்கான ரூபா மோசடி குறித்து நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. அந்த வேளையில், சக்தி, மின்வலு அமைச்சராக இருந்தவர் சுசில் பிரேமஜெயந்த.

இந்த மோசடி குறித்த விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்தவும் விசாரணைக்கு அழைக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், அவர் கடந்த வியாழக்கிழமை திடீரென, அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் சென்றிருக்கிறார்.

கொழும்பில் அமைச்சர்கள் நியமனம் தொடர்பான இழுபறிகள் நடந்து கொண்டிருந்த சூழலில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் பதவியில் இருந்து விலகுவதாக அறிவித்து விட்டு அவர் அமெரிக்கா சென்றுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் வசிப்பதற்கான கிறீன் அட்டையை புதுப்பிப்பதற்காகவே, அவர் அங்கு சென்றுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பு மாவட்டத்தில் இருந்து நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட அவர், நாளை நாடாளுமன்றக் கூட்டத்தொடர் ஆரம்பிக்கவுள்ள நிலையில், அமெரிக்காவுக்குச் சென்றிருப்பது, அரசியல் வட்டாரங்களில் சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. (ற)

# பாரிசவாத நோயாளர்களுக்கென 50 கட்டில்களுடன் சிகிச்சை விடுதி

## இடம் தெரிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்.மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் பாரிசவாத நோயாளர்களுக்கு பயிற்சியுடன் கூடிய சிகிச்சை நிலையம் – விடுதி ஒன்றை அமைக்கும் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலை அதிகாரிகள் இடத்தைத் தெரிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த சிகிச்சை நிலையத்தை அமைப்பதற்கான இடத்தைத் தெரிவு செய்வதற்காக யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ள எட்டு வைத்திய அதிகாரிகள் கொண்ட குழு பொருத்தமான இடத்தைத் தேர்வு செய்ய பார்வையிட்டு வருகின்றனர், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை மற்றும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை ஆகியவற்றுக்குச் சென்று பார்வையிடப்பட்டது என்று போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக பாரிசவாத நோயால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்த வருவதையும் இந்த நோயால் பாதிக்கப்படும் நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் இட நெருக்கடிக்கு மத்தியில் சிகிச்சை பெற்று வருவதையும் இந்த நோயாளர்களுக்கென பயிற்சிகளுடன் கூடிய சிகிச்சை நிலையம் வேறு வைத்தியசாலையில் அமைக்க வேண்டுமெனவும் அண்மையில் செய்தி வெளியாகியிருந்தது.

இதனையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள் குழு யாழ். மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் பொருத்தமான இடத்தைச் தெரிவு செய்து சுகாதார அமைச்சிற்கு பரிந்துரை செய்யவுள்ளனர்.

அதேவேளை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையைப் பார்வையிட்ட குழுவினர் அங்கு பாரிசவாத நோயாளர்களுக்கான பயிற்சியுடன் கூடிய சிகிச்சை நிலையம் அமைக்க போதிய இடவசதி காணப்பட்டதை அடுத்து வைத்தியசாலை வளாகத்தில் சிகிச்சை நிலையம் அமைக்கக்கூடிய மூன்று இடங்களை தெரிவு செய்துசென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பாரிசவாத நோயால் பாதிக்கப்படும் ஆண் பெண் நோயாளர்களுக்கென 50 கட்டில்களைக் கொண்ட இரு மாடி விடுதிகள் அமைக்கலாமென பரிந்துரை செய்யவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. நீண்டகாலம் தங்க வைக்கப்படும் நோயாளர்களுக்கு உடற்பயிற்சி, பேச்சுத் திறன் பயிற்சி, இயன் மருத்துவம் மற்றும் சிறுதொழில் பயிற்சி போன்றவை வழங்கக்கூடிய வகையில் கட்டடங்கள் அமைக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–4,9)

# கடற்படைக் கப்பலை மீளப்பெற தமிழக மீனவர்கள் கோரிக்கை

சென்னை, ஓக.31

இந்தியாவால் இலங்கைக்கு ரோந்துப் கப்பல் வழங்கப்பட்டமைக்கு, இந்திய மீனவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், குறித்த கப்பலை இந்திய அரசு உடன் மீளப்பெறவேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்பட்டு வரும் நிலையில், இந்திய அரசானது மறுபுறம் இலங்கைக்கு இவ்வாறான உதவி [illegible] வேண்டுமென தமிழகத்தின் [illegible] படகு மீனவ சங்கங்களின் செயலாளர் சகாயம் தெரிவித்துள்ளார். (ற)

# இலவச கற்கைநெறி விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாணம், ஓக. 31

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையால் கிளிநொச்சியில் முதன்முதலாக இலவசமாக 3 கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பயிற்சி பெறவிரும்புவோர் பதிவுசெய்யுமாறு சபையின் உதவிப் பணிப்பாளர் இரா.அகிலன் கேட்டுள்ளார்.

கணிய அளவையியல், படவரைஞர், வெதுப்பக உற்பத்திகள் ஆகிய கற்கை நெறிகளே ஆரம்பிக்கப்படவுள்ளன. இந்தப் பயிற்சிகள் ஜி.ஐ.இசட் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெற இருக்கின்றன. கற்கை நெறிக்கான கட்டணங்கள் இலவசமாக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்பாகக் குறித்த விண்ணப்பங்களைப் பதிவு செய்ய வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, கற்க விரும்பும் துறை என்பனவற்றைக் குறுந்தகவல் ஊடாக 071 031 8985 அல்லது 071 131 6824 அல்லது 077 668 4302 அல்லது 077 446 9816 ஆகிய இலக்கங்களுக்கு அனுப்புவதன் மூலமாக அல்லது இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார நிலையம், 155 ஆம் கட்டை, கிளிநொச்சி என்ற தபால் முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ற–4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சத்துடன் பொழுதை கழிக்கும் வவு. விக்ஸ்காட்டு கிராம மக்கள்

வவுனியா, ஓக.31

வவுனியா விக்ஸ்காட்டு பகுதி மக்கள் தற்காலிக வீட்டுக்குள் அச்சத்துடன் வாழ்வை கழிக்க வேண்டியுள்ளது என்று கவலை வெளியிட்டுள்ளனர்.

வவுனியாவில் இருந்து 11 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இராசேந்திரம் குளத்தை அண்மித்த இந்தப் பிரதேசத்தில் போரால் இடம்பெயர்ந்து முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் வசித்து வந்த வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த 40 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டனர்.



கடந்த காலங்களில்இவர்களை வெளியேறுமாறு சிலர் மிரட்டியுள்ளர் என்றும் சில வீடுகளும் தீக்கிரையாக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் திருட்டு சம்பவங்களும் இந்தப் பிரதேசத்தில் இடம்பெற்றதையடுத்து 10 குடும்பங்கள் அங்கிருந்து வெளி யேறியுள்ளன. எனினும் 30 குடும்பங்கள் மிகுந்த சிரமத்தின் மத்தியில் அங்கு வசித்து வருகின்றன. இவர்களுக்கான வீட்டுத் திட்டங்கள் கடந்தகாலங்களில் திட்டமிட்டமுறையில் புறக் கணிக்கபட்டமையால் தற்காலிக வீடுகளிலேயே வசித்து வருகின் றனர்.

இந்தப் பிரதேசம் பாழடைந்த இடமாக காட்சியளிப்பதுடன் வீதிகள் எதுவும் போடப்படாத நிலையில் உள்ளது. மழைகாலங்களில் இந்தப் பிரதேசத்தில் பயணிப்பது கடினகாரியமாகவே உள்ளது. இதே வேளை கோடைகாலங்களில் நீர் பெறுவதற்கும் இந்த மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். மலசல கூட வசதியற்று வாழும் இந்த மக்கள் வீடுகளுக்கு அருகில் பாம்புகளும் நடமாடுவதால் மிகுந்த அச்சத்துடன் வாழ்வை தினமும் கழித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-402)

# இஞ்சி செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஆலோசனை

அச்சுவேலி, ஓக.31

யாழ்ப்பாணத்தில் இஞ்சிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகள் மற்றும் இஞ்சிச் செய்கையாளர்களுக்கு யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களம் உதவிகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கவுள்ளது. இஞ்சிச் செய்கையாளர் மற்றும் விவசாயிகள் திருநெல்வேலியில் உள்ள விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் இஞ்சிப்பயிர்ச் செய்கையில் பலர் ஈடுபட முன் வந்துள்ளனர். இவர்கள் ஆர்வமேலீட்டினால் இலட்சக் கணக்கில் பணத்தை செலுத்துவதோடு, உள்ளூர் முகவர்களிடம் சிக்கி ஏமாற்றம் அடைவதாகவும் விவசாயத் திணைக்களத்துக்கு முறையீடு செய்யப்பட்டுள்ளது. இதனை விவசாயப் போதனாசிரியர்களின் அறிக்கைகளும் உறுதி செய்துள்ளன. இந்தநிலையில் விவசாயத் திணைக்களம் இஞ்சிப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு திணைக்கள ரீதியில் உதவுவதற்கு முன் வந்துள்ளது. இது தொடர்பாக யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் இதுகுறித்துத் தெரிவித்ததாவது–

இஞ்சிப் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மற்றும் இஞ்சி செய்கையாளருக்கு குறைந்த முதலீட்டுடன் இஞ்சிச் செய்கை தொடர்பான செயற்பாடுகளை மேற்கொள்ளுவதற்கு விவசாயத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ளது. அத்துடன், பயிர்ச்செய்கை தொடர்பான ஆலோசனை வழிகாட்டல்களையும் இஞ்சிப் பயிர்ச் செய்கை தொடர்பான துறைசார் நிபுணர்கள் மூலம் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். இஞ்சிப் பயிர்ச்செய்கையில் ஈடுபட விரும்பும் விவசாயிகள் மற்றும் இஞ்சிப் பயிர்ச்செய்கையாளர்கள் அலுவலக நேரத்தில் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளலாம். – என்றார்.

(ற-[illegible])

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் எந்த அரசும் இதயசுத்தியுடன் இல்லை

## அருட்பணி. எழில் இராஜேந்திரம் தெரிவிப்பு

மன்னார், ஓக.31

போரின் போதும், ஆயுத மௌனிப்பின் பின்னரும், காணாமல் ஆக்கப்படுதல் கலாசாரம் தொடர்வதற்கான ஆதாரங்கள் வெளி வந்து கொண்டே இருக்கின்றன. மாற்றத்தின் பின்னும் நாங்கள் மாறும் என்று நினைத்தவைகள் மாறவில்லை. இலங்கையின் எந்த அரசும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் இதயசுத்தியுடன் இயங்கவில்லை. இவ்வாறு தெரிவித்தார் தமிழ் சிவில் சமூக அமைப்பின் இணைப்போச்சாளர் அருட்பணி. எழில் இராஜேந்திரம்.

காணாமல் ஆக்கப்படுதலுக்கு எதிரான சர்வதேசதினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. அதை முன்னிட்டு மன்னாரில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

நீதிக்கான பயணத்தில் அத்தியாயங்கள் நீண்டு கொண்டே போகின்றன. காணாமல் ஆக்கப்படுதல் இலங்கை அரசியல் வரலாற்றில் கிளர்ச்சி எதிர்ப்பின் ஆயுதமாக மிக நேர்த்தியாக திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டது.

வயது பால் வித்தியாசமின்றி தமிழன் அல்லது தமிழிச்சி என்ற ஒரே ஒரு காரணத்துக்காக கடத்தப்பட்டவர்களின் கதி தெரியாதுள்ளது.

ஐ.நாவும் ஏனைய நாடுகளும், எங்களின் பிள்ளைகளை எங்களுக்குத் தருவார்கள் என்ற நம்பிக்கை தற்போது கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிய கதையாக மாறியுள்ளது.

சர்வதேச விசாரணை என்று ஆரம்பித்து இன்று உள்ளக பொறிமுறை என வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியது போன்றே நிகழ்வுகள் நடக்கின்றன.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பில் எந்தவொரு அரசும் இன்று வரை இதயசுத்தியுடன் செயற்பட்டதாக வரலாறு இல்லை. எல்லா அரசுகளும் குற்றவாளிகளை பாதுகாப்பதில் தீவிரத்தன்மையைக் கொண்டிருந்தன. ஆரம்பத்தில் இருந்தே காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினைக்கான ஒரே தீர்வாக சர்வதேச விசாரணை அவசியமென வலியுறுத்திக் கூறியுள்ளோம். இன்று ஆட்சி பீடமேறியிருக்கும் சிறிசேன அரசிடமும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கான அரசியல் விருப்பு இருப்பதாக தெரியவில்லை.

அதற்கான உதாரணங்களாக போர்க்குற்றவாளிகளாக வர்ணிக்கப்பட்ட ஜெனரல் சரத்பொன்சேகா பீல்ட் மார்சல் தரத்துக்கு உயர்த்தப்பட்டார். மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் கலாட்படையின் பணியாளர்களுக்கு பிரதம அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்கனவே ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவர்களுக்குரிய நியமனங்கள் தண்டனைகளில் இருந்து குற்றவாளிகள் தப்புவதற்கான கலாசாரம் இலங்கையில் இன்னமும் செத்து விடவில்லை என்பதற்கான அறி குறியாகவே தென்படுகின்றது.

இதற்கு பின்னால் உள்ள இலங்கை அரச கட்டமைப்புக்கு வலுவூட்டும் சிங்கள பௌத்த பேரினவாத கருத்தியல் ஒரு போதும் சிங்கள நாட்டையும், மக்களையும், பௌத்தத்தையும், பாதுகாத்த சிங்கள பேரினவாத விடுதலையின் கதாநாயகர்களாக கொண்டாடப்படும் படைக் கட்டமைப்பையும், அது சார்ந்தவர்களையும், காட்டிக்கொடுத்து இனப்படுகொலை சார்ந்து குற்றவழக்கு தொடர அனுமதிக்கப் போவதில்லை என்பது வெள்ளிடை மலை.

சிங்கள பேரினவாத அரசால் போர் வீரர்களாக முன்னிலைப்படுத்தப்பட்டவர்கள் ஒரே இரவில் துரோகிகளாக்கப்படுவார்கள் அல்லது குற்றவாளிகளாக்கப்படுவார்கள் என்பது சிறு பிள்ளை நிலாவை கையில் பிடித்து தரும்படி அழுவதற்கு ஒப்பாகும். ஆயுத மௌனிப்பின் பின்னர் எல்லாருடைய இனத்துவ அடையாளங்கள் களையப்பட்டு ஒரு மித்த இலங்கை அல்லது இலங்கையன் என்ற அடையாளத்துக்குள் வலிந்து திணிக்கப்பட்டோம்.

பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு மேலும் மேலும் வலுவிழப்பு செய்யப்பட்டு அழுவதற்கும் அனுமதி பெற்று அழ வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம். பாதிக்கப்பட்டவர்களுக்கான உரிமையும் மறுக்கப்பட்டிருக்கின்றது.

மேற்குறிப்பிட்ட காரணிகள் உள்ளக பொறிமுறை மூலம் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை பெறுவது என்பது சாத்தியமில்லை என்பதைக் கூறி நிற்கின்றது.

இவ்வரலாற்று திருப்பு முனையில் காணாமல் ஆக்கப்பட்டோர்களுக்கான நீதி வேண்டிய பயணத்தில் புதிய தந்திரோபாயங்களை வழி வகுத்து போராட்டத்தை இன்னும் வீரியமாக்க வேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை வெறுமனே மனித உரிமை சார்ந்த பிரச்சினை அல்ல. இப்பிரச்சினை உதிரியானதாக மட்டும் நோக்கப்பட முடியாது.

இனப்படுகொலை என்ற அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தில் இது ஒரு பகுதி மட்டுமே. ஆனாலும், தமிழின இனப்படுகொலையில் இதன் வகிபாகம் காத்திரமானது. ஏனெனில் தமிழன் அல்லது தமிழிச்சி என்ற ஒரு இனத்துவ அடையாளத்தை தக்க வைத்ததனால் மிகத் திட்டமிடப்பட்டு நோக்கம் தெளிவாக்கப்பட்டு அரச கட்டமைப்பின் உதவியோடு காணாமல் ஆக்கப்படுதல் அரங்கேற்றப்பட்டது. குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் படி அல்லது கிடைத்த உத்தரவின் பேரில் நன்கு திட்டமிடப்பட்டு தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

இது மானிடகுலத்துக்கு எதிரான குற்றம் மட்டுமல்ல இனப்படுகொலையும் கூட. காணாமல் ஆக்கப்படுதல் எனும் குற்றம் தமிழர்களைப் பொறுத்தவரையில் இனப்படுகொலை என்ற சிங்கள பௌத்த அரசின் பெரும் அரசியல் நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு பகுதி என்பது தெளிவுபடுத்தப்பட வேண் டிய வரலாற்று தேவை எழுந்துள் ளது.

எங்களுடைய பிள்ளைகளுக்கு என்ன நடந்து என்பதை தெரிந்து கொள்வதற்கு எங்களுக்கு உரிமை இருக்கின்றது. மனித உரிமை சட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தலைவிதியை தெரிந்து கொள்வதற்கு இட முண்டு. இது சட்ட ரீதியில் அணுகப்பட வேண்டும். இது வரைக்கு உதிரிகளாக சட்டத்தை கையில் எடுத்த நாம் இனி கூட்டாக சர்வதேச சட்ட விதிகளுக்கு அமைவாக இப்பிரச்சினையை அணுக வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதற்காக ஆர்ஜென்ரினாவில் உள்ள காணாமல் போனவர்களின் தாய்மாரால் சட்டரீதியாக இப்பிரச்சினையை அணுகுவதற்கு சட்டவாளர்கள் அடங்கிய குழு வொன்றை உருவாக்கி இப்பிரச்சினை அணுகப்பட்டது. அதேபோல் தான் தமிழர் தரப்பிலும், இந்தப் பிரச்சினை அணுகப்பட வேண்டும். அதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டுள்ளது.

இதற்கு ஐ.நா, இன்ர அமெரிக்கன் கோட், ஜரோப்பிய நீதிமன்று இல் கூறப்பட்டவைகளை அடிப்படையாக கொண்டு எங்களுடைய கோரிக்கைகளை முன்வைக்கலாம்.

அடுத்து அரசு இறப்பு அத்தாட்சி பத்திரம் தருவதை . எதிர்த்து காணாமல் ஆக்கப்பட்டதால் நபர் இல்லை என்ற பத்திரம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது எதிர்காலத்தில் றெப்பரேசன் தொடர்பான கோரிக்கைகளுக்கு மிகவும் உதவியாக உள்ளதோடு காணாமல் ஆக்கப்பட்டோர்களின் எண்ணிக்கை தொடர்பில் எந்த மாற்றத்தையும் கொணராமல் அரசின் பொறுப்புக்கூறலை மிக ஆணித்தரமாக வலியுறுத்தும்.

இறுதியாக காணாமல் போனோருக்கான காட்சியகம் அமைக்கப்பட்டு அங்கு அவர்களுடைய புகைப்படத்துடனான முழு விவரங்களும் காட்சிப்படுத்தப்படும் போது குறிப்பாக குற்றவாளிகள் அடங்கிய பட்டியல்கள் வெளித் தெரியப்படுத்தப்படும் போது அரச கட்டமைப்பும் அழுத்தங்களுக்குள்ளாகின்ற தன்மை ஏற்படுத்தப்படுகின்றது. இதன் மூலம் உண்மைக்கான தேடலும், நீதி வேண்டிய விடுதலைக்கான பயணமும் விரைவு படுத்தப்படுகின்றது.

எங்களுக்கான சொல்லாடல் கலாசாரத்தை எங்களுக்காக இன்னொருவர் செய்யாமல் நாங்களே கட்டமைக்கின்ற சூழ்நிலை அவசியம். இதற்கு நாங்களே எங்கள் அனுபவங்களை ஆவணமாக்குகின்ற முயற்சி முடுக்கிவிடப்பட வேண்டும்.– என்றார். (ற-56,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசின் நல்லாட்சியில் நாடு முன்னேற்றம் அடையும்

### ஜயவிக்கிரம பெரேரா நம்பிக்கை



கொழும்பு, ஓக.31
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அமைக்கப்படவுள்ள தேசிய அரசின் நல்லாட்சியில் நாடு முன்னேற்றம் அடையும் என காமினி ஜயவிக்கிரம பெரேரா நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கியுள்ள விசேட செவ்வி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த நல்லாட்சி அரசில் பல்வேறு காரணங்களால் மகிந்த ராஜபக்ச தரப்பினரின் ஊழல்கள் குறித்து நட வடிக்கை எடுக்கவோ, அவர்களைத் தண்டிக்கவோ எங்களால் முடியாது போனது.

அதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை வெற்றி கிட்டவில்லை. எனினும் நாங்கள் பெற்ற வெற்றி நியாயமான தேர் தலின் மூலம் பெற்றுக் கொண்ட வெற்றி யாகும்.

இதுகால வரையான தேர்தல் வரலாற்றைப் போன்றே இம்முறையும் மகிந்த தரப்பினர் தேர்தல் முறை கேடுகளில் ஈடுபட்டனர். குருநாகல் முழுவதும் பல்வேறு அன்பளிப்புகள் மற்றும் முறைகேடான விடயங்களின் ஊடாக மகிந்தவின் வெற்றிக்கு முயற் சிகள் மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் நாடு முழுவதும் இனவாதப் பரப்புரை ஊடாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றியைத் தடுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இவை அனைத்தையும் தாண்டி ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. நாட்டுமக்கள் எமது கட்சி மீது வைத்துள்ள நம்பிக்கையே அதன் காரணமாகும்.

எதிர்வரும் காலங்களில் முன்னெடுக்கப்படவுள்ள ரணில்-மைத்திரி தலைமையிலான நல்லாட்சி அரசில் நாடு முன்னேறும். பொதுமக்களின் எதிர்பார்ப்புகள் பூர்த்தி செய்யப்பட்டு, வாழ்க் கைத் தரமும் உயர்த்தப்படும் - என்றார். (ற)

## சு.க. தீர்மானங்களை மதிக்காத உறுப்பினர்கள் மீது நடவடிக்கை

### அந்தக் கட்சியின் செயலாளர் துமிந்த எச்சரிக்கை

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள், கட்சியின் தீர்மானங்களுக்கு உடன்படாது போனால் கடுமையான ஒழுக்க நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப் படுவார்கள் என்று எச்சரிக்கப்பட்டுள் ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் துமிந்த திஸாநாயக்க இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

கட்சியின் தீர்மானங்களுக்கு உறுப்பினர்கள் உடன்பட வேண்டும். இல்லையேல் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பும் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் தலைமையிலேயே இயங்குகிறது. அதற்கென்று தனியான தலைவர் இல்லை. இந்த நிலையில் இந்தக் கூட்டமைப்புக்குள் இனவாதக் கட்சிகளின் பங்களிப்பை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் துமிந்த திஸா நாயக்க வலியுறுத்தியுள்ளார். (ற)

## கூட்டுக் களவாணிகள் சேர்ந்தே தேசிய அரசு

### சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஓக.31
தேசிய அரசு என்ற போர்வையில் தற்போது கூட்டுக்களவாணிகளின் அரசு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணி குற்றஞ் சுமத்தியுள்ளது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தல் தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஹந்துன்நெத்தி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் இரண்டு அணிகளுக்கிடையில் நடைபெற்றது அரசியல் மோதல். ஒரு அணி மகிந்தவின் வெற்றிக்காகப் பாடு பட்டது. மற்றைய அணி அவரைத் தோற்கடிக்க பாடுபட்டது. இதற்கிடையில் பொதுமக்களுக்கு எங்கள் மீதான கவனம் குறைந்து விட்டது.

அதன் காரணமாகவே நாங்கள் எதிர்பார்த்த பயன் கிட்டவில்லை.

எனினும் முன்னைய நாடாளுமன்றத்தில் நாங்கள் மூன்று பேர் மட்டுமே நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தோம். தற்போதைய நாடாளு மன்றத்தில் ஆறு பேர் வெற்றிபெற்றுள்ளோம். அத்துடன் எங்கள் வாக்குகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதுவே நாங்கள் பெற்றுக் கொண்ட வெற்றி தான்.

நாடாளுமன்றத் தேர்தல் வரை எதிரும் புதிருமாக இருந்து வாக்கு கேட்டவர்கள், தற்போது இணைந்து தேசிய அரசு அமைக்கப் போவதாக கூறி வருகின்றார்கள். உண்மையில் இது தேசிய அரசு இல்லை.

தங்கள் வரப்பிரசாதங்கள் மற்றும் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள களவாணிகள் ஒன்று சேர்ந்து அமைத்துக் கொண்டுள்ள கூட்டுக் களவாணிகளின் அரசே இது- என்றார். (ற)

## எதிர்க்கட்சித் தலைவரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை

### விமல் வீரவன்ஸ கூறுகின்றார்

கொழும்பு, ஓக.31
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிர்க்கட்சி தலைவரை தெரிவு செய்யும் அதிகாரம் இல்லை என்று விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு கூட்டத்தின்போது எதிர்க்கட்சி தலைவரை நியமிக்கும் பொறுப்பு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கப்பட்டிருந்தது. அத்துடன், சபாநாயகரை தெரிவு செய்யும் பொறுப்பும் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில் இதுதொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே விமல் வீரவன்ஸ இவ்வாறு தெரிவித்துள்ளார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எதிர்க்கட்சி தலைவரை தெரிவு செய்ய வேண்டியது ஜனாதிபதி அல்ல. நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பெரும்பான்மை விருப்பத்துடனேயே எதிர்க்கட்சித் தலைவர் நிய மிக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதியால் எதிர்க்கட்சி தலைவர் நியமிக்கப்படுவாரானால் நாட்டின் கட்சி ஜனநாயகம் சீர்கெட்டுள்ளதை அது எடுத்துக்காட்டும்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்க வேண்டும் என வாதிடும் மக்கள் விடுதலை முன்னணி தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் – என்றார்.

அதேவேளை, எதிர்க்கட்சி தலைவர் பதவியை தமக்கு வழங்குமாறு கோரி [illegible] என்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடந்த சனிக்கிழமை வெளியிட்டிருந்தது.(ற)



## 13 ஆம் திருவிழா

### முறையோ இது கூறும் நல்லையில் உறைவாசா!

முன்னில் எழு கந்தா உனதடி
என்றும் தொழுகின்றோம் அவனியில்
நின்றே தமிழ்க் குடியர் அனுதினம் தவறாமல்

கண்ணே உயர் மன்னே தமிழரின்
பொன்னே விடி பொழுதே வேலுடை
வண்ணே அருள் புரிவாய் நொடியிலும் சுணங்காதே

கொல்லும் சமர் தனிலே உனதவர்
அல்லும் பகல் துயரில் சூழ்ந்தது
சொல்லும் தரமன்று வேலனே புரிவாய் - நீ

அகிலம் இதைக் கண்டே இன்னமும்
மௌனம் தனைக் கொண்டே சுழல்வது
என்னே முறை பகர்வாய் வேலனே சரிதானோ

தேவர் குறை தீர்த்தாய் அசுரரின்
கர்வம் தனைச் சாய்த்தாய் பொடி பட
மேவும் உயர் வேலால் புகழ்தனைப் பெற்றாயே!

நாளும் உனை வேண்டும் தமிழரின்
நீளும் குறை இனியும் நீண்டிடல்
முறையோ இதைக் கூறும் நல்லையில் உறைவாசா

*சி. பிரணவி*

### வெற்றிவேல் பெருமான் வீதி உலா வருகின்றார்

வான் உயர்ந்த கோபுரங்கள்
நாற்றிசைகளிலும் நல்லூர்க்
கந்தனின் புகழ் பரப்ப
எட்டுத் திசைகளிலும் இருந்து வரும்
மக்கள் கூட்டங்கள் அரோஹரா
என கோஷம் எழுப்ப
அந்தணர்கள் மறை ஓத
அடியார்கள் பஜனை பாட
மயூர வாகனத்தில் மகிமை வாய்ந்த
வெற்றிவேற் பெருமான் வள்ளி
தெய்வானை அம்மனுடன்
சந்திரனின் தண்ணொளியில்
சகல செல்வங்களும் தருவதற்கு
வீதி உலா வருகின்றார்

*வ. பத்மவதனி*

### நல்லை நகர் நாயகனே

நல்லை நகர் நாயகனே
நாயகிகள் இருவருடனும்
நர்த்தனம் ஆடி வரும் உன்து
காட்சிதனைக் காண கண்கோடி வேண்டும் வேலவா
சித்தர்களும் யோகிகளும் ஞானிகளும்
நடமாடிய உனது புனித திருவீதியிலே
உந்தனது மகோற்சவத்தைக் காணும் போது
எனது மனமும் தூய்மை பெறுகிறதே நல்லைக்கந்தா

*தே. சுதன்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** தியாக மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், நல்ல வருமானம் கிடைக்கும். சுப காரியத்தில் இருந்த தடையனைத்தும் விலகும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர்.

**இடபம்:** இலட்சிய நோக்கத்துடன் பணியாற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில், இலாபம் பன்மடங்கு உயரும். குடும்பத்தில், சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள். பணியாளர்களுக்கு சம்பள உயர்வு கிடைக்கும்.

**மிதுனம்:** நண்பருடன் கருத்து வேறுபாடு உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பணவரவுக்கேற்ப, வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவீர்கள்.

**கடகம்:** அன்றாடப் பணிகளில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். முக்கிய தேவைக்காக, கடன் பெறும் சூழ்நிலை உருவாகும். கண்களின் பாதுகாப்பில் தகுந்த கவனம் தேவை.

**சிங்கம்:** குடும்பத்தினரின் கருத்துக்கு மதிப்பு அளிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், சீரான முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள், பணிச் சுமையில் இருந்து விடுபடுவர். புதிய வாகனம் வாங்கத் திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** திட்டமிட்டுச் செயற்பட்டு, வெற்றி காண்பீர்கள். சகோதரர் வழியில், இயன்ற உதவிகளைச் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் அதிகரிக்கும். பெண்கள், மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** ஆரோக்கிய விடயத்தில் கவனம் செலுத்துவீர்கள். குடும்பச் செலவுக்காக, கடன் வாங்க நேரிடும். தொழில், வியாபாரத்தில், உழைப்புக்கேற்ப வருமானம் கிடைக்கும். மாணவர்கள், பாதுகாப்பு குறைந்த இடத்துக்குச் செல்ல வேண்டாம்.

**விருச்சிகம்:** உறவினர்கள் வகையால், சிரமத்தைச் சந்திக்கலாம். பிள்ளைகள் வழியில், சுபச் செலவு உண்டாகும். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும்.

**தனுசு:** முக்கியமான விடயத்தில், சுமுகத் தீர்வு ஏற்படும். அன்றாடப் பணிகளில் உற்சாகத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். புதிதாக சொத்து வாங்கும் எண்ணம் கைகூடும்.

**மகரம்:** சூழ்நிலை உணர்ந்து சாதுரியமாகச் செயற்படுவீர்கள். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரத்தில், போட்டி குறைந்து, இலாபம் கூடும். உணவு, உடை விடயத்தில், ஆர்வம் அதிகரிக்கும்.

**கும்பம்:** சிறு முயற்சியிலும், பெரிய நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில், வருமானம் படிப்படியாக உயரும். வீட்டு உபயோகப் பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். அரசியல்வாதிகளுக்கு, செல்வாக்கு மிக்கப் பதவி கிடைக்கும்.

**மீனம்:** குடும்பப் பிரச்சினையை, பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். சுய கௌரவத்துக்காக ஆடம்பரச் செலவு செய்ய நேரிடும். வாகனப் பயணத்தின் மூலம், இனிய அனுபவம் உண்டாகும்.

## நம்பினால் நம்புங்கள் கையில் காது உள்ள வினோத மனிதன்



ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த 45 வயது கலைஞர் ஸ்டெலார்க். அவரது இடது கையில் மூன்றாவதாக ஒரு காது வளர்ந்து, ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஒரு பரிசோதனை முயற்சிக்காக, இடது கையில் ஒரு காதை பிளாஸ்ரிக் சிகிச்சை மூலம் இணைத்துக்கொண்டார்.

6 மாதங்களில் அந்தக் காது, ஸ்டெலார்க் உடலுடன் இணைந்து விட்டது. அதாவது அவரது சொந்த உறுப்புகளைப் போலவே இந்த அந்நிய உறுப்பையும் அவரது உடல் ஏற்றுக்கொண்டுவிட்டது. இவருக்குச் சிறிய வயதில் இருந்தே உடலியல், தொழில்நுட்பம் போன்றவற்றில் ஆர்வம் அதிகம். தன்னுடைய உடலில் பல இடங்களில் பரிசோதனை முயற்சிகளைச் செய்து வருகிறார். நுரையீரல், வயிறு போன்றவற்றில் கமராக்களைப் பொருத்தியிருக்கிறார். இவரது ஸ்டெலார்க் பரிசோதனைகளுக்கு நிறையப் பேர் நிதி அளித்து வருகிறார்கள்.



## 'எ' தரச் சான்றிதழ் பெற்ற த்ரிசா இல்லனா நயன்தாரா

தமிழ் சினிமாவில் முன்னணி இசையமைப்பாளராக இருந்த ஜி.வி. பிரகாஷ் ஹீரோவாக நடித்த டார்லிங் படத்தின் வெற்றியைத் தொடர்ந்து அவரது நடிப்பில் விரைவில் வெளியாகவுள்ள படம் த்ரிசா இல்லனா நயன்தாரா. இந்தப்படத்தின் பாடல்கள் எதிர்பார்த்த அளவுக்கு சூப்பர் ஹிட்டாகவில்லை என்றாலும் ஓரளவு வரவேற்பை பெற்றுள்ளன. அதில் இடம் பெற்றுள்ள பிட்டுப் படம் 'டீ' என்ற பாடல் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. பிட்டுப் படம் என்பது ஆபாசப்படத்தைக் குறிக்கும் வார்த்தை என்பதால், ஒட்டுமொத்த பெண்களையும் இந்தப்பாடல் வரி ஆபாசமானவர்களாக சித்தரிப்பதாக ஆவேசம் அடைந்துள்ளனர் பெண்கள். இந்த நிலையில் படம் ரிலீசுக்கத் தயாராகியுள்ள நிலையில், படம் தணிக்கைக்குழுவுக்குஅனுப்பப்பட்டது. படத்தை பார்த்த தணிக்கைக் குழுவினர், படத்துக்கு 'எ' தரச்சான்றிதழ் அளித்துள்ளனர். இந்தப் படம், எதிர் வரும் செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.





நல்லவன் என்ற பெயரை
மட்டும் எடுத்து விடாதே பிறகு
ஆயுள் முழுவதும் நல்லவனாக
நடிக்க வேண்டும்...
கெட்டவன் என்ற பெயரோடு
வாழ்ந்துவிடு ....
நல்லவனாக ....

காதல் என்பதை சிக்ஸ்பேக்
போலப் பராமரிக்க வேண்டும்..

நட்பு என்பது தொப்பை போல...
அதுவா வரும்,
போகவே போகாது..!




சுவாமி பார்த்தா நந்தாவின் தத்துவம்

"போதைவஸ்துக்கு addict
ஆனவன் குணப்படுத்திடலாம்
ஆனா
facebook க்கு addict ஆனவனை
குணப்படுத்தவே முடியாது"
-இது பார்த்தா மேல சத்தியம்

-You can cure a person who is addicted to drugs;
but you can't cure the person who is addicted to facebook.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதுர விக்ரமநாயக்கவின் பதவி பறிபோகும் ஆபத்து?


கொழும்பு, ஓக.31
விதுர விக்ரமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமை பறி போகும் நிலை ஏற்பட்டுள்ளது.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஹொரணை தொகுதி அமைப்பாளராக விதுர தற்போது பதவி வகித்து வருகின்றார். எனினும் தற்போது அவருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது. கட்சியின் தீர்மானங்களுக்கு முரணாக செயற்படுதல், கட்சியின் இணக்கப்பாட்டை விமர்சனம் செய்து ஊடகங்களில் கருத்து வெளியிடுதல் ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.
கட்சியின் ஒழுக்க விதிகளை மீறிச் செயற்பட்ட சுதந்திரக் கட்சியின் பத்து உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. அதில் முதலாவதாக விதுர விக்ரமநாயக்கவிற்கு எதிராக விசாரணை நடத்தப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.
தேசிய அரசில் இணைந்து கொள்ள சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானம் எடுத்த போது அதன் உள்ளும் வெளியிலும் விதுர விக்ரமநாயக்க கடுமையாக எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.
ஒழுக்காற்று விசாரணைகளின் போது குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் விதுர விக்ரமநாயக்கவின் நாடாளுமன்ற உறுப்புரிமையை ரத்து செய்ய கட்சி தீர்மானித்துள்ளது.
அவ்வாறு ரத்து செய்யப்பட்டால் ஒழுக்க விதிகளை மீறியமைக்காக நாடாளுமன்ற உறுப்புரிமையை இழந்த முதலாவது சுதந்திரக் கட்சி உறுப்பினராக விதுர விக்ரமநாயக்க வரலாற்றில் இடம்பிடிப்பார். (ற)

## எரிபொருள் நிலைய திறப்பு விழா

அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத் திறப்பு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இ.சந்திரன் தலைமையில் நடைபெறும் திறப்பு விழாவில் விருந்தினர்களாக பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய பதில் முகாமையாளர் எஸ்.சிவதரன், மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் சு.கணேசு, பெற்றோலிய கூட்டுத்தாபன பொறியியலாளர் ஆர்.சிவசங்கர், பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை தொகைச்சாலை அதிகாரி கோ.கணேஸ்வரன், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெயமேரி கொன்சி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-11)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

யாழ். மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவாக ,பிரபல பாடசாலைகளுக்கு இடையில் உதை பந்தாட்ட சுற்றுப்போட்டி, எதிர் வரும் செப்ரெம்பர் 1ஆம் , 2ஆம் , 3ஆம் திகதிகளில்,யாழ் மத் திய கல்லூரி மைதானத்தில் நடை பெற வுள்ளது என கல்லூரி அதிபர் எஸ் . கே. எழில்வேந்தன் அறிவித்துள்ளார். போட்டியில் 1ஆம் ,2ஆம் , 3ஆம் இடங்களை பெற்றவர்களுக்கு பணப் பரிசில் வழங்கப்படவுள்ளது. பிரதம விருந்தினராக பழைய மாணவர் கலாநிதி அகிலன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ரி4)



*கண்டி, ஸ்ரீ தலதா மாளிகையின் எசல பெரஹரா இறுதி நாளான நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு சுபவேளையில் ரந்தோலி பெரஹரா வீதி வலம் வந்தது. ரந்தோலி பெரஹராவை பார்வையிட அதிகமான மக்கள் கண்டி நகருக்கு வருகை தந்தனர்.*

## சுகாதார தொழிலாளரை கௌரவிக்கும் நிகழ்வு

### மட்டக்களப்பில் நடைபெற்றது



மட்டக்களப்பு, ஓக.31
மட்டக்களப்பு மாநகர சபையில் கடமையாற்றும் சுகாதார தொழிலாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.
மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் மட்டக்களப்பு பாடுமீன் லயன்ஸ் கழக தலைவர் பி.சடச்சரராஜா தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன், மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எம்.உதய குமார்,மண்முனை வடக்கு பிரதேச செயலளார் எஸ். தவராஜா, மட்டக் களப்பு மாநகர சபை பிரதி உதவி ஆணையாளர் எஸ்.தனஞ்சயன், லயன் கலாநிதி செல்வேந்திரன், வைத்திய கலாநிதி டாக்டர் ஆர். நவ லோஜிதன் உட் படமுக்கியஸ் கள் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.
இதன் போது மட்டக்களப்பு மாநகர சபையில் கட மையாற்றும் 130 சுகாதார தொழி லாளர்களுக்கு நினைவுச் சின்னம் மற்றும் அன்பளிப்பு பொருள் என்பன வழங்கப்பட்டு கௌரவிக்கப் பட்டனர்.
அத்தோடு பிரமுகர்களும் கௌரவிக்கப்பட்டதுடன் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிரிதரன், மற்றும் மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எம்.உதயகுமார், மண்முனை வடக்கு பிரதேச செயலளார் எஸ். தவராஜா ஆகியோர் பொன்னாடை போர்த்தி பாடுமீன் லயன்ஸ் கழகத்தால் கௌரவிக்கப்பட்டனர்.(ற)

## கிழக்கு மாகாணத்தின் வீதிகள் சரியான முறையில் இல்லை

### மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் தெரிவிப்பு

திருகோணமலை, ஓக.31
கிழக்கு மாகாணத்தின் வீதிகள் இன்னமும் சரியான முறையில் அமைக்கப்படவில்லை என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் தெரிவித்தார்.
மட்டக்களப்பு மாநகர சபையினால் நிர்மாணிக்கப்பட்ட சுற்றுலா தகவல் மையம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது. அங்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நசீர் அஹமட் மற்றும் கொய்க்கா நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிப் பணிப்பாளர் ஹான் ஏய் ஜின் ஆகியோர் சுற்றுலா தகவல் மையத்தைத் திறந்து வைத்தனர்.
மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.பி.எஸ்.எம்.சார்ள்ஸ் சுற்றுலா தகவல் நிலை யத்தின் ஒரு பிரிவான உடற்பயிற்சிக் கூடத்தை திறந்து வைத்தார். அத்தோடு கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களங்களின் ஆணையாளர் எம்.வை.சலீம் துவிச்சக்கர வண்டிகள் கூடத்தை திறந்து வைத்தார். சுற்றுலா புகையிரத வண்டியை ஆசிய பவுண்டேசன் நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி டினேஸா டி சில்வா விக்கிரமநாயக்கா ஆரம்பித்து வைத்தார்.
மட்டக்களப்பின் மரபுரிமைமிக்க இடங்கள் அடங்கிய புகைப்படக் கண்காட்சிக் கூடத்தை ஆசிய பவுண்டேசன் பிரதிக் குழுத் தலைவர் ஏ.சுபாகரன் மற்றும் முதலமைச்சரின் செயலாளர்; யு.எல்.எம். அஸீஸ் ஆகியோர் திறந்து வைத்தனர். (ற)

## மருத்துவபீட மாணவன் என்று பொய் கூறி ஏமாற்றியவர் கைது

கொழும்பு, ஓக.31
தன்னை மருத்துவ பீட மாணவன் என்ற அறிமுகப்படுத்தி பகுதி நேர வகுப்புக்களை நடத்திய நபர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். கண்டி அருப்பல பிரதேசத்தை சேர்ந்த 23 வயதான இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
குறித்த நபர் கம்பளை பிரதேசத்தில் பகுதி நேர வகுப்புக்களை நடத்தி வந்துள்ளமை தெரியவந்துள்ளது. தன்னை பேராதனை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவன் என அறிமுகம் செய்து கொண்டு, பேராதனை பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கண்காட்சி ஒன்றில் போலி அடையாள அட்டையை அணிந்து அங்கு வரும் மக்களை கையாண்டு கொண்டிருந்த போதே இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கம்பளை பிரதேசத்தில் பகுதி நேர வகுப்புகளை நடத்தி வந்துள்ளது டன், பேராதனை பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் பயின்று வருவதாக தன்னிடம் பயிலும் மாணவர்களிடம் சந்தேக நபர் தெரிவித்துள்ளார். இவர் தன்னிடம் கற்க வரும் மாணவர்களிடம் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் கண்காட் சியை பார்வையிட வருமாறு தெரிவித்து அவர்களை அங்கு அழைத்துள் ளார்.
இவரின் அழைப்பை ஏற்ற சுமார் 30 மாணவர்கள் குறித்த கண்காட்சியை பார்வையிட சென்றிருந்தனர். அவர்கள் முன்னால் அவர்களுக்கு புலப்படும் வகையில், மக்களை வரிசைப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.
இந்த நடவடிக்கையை அவதானித்து சந்தேகம் கொண்ட இரண்டு மருத்துவப் பீட மாணவர்கள், பேராதனை பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.இதனை அடுத்தே இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
அத்துடன் சந்தேக நபர் அணிந்திருந்த அடையாள அட்டையை சோதனை செய்து பார்த்த போது அது போலியானது என்பதும் இனங்காணப்பட்டது. சம்பவம் குறித்து பேராதனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற-ரி)

**வீடு விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை வீதி "சயன்ஸ் அக்கடமி" ரியூசன் சென்ரருக்கு அருகில் வீடு கிணற்றுடன் சேர்ந்த மூன்று பரப்பு ஆதனம் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்பு : 077 446 9371 நரேஷ்
சந்திரதாசன் 077 610 6760
சிவா (416)845 8509

**வாடகைக்கு**
யாழ் நகரில் கடை,வீடு அனெக்ஸ் வாடகைக்குண்டு.
தொடர்பு: 077 174 6101

**Pillaiyar Stores and Pillaiyar Inn**
திருமண மண்டபங்கள், திருமண வைபவங்கள் மற்றும் பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்தநாள் நிகழ்வுகளுக்கு மிகக் குறைந்த விலையில் உங்களின் வீடுகளுக்கு
200 ml Elephant Soft Drink (Soda) விநியோகிக்கப்படும்.
குறைந்தது 500 போத்தல்கள்.
விலை 20/=
தொடர்பு: 077 221 5167
021 222 5595






செல்லம் Dts 10.30, 2.30, 6.30
065 2240064
ராஜா Dts 10.30, 2.30,6.30, 9.30 p.m
021 2227332
சினிசிட்டி Dts 10.30, 2.30, 6.30, 9.30
077 3101080
சினிவேர்ட் Dts 10.30 2.30, 6.30, 9.30
011 2330017
சரஸ்வதி Dts 10.30, 2.30, 6.30, 9.30
திருகோணமலை Tel 026 2222221

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறை பெண்கள் வாழ்வாதாரத்தை உயர்த்த அனோமா கமகே பாடுபடுவார்

## தயா கமகே எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, ஓக.31

அம்பாறை மாவட்ட பெண்களுக்கு சுயதொழில் வாய்ப்பை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையிலான செயற்றிட்டத்தை அனோமா கமகே முன்னெடுப்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் தயா கமகே தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அக்கரைப் பற்று பிரதேச அமைப்பாளர் எம்.எம். முஹம்மட் நிஸாம் தலைமையில் அவரது இல்லத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியலில் பெண்கள் சார்பாக அனோமா கமகேயை நியமித்துள்ளார். அவர் பெண்கள் அமைப்போடு இணைந்து குறிப்பாக அம்பாறை மாவட்ட பெண்களுக்காக பாடுபடுவார். மேலும்,நான் அமைச்சர் பதவியை பொறுப்பேற்றவுடன் எனக்கு வாக்களித்த மக்களுக்கு சேவைசெய்வேன்.-என்றார். (ற)

### கண்ணீர் அஞ்சலி




எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சிவசக்தி ஸ்ரீதரன் அவர்களின்
அன்புத் தாயார்

**தங்கேஸ்வரி சோமசுந்தரம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்னாரது குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பிரிவால் துயருறும்
அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்,
யா/ அம்பன் அ.மி.த. பாடசாலை, குடத்தனை.

### கண்ணீர் அஞ்சலி



ஏஷியன் பெயின்ற்ஸ் லங்கா லிமிட்டெட்
ஸ்தாபனத்தின் தேசிய முகாமையாளர்

**கிருஷ்ணமூர்த்தி பரமகுரு**

அவர்கள் 29.08.2015 சனிக் கிழமை இயற்கை எய்தினார்.

நேற்றுவரை எம்மோடு உறவாடி இருந்தீர்
காற்றாகி இன்றெங்கே கனவாகிப்போனீர்
கூற்றுவன் உமைக் கொண்டேக நேயாக வந்தான்
தேற்ற ஒரு மொழியில்லை தேம்பும் மனதிற்கு


உங்களின் ஆத்மா சாந்தியடைய எங்களின் பிரார்த்தனையை இறைவனி டம் சமர்ப்பிக்கின்றோம்.

பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஏஷியன் பெயின்ற்ஸ் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாண இரும்பகம்
ஏஷியன் பெயின்ற்ஸ் விநியோக நிலையம்,
52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**சுப்பிரமணியம் மனோகரன்**
(மனோகரன் மாஸ்டர்)



திதி: அபரபட்ச துதியை 31.08.2014

தோற்றம் 24.09.1935
மறைவு 10.09.2014

அன்புக்கோர் தெய்வமாய்
அறிவு தரும் நல் ஆசானாய்
பண்புக்கு இலக்கணமாய்
குடும்பத்தின் குலவிளக்காய்
பாச நல் தலைவராய்
உத்தமராய் வாழ்ந்து
காலத்தால் அழியாத நினைவை
எமக்கு தந்து விட்டு ஞாலத்து
வாழ்வு முடித்து அகன்றீர்களே!

குடும்பத்தினர்.
106, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

# தண்ணிமுறிப்பு கமக்கார அமைப்பு வடக்கு விவசாய அமைச்சரிடம் மனு

## மேற்கொள்ளப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகள் தொடர்பாக

முல்லைத்தீவு, ஓக.31

தண்ணிமுறிப்பு கமக்கார அமைப்பினரால் வடக்கு மாகாண விவசாய அமைச்சரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் அவல நிலை குறித்தும், மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகள் குறித்தும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

தண்ணிமுறிப்பு கிராமத்தின் கீழ் 12 கிளை வாய்க்கால்களும் 2 ஆயிரம் 400 ஏக்கர் பரப்புமுள்ள வயல் காணிகளும் உள்ளன. இந்த வாய்க்கால்கள் குளம் கட்டிய காலத்தில் அமைக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. இந்த வாய்க்கால்களில் கொட்டுகள், பாலங்கள் எவையும் இல்லை. வாய்க்கால் வீதிகள் அழிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. அதனால் ஒவ்வொரு வாய்க்கால்களின் கீழுள்ள விவசாயிகள் தமது வயல் நிலங்களுக்கு உழவு இயந்திரங்கள் அறுவடை இயந்திரங்கள் (வெட்டு மெசின்) போன்றவற்றை கொண்டு செல்ல முடியாது பெரும் அவலங்களை எதிர்கொள்கின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு பெரும்போக நெற் செய்கைக்கு முன்னர் அவற்றைப் புனரமைத்துத் தரவேண்டும்.

8ஆம் கண்டத்தில் டிசி சந்தியின் கிழக்குப் பக்கமாகவுள்ள கொங்கிறீட் கட்டைப் புனரமைப்புச் செய்து தர வேண்டும். இதன்மூலம் 5ஆம், 6ஆம், 7ஆம் கண்டங்களுக்கு சுலபமாக நீர் பாயும். 8ஆம் கண்டத்தின் கீழ் 4ஆம் கண்ட கீழ்ப் பகுதியிலுள்ள 75 ஏக்கர் வயல் நிலத்துக்கு நீர் பாய்வதற்கு வசதியாக கட்டப்பட்டுள்ள மண் கட்டைச் சிமெந்தால் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் தண்ணிமுறிப்புக் குளத்தின் கலிங்கு ஆறுக்கான 3ஆம் கண்டத்தில் ஒரு மறிப்பு அணையும் 7ஆம் கண்டம் ஆனையுரிச்சான் என்னும் பகுதியில் ஒரு மறிப்பு அணையையும் கட்டித் தர வேண்டும். அதன்மூலம் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பைக்கொண்ட விவசாயிகள் அதிக நன்மையடைவர்.

குளத்தின் வலதுகரை வாய்க்கால்களைப் புனரமைப்புச் செய்து, காணிகள் இல்லாமல் இருக்கும் இளம் சமூகத்தினருக்கு வயல் காணிகள் வழங்கு வதன் மூலம் இளம் சமூகத்தினர் நெற் செய்கையில் அதிகமாக ஈடுபட வழி வகுக்க முடியும்.

தண்ணிமுறிப்புக் குளத்தின் கீழ் 12ஆம் கண்டத்தின் வடக்குப் பக்கமாக வயல் நிலங்கள் உள்ளவர்களுக்கு குடியிருப்புக் காணிகள் வழங்கப்பட்டும் உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டும் அவர்கள் இன்றுவரை மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. அந்தக் காணிகளை துப்புரவு செய்து அவர்களை மீள் குடியமர்த்த உரிய முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

குமுழமுனை தண்ணிமுறிப்பில் அதிகளவான மக்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுகின்றபோதும், கால் நடைகளுக்கான ஒரு மேய்ச்சல் தரை இன்றுவரை இல்லை. அதற்கு நாம் பல தடவைகள் முயற்சித்த போதும் பயன் ஏதும் கிடைக்கவில்லை. இந்தக் குறைபாட்டைத் தாங்கள் நிறைவேற்ற வேண்டும்.

மேலும் குருந்தூர் மலையிலுள்ள ஆதிசிவன் ஐயப்பன் ஆலயத்தை மீள நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். எமது கிராமத்தின் பிரதான வீதிகள் பல வருட காலமாக கிரவல் வீதியாகவே காணப்படுகின்றன. அதனால் மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் என அனைவருமே செம்பாட்டுப் புழுதி படிந்த ஆடைகளுடனே வீடு திரும்பவேண்டிய நிலை உள்ளது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக கிரவல் வீதி களுக்கு தார் இடுவதற்கு உரிய வழிகள் செய்ய வேண்டும்.- என்று அந்த மனுவில் குறிப்பிப்பட் டுள்ளது.

மனுவின் பிரதிகள் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகி யோருக்கும் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர்களுக் கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

(ற-102)

# அபிவிருத்திப் பணிகள் பாரபட்சமின்றி நடக்கும்

## எச்.எம்.எம்.ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.31

முஸ்லிம் காங்கிரஸுக்கு கிடைக்கவுள்ள அம்பாறை மாவட்டத்தின் அரசியல் அதிகாரத்தைக் கொண்டு சகல ஊர்களுக்கும் பாரபட்சமின்றி அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும். இனிவரும் காலம் அம்பாறை மாவட்ட மக்களுக்கு பொற்காலமாகும். - என்று திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் தெரிவித்தார்.

மக்கள் சந்திப்பொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:-

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் எனது வெற்றிக்கும் கட்சியின் வெற்றிக்கும் வாக்களித்த கட்சிப் போராளிகளுக்கும் மக்களுக்கும் குறிப்பாக, இளைஞர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். இத் தேர்தலில் எமது மக்கள் வழங்கிய இந்த அமானிதமான ஆணையை கொண்டு இப்பிரதேச மக்களின் அபிவிருத்திகள், அபிலாசைகள் மற்றும் இளைஞர்களின் எதிர்பார்ப்புக்கள் அனைத்தையும் நிறைவேற்ற பாடுபடுவேன்.

அம்பாறை மாவட்டத்தின் அரசியல் அதிகாரம் முஸ்லிம் காங்கிரஸின் கைவசம் கிடைக்கவுள்ளது. இதற்கான வாக்குறுதியை கட்சியின் தலைமை ஜனாதிபதியிடமும் பிரதமரிடமும் பெற்றுள்ளது. அதனைப் பயன்படுத்தி எமது மாவட்டத்தின் அனைத்து ஊர்களிலும் அபிவிருத்தி பணிகள் பாரபட்சமின்றி மேற்கொள்ளப்படவுள்ளன. அதற்கான ஏற்பாடுகளை கட்சியின் தலைமையுடம் இணைந்து நாம் மேற்கொண்டு வருகின்றோம். - என்றார். (ற)

### முதலாம் வருடநினைவலைகள்



செல்வி இராசகுமார் சஞ்சுகா
(தேன் ஒளி முன்பள்ளி மாணவி)

உதிப்பு 05.10.2009
உதிர்வு 31.08.2014

சிட்டு உந்தன் அழகிய முகம் தேடித் தேடி
கண்ணீர் துளி மட்டுமே எம்மிடம் உண்டு
உன்னைத் தேடும் கண்களின் தேடலுக்கு
எப்படிச் சொல்வோம் நீ இங்கில்லை என்று
வீட்டிற்கொரு மகாலட்சுமியாய் வந்தவளே
கனவாக சென்றமைக்கு காரணம் தான் என்னவோ
இந்த ஓராண்டு அல்ல எம் உயிர்வாழும் காலம் எல்லாம்
நீயே எங்கள் குலதீபம் சஞ்சுக் குட்டி

உன் பிரிவால் துயரும்!
அப்பா(இராசகுமார்).அம்மா(மைதிலி).
அண்ணா(அனுசன்).அக்கா.அம்மம்மா.
அப்பம்மா.தாத்தா.அத்தைமார்.
மாமாமார்.சித்தி.சித்தப்பா.

வைரவர் கோவிலடி வீதி,
கைதடி- நுணாவில்,
சாவகச்சேரி.
077 394 5889

# சட்டவிரோத மணல் அகழ்வு: நால்வர் கைது

மட்டக்களப்பு, ஓக.31

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில், பள்ளக்காடு களியோடை ஆற்றில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை சட்டவிரோதமாக ஆற்று மணல் அகழ்வில் ஈடுபட்ட மூவரை அக்கரைப்பற்று பொலிஸார் கைது செய்துள்ளனர். ஆலையடி வேம்பு,அட்டாளைச்சேனை மற்றும் பாலமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அக்கரைப்பற்று பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவினர் விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட போதே குறித்த மூவரும் உழவு இயந்திரத்தின் இழுவைப்பெட்டியில் ஆற்று மண் ஏற்றிய நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தற்கொலைக்கு எதிரான சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம், ஓக.31

யாழ்ப்பாண றோட்டறிக் கழகத்தின் அனுசரனையில் 'இருளில் இருந்து வெளிச்சத்துக்கு வாருங்கள்' எனும் தொனிப் பொருளிலான தற்கொலைக்கு எதிரான சைக்கிள் ஓட்டம் இன்று நண்பகல் 12 மணிக்கு கிளிநொச்சியை வந்தடையவுள்ளது.

அத்துடன் இந்த நிகழ்வை ஒட்டி பேச்சுச் சுதந்திரம் எனும் தொனிப் பொருளில் ஓவியப் போட்டி ஒன்றும் கருணா நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்த ஓவியப் போட்டியில் 8 வயதுக்கும் 15 வயதுக்கும் இடைப்பட்ட மாணவர்கள் பங்கு பற்ற முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் காலை 8.30 மணி முதல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு மு.ப 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை போட்டி நடத்தப்படும் எனவும் பிப. 12.30 மனிக்கு பரிசில்கள் வழங்கப்படும் எனவும் முதல் 3 இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு ஒரு வருடத்துக்குக் கற்றலுக்கான உபகரணங்கள் வழங்கப் படுவதுடன் குமார் சங்ககாரவால் கையெ முதிடப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

குறித்த ஓவியப்போட்டியில் பங்கு பற்றுவதற்கான வயதெல்லை 8 – 15 எனவும் படங்களை அவ்விடத்திலேயே வரைதல் வேண்டும் எனவும் வரைவதற்கு ஏற்பாட்டாளர்களால் தரப்படும் பொருள் களையோ அல்லது சொந்தப் பொருள்களையோ பயன்படுத்த முடியும் எனவும் ஏற்பாட்டாளர்களால் தரப்படும் வரைதல் தாளிலேயே வரைய வேண்டும் எனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இரு மணித்தியாலங்களுக்குள் வரைந்து முடிக்க வேண்டும் இந்த நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நாளை செவ் வாய்க் கிழமை நூலக மண்டபத்திலும் புதன் கிழமை முல்லைத்தீவு சிலாவத்தை வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ள தெனவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற–10)


## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வெளிநாடுகளுக்கு கல்வி கற்க அனுப்பும் நிறுவனமொன்றிற்கு ASST. MANAGER ஆகவும் RECEPTIONIST ஆகவும் பணிபுரிய பெண் ஒருவர் தேவை. ஆங்கில கணினி அறிவு அவசியம் 05.09.2015 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல, 5075

மே/பா உதயன் , 361,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## வாதரோகங்களுக்கு சிகிச்சை

கழுத்துப்பிடிப்பு (Stiffneck),முதுகெலும்பு இடைத்தட்டு நழுவல் (Slipped Disc ),தோள்மூட்டுப் பிடிப்பு (Frozen Shoulder),முடக்கு வாதம் (Rheumatoid Arthritis),நாரிப்பிடிப்பு(Lumbago),இடுப்புவலி (Sciatica),எலும்பு கரைதல் (Osteoporosis),சிறுவர் மூட்டுவாதம்(Juvenile arthritis) மற்றும் தசை- நரம்பு- வாதம்(Neuro-Muscular Problems) போன்ற பிரச்சினைகளுக்கும்,விபத்துக்களின் பின்னர் உடல் உறுப்புக்களில் சீரற்ற இயக்க கோளாறுகளுக்கும் சித்த ஆயுள்வேத முறைப்படி சிகிச்சைகளும் ஆலோசனையும் பெறலாம். தொடர்புகளுக்கு தொலைபேசியில் முன் அனுமதி பெற்றுவரவும்.

மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5 அரசவீதி(சங்கிலியன் வீதி எதிரில் )
நல்லூர்,யாழ்ப்பாணம்.

T. P: 021 2054066, 0778725251


## யோகா, கதக் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஓக.31

இந்தியத் துணைத் தூதரகத்தில் யோகா, கதக் பயிற்சி நெறிகள் நடைபெறவுள்ளன.

பயிற்சி நெறிகள் நாளை செவ் வாய்க் கிழமை பி.ப 5மணிக்கு யாழ். மருதடி வீதியில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தில் ஆரம்பமாகவுள்ளன. அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் பயிற்சிகளின் நிறைவில் இந்தியத் துணைத் தூதரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற–ரி5)

## பழுதடைந்த வெண்ணெய் விற்றவருக்கு எதிராக வழக்கு

தென்மராட்சி, ஓக. 31

பழுதடைந்த வெண்ணெய்க் கட்டிகளை விற்பனைக்கு வைத்திருந்த வர்த் தகருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

பொதுமகன் ஒருவர் கொடுத்த முறைப்பாட்டையடுத்து கொடிகாமம் பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் திடீர் பரிசோதனை நடத்தியபோது விற்பனைக்கு வைத்திருந்த வெண்ணெய்க்கட்டிகள் நிறம் மாறி பழுதடைந்த நிலையில் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

அதையடுத்தே அவற்றை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர் மீது வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டது. (ற–9)

## பல்கலையில் நாளை திண்டுக்கல் பேராசிரியரின் இலக்கிய உரை

யாழ்ப்பாணம், ஓக. 31

யாழ்.பல்கலைக்கழகத்தில் நாளை செவ்வாய்க்கிழமை இலக்கிய மொழி பெயர்ப்புக்கள் – நுட்பங் களும் போக்குகளும் எனும் தலைப்பில் தமிழ்நாடு திண்டுக்கல் கிராம பல்கலைக்கழகத் தமிழ்த்துறை பேராசிரியர் என்.ஆனந்தகுமார் உரையாற்றவுள்ளார்.

யாழ்.பல்கலையின் மொழிபெயர்ப்புக் கற்கைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் மொழிபெயர்ப்புத்துறை விரிவுரை மண்டபத்தில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இணைப்பாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் திமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.கும ரன் அறிமுகவுரையையும் கவிஞர் சோ.பத்மநாதன் கருத்துரையையும் வழங்குவார்கள் என்று இணைப் பாளர் ஸ்ரீகணேசன் தெரிவித்துள்ளார். (ற–4)


## மாணவர் உள்வாங்குகை : கல்வியாண்டு 2015, செப்டம்பர்
## BCAS Campus - Jaffna

தனியார் உயர் கல்வித்துறையில் 16 வருட அனுபவத்தையும் நம்பிக்கையும் கொண்ட **BCAS Campus** யாழ் வளாகத்தில் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

### உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் (BTEC Pearson edexcel HNDs)

கற்கை நெறிகள்

- Civil Engineering
- Biomedical Science
- Quantity Surveying
- Computing & System Development
- Business Management
- Business Marketing
- HR Management

காலம் : நான்கு கல்வி அரையாண்டுகள் (1வருடம் 6 மாத கற்கை காலம் +6 மாதகால தொழில்சார் பயிற்சி)
கட்டணம் : கற்கை நெறிக்கேற்ப வேறுபடும்
மொழிமூலம் : ஆங்கிலம்
அனுமதி : க.பொ.த உயர் தரம் (பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்)



மேற்கூறப்பட்ட கற்கைநெறிகள் நான்கு கல்வி அரையாண்டுகள் கொண்டதாகவும், இக்கற்கை நெறிகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் (UGC) சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஒருவருட / இறுதியாண்டு (Top-Up) கற்கையை 105 க்கு மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களிலோ அல்லது எமது நிறுவனத்தின் கொழும்பு வளாகத்திலோ தொடர்ந்து பட்டத்தை பெற முடியும்.

### டிப்ளோமா கற்கை (Diploma)



கற்கை நெறிகள்

- **CAD & BS**

க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் கட்டிட நிர்மாணத் துறையில் 6 மாதகால படவரைஞர் பயிற்சி நெறியின் இறுதியில் UK edexcel அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.

- **BTEC edexcel National Diploma in Engineering (IEF)**

Engineering துறையில் க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற கா.பொ.த உயர் தரத்துடன் சர்வதேச இளமாணி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான 1 வருட (2 கல்வி அரையாண்டுகள்) அடிப்படை கற்கை நெறி UK edexcel அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

### கணனி மற்றும் ஆங்கில பயிற்சி பாடநெறிகள் (UK edexcel)

கற்கை நெறிகள்

- **English**

நான்கு மாத காலம் கொண்ட ஆங்கில பாடநெறி ஆங்கிலத்தில் பேச எழுத வாசிப்பதற்குரிய முழுமையான பயிற்சி அளிக்கப்படுவதுடன் சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **Information Technology (IT)**

Concept of Information Technology, Computer Maintenance & File Management, Microsoft Office, Information & Communication, Website Development, Computer Programming & Hardware & Networking போன்ற பிரிவுகளில் முழுமையாக பயிற்சியளிப்பதுடன் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- **IELTS**

சர்வதேச ஆங்கில மொழித் தகைமைகளை உத்தரவாதப்படுத்தும் இப்பாட நெறியில் Speaking, Listening, Reading and Writing போன்ற பிரிவுகளில் முழுமையானதும் தனிப்பட்ட கவனமும் செலுத்தப்படுகிறது.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

மேலதிக தகவல்களுக்கு:

077 710 2131

16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910

16 YEARS


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கு மாகாண பாடசாலைகள் அபிவிருத்திகளில் புறக்கணிப்பு

## இம்ரான் மஹ்ரூப் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக.31

ஐக்கிய அமெரிக்கா கிழக்கு மாகாண பாடசாலைகளின் அபிவிருத்திக்கென வழங்கிய நிதி பங்கீட்டில் திருகோணமலை மாவட்ட பாடசாலைகள் புறக்கணிப்பட்டுள்ளன என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

கிழக்கு மாகாண பாடசாலைகளின் அபிவிருத்திக்கு ஐக்கிய அமரிக்கா வழங்கிய 3 ஆயிரத்து 218 அமெரிக்க டொலர் நிதி 8 பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் தகவல் வெளிவந்துள்ளது. அந்தப் பாடசாலைகளின் பட்டியலைப் பார்க்கும் போது திருகோணமலை மாவட்ட பாடசாலைகள் உள்ளடக்கப்படவில்லை.

பல்வேறு வகையான அபிவிருத்திகள் தேவைப்படும் பல பாடசாலைகள் திருகோணமலை மாவட்டத்தில் இருக்கின்றன. எனினும், இம்மாவட்டத்தில் ஒரு பாடசாலையேனும் இத்திட்டத்தில் சேர்க்கப்படாமையானது கவலைக் குரியது. எனவே,கிழக்கு மாகாண முதலமைச்சர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும்,எதிர்காலத்தில் இது போன்ற குறைகள் வராமல் இருப்பதை உறுதிப்படுத்தவும் வேண்டும். – என்றுள்ளது. (ற)


பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது துணுக்காய் பிரதேச செயலகத்தில் காணி பயன்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றிய

பொ. ஸ்ரீவர்ணன்

அவர்கள் இலங்கை நிர்வாக சேவைக்கு (SLAS III)தெரிவு செய்யப்பட்டுள்ளார். இச் சேவையில் மேலும் பதவி உயர்வுகளைப் பெற்று சிறந்த சேவையாற்ற வேண்டுமென பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
பிரதேச செயலகம்,
துணுக்காய்.



இதய பூர்வமாக வாழ்த்துகின்றோம்

கோண்டாவில் உபஅஞ்சல் அலுவலகம், யாழ். கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய ஆரம்பப்பிரிவு பாடசாலை ஆகியவற்றை அன்பளிப்பாக வழங்கிய கோண்டாவில் வாழ் சமூகசேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய



"செங்கைப் புரவோன்" இராசையா குவேந்திரநாதன்

அவர்கள் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன சனசமூகநிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் குட்டிச்சுட்டி முன்பள்ளிக்கான காணியுடன் அமைந்துள்ள அகம், குழந்தைகள் பகல்நேரக்காப்பகம் மற்றும் கிராமசேவையாளர் அலுவலகம் ஆகியவற்றை வழங்கியமையைக் கௌரவித்து 29.08.2015 அன்று இடம்பெற்ற "திறப்புவிழாவின் போது பொன்மனப் பேராளன்" என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையை மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன் அவரது சமூகப்பணி மென்மேலும் தொடர இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

கோண்டாவில் வாழ் மக்கள் சார்பாக

அ.ஸ்ரீஸ்கந்தராஜா


# 70 சதவீதமான உயிரிழப்புகள் நான்கு வகை நோய்களாலேயே

## வைத்தியர் ஆர்.நவலோஜிதன் சுட்டிக்காட்டு

மட்டக்களப்பு, ஓக.31

உலகில் 70 சதவீதமான உயிரிழப்புகள் நான்கு வகையான நோய்களால் ஏற்படுகின்றன என்று வைத்தியர் ஆர்.நவலோஜிதன் தெரிவித்தார்.

இந்த நோய்கள் ஏற்படுவதற்கு அடிப்படையான நான்கு காரணிகள் உண்டு. சாப்பாட்டு பழக்கவழக்கம், உடற்பயிற்சியின்மை, மதுபாவனை மற்றும் புகைத்தல் ஆகிய நான்கு காரணிகளால் இவ்வாறான நோய்கள் ஏற்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையில் கடமையாற்றும் சுகாதார தொழிலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போது உலகில் 70 வீதமான உயிரிழப்புகள் நான்கு வகையான நோய்களினால் ஏற்படுகின்றன. அதில் இருதய நோய் மற்றும் புற்றுநோய், நீரிழிவு நோய், சுவாசப்பை நோய் ஆகிய நோய்களினால் இந்த 70 வீதமான உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. இந்த நோய்கள் ஏற்படுவதற்கு அடிப்படையான நான்கு காரணிகள் உண்டு.

சாப்பாட்டு பழக்கவழக்கம், உடற்பயிற்சியின்மை, மதுபாவனை மற்றும் புகைத்தல் ஆகிய நான்கு காரணிகளால் இவ்வாறான நோய்கள் ஏற்படுகின்றன. நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நோய் எப்போது வரும் என்று நமக்குத் தெரியாது. பலர் நோயுடன் இருக்கின்றனர். ஆனால், அவர்களுக்கு நோயுண்டு என்பதை அதற்கான அறிகுறிகள் தென்பட்டவுடன் தான் வைத்தியரை நாடுகின்றனர்.

நோய் வராமல் தடுக்கின்ற முறையினை நாம் பின்பற்ற வேண்டும். சுகாதார தொழிலாளர்கள் செய்யும் பணி மகத்தானது. அவர்கள் சுத்திகரிப்பாளர்கள் என ஒதுக்கி விடக் கூடாது. நாமும் சுத்திகரிப்பாளர்கள் தான். நமது வீட்டை நமது சூழலை சுத்தம் செய்கின்றோம்.

எனவே, மட்டக்களப்பு மாநகர சபையில் கடமையாற்றும் சுகாதார தொழிலாளர்களின் பணி மகத்தானது. அவர்களை கௌரவிக்கும் இந்த வைபவம் சிறப்பானது. – என்றார். (ற)

# முதலாவது மைல்கல்லை தற்போது எட்டியுள்ளோம்

## ரிஷாத் பதியுதீன் கூறுகின்றார்

கொழும்பு, ஓக.31

முஸ்லிம்களின் அரசியல் அதிகாரக் களம் என்றும் முதுகெலும்பென்றும் வர்ணிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் கன்னி முயற்சியாக கால் பதித்து தனித்து நின்று ஒரே மாதத்துக்குள் 33 ஆயிரத்து 102 வாக்குகளைப் பெற்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்கட்சி தனது வெற்றியின் முதலாவது மைல்கல்லை எட்டியுள்ளது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித் துள்ளார். அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நீங்கள் அளித்த வாக்குகள் பணபலம், அடியாட்களின் அட்டகாசங்கள், அரச அதிகாரிகளின் முறையற்ற செல்வாக்கு ஆகியவற்றுக்கு எதிராக எதிர்நீச்சல் போட்டு பெறப்பட்ட உறுதியான வாக்குகளாகவே அமைந்துள்ளன.

எனவே, உன்னத சமுதாயம் ஒன்றை அமைக்க தேர்தலில் களமிறங்கி, இழந்து போன அரசியல் உரிமைகளை நிலைநாட்ட திரண்டு வந்து அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சின்னமான மயிலுக்கு வாக்களித்து எமது கட்சியையும் தலைமையையும் அங்கீகரித்த அனைவரோடும் கைகோர்த்து எதிர்வரும் காலங்களில் அம்பாறை மாவட்டத்தில் இப்பயணத்தை தொடர்வேன்.- என்றுள்ளது. (ற)

### இடையூறு விளைவித்த மனநோயாளிகள் வைத்தியசாலையில் ஒப்படைப்பு

கொழும்பு, ஓக.31

மஸ்கெலியா நகரில் பொது மக்களுக்கும், வர்த்தகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கும் இடையூறு விளைவித்த 4 மன நோயாளிகளை அங்கொடை முல்லேரியா மனநோயாளர் வைத்தியசாலைக்கு ஒப்படைக்குமாறு ஹற்றன் பதில் நீதிவான் உத்தர விட்டுள்ளார்.

மேற்படி 4 மன நோயாளிகளும் மஸ்கெலியா நகரப் பகுதியில் பொது மக்கள், வர்த்தகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கும் இடையூறு விளைவிப்பதாக பொது மக்களால் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் செய்த முறைபாட்டையடுத்து பொலிஸார் குறித்த மன நோயாளிகளை கைது செய்து நேற்று ஹட்டன் பதில் நீதிவான் எஸ்.இராஜேந்திரன் முன்னலையில் முற்படுத்தினர். இதன்போதே அவர் இவ்வாறு உத்திர விட்டுள்ளார்.

குறித்த 4 மன நோயாளிகளில் 3 பெண்களும் ஒரு ஆணும் அடங்குகின்றனர். இவர்களுக்கு உறவினர்கள் இல்லை எனவும் இவர்கள் மலையகப்பகுதியை சேர்ந்த மனநோயாளர்கள் என மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டிரோன் ரத்நாயக்க தெரிவித்தார். (ற)

# காலாவதியான திரிபோச பக்கெட்: விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஓக.31

மஸ்கெலியா, அப்புகஸ்தனை தோட்டத்தில் காலாவதியான திரிபோச பக்கட்டுகள், குழந்தைகளுக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும் விநியோக்கிக்கப்பட்டமை தொடர்பில் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 25ஆம் திகதியுடன் காலாவதியான திரிபோச பக்கட்டுகளை 27ஆம் திகதி குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனையடுத்தே, இவ்விடயம் தொடர்பில் பிரதேச வாசிகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். மேலும், அப்பிரிவுக்கு வைத்திய அதிகாரிகள் விஜயம் செய்து களஞ்சிய சாலைகளை பரிசோதனை செய்து, காலாவதியான நிலையிலுள்ள அனைத்து திரிபோசவையும் அழிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இவ்விடயம் தொடர்பில் மஸ்கெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)



# விஷமருந்திய நபரிடம் கஞ்சா பக்கெட்

கொழும்பு, ஓக.31

விஷம் அருந்தி டிக்கோயா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவரிடமிருந்து மூன்று கஞ்சா போதைப்பொருள் பக்கெட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்படி சந்தேக நபரை ஹட்டன் பதில் நீதவான் தமயந்தி பெர்னாண்டோ 50 ஆயிரம் ரூபாய் சரீர பிணையில் விடுவித்துள்ளார்.

குறித்த சந்தேக நபர் நோர்வூட் ஸ்டொக்கம் பகுதியைச் சேர்ந்தவராவார்.


இவர் கடந்த கடந்த வியாழக்கிழமை ஹற்றன் எபோட்சிலி தோட்டத்தில், காதல் விவகாரம் காரணமாக விஷம் அருந்தியுள்ளார்.

அதன் பின்னர் அவரை ஹற்றன் பொலிஸார் டிக்கோயா மவாட்ட வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளனர். அவரை பொலிஸார் பரிசோதனை செய்யும் போது அவரிடமிருந்து கஞ்சா பக்கெட்டுக்கள் மூன்றினை கைப்பற்றியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக ஹற்றன் பொலிஸார் ஹட்டன் பதில் நீதிவானிடம் கூறிய போது, பதில் நீதிவான் தமயந்தி பெர்னாண்டோ வைத்தியசாலைக்கு சென்று விசாரணைகளை மேற்கொண்ட பின் இவ்வாறு சரீர பிணையில் விடுவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூரிய சக்தியில் இயங்கும் முதலாவது பந்தயக் கார்

சூரிய சக்தியில் இயங்கக்கூடிய சாதாரண கார்களின் வடிவமைப்பே முழுமையடையாத நிலையில் மின்னல் வேகத்தில் பயணிக்கக்கூடிய பந்தயக்கார் வடிவமைக்கப்பட்டுள்ளது. Immortus எனப்படும் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத இந்தக் கார் ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் அமைந்துள்ள Swinburne University பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

ஏழு செக்கன்களில் மணிக்கு 100 கிலோமீற்றர்கள் எனும் வேகத்தை அடையக்கூடிய இக் காரானது சூரிய சக்தி மூலம் சேமிக்கப்படும் மின் சக்தியில் 85 வது/h எனும் வேகத்தில் 550 கிலோமீற்றர்கள் வரை பயணம் செய்யக்கூடியதாகக் காணப்படுகின்றது. மேலும் இதன் விலையானது 370,000 அமெரிக்க டொலர்கள் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.



# கியூப்ரி புதிய செயலி

அலுவலகம், வீடு தவிர பணியாற்றுவதற்குப் பொருத்தமான கச்சிதமான இடத்தைத் தேடிக்கொண்டிருப்பவர்களுக்கு வழி காட்டும் செயலியாக கியூப்ரி உருவாகியிருக்கிறது.

உலகம் முழுவதும் உள்ள நகரங்களில் எங்கெல்லாம் பொதுப் பணியிடங்கள் அல்லது பகிர்வுப் பணியிடங்கள் இருக்கின்றன என்பதை இந்தச் செயலி வரைபடம் மூலம் சுட்டிக்காட்டுகிறது. அந்த இடங்களின் தன்மை, அங்குள்ள வை–பை வசதியின் ஆற்றல் உள்ளிட்ட விவரங்களையும் தருகிறது.

மேலும், அங்கு பணிபுரியும் சக பணியாளர்கள் பற்றிய விவரங்களையும் அளித்து அவர்களுடன் தொடர்புகொள்ளவும் வழி செய்கிறது.



# iPhone ஊடாக மற்றுமொரு வசதி

ஸ்மார்ட் தொழில்நுட்ப உலகில் ஒவ்வொரு கைப்பேசி நிறுவனங்களும் பல புதிய தொழில்நுட்பங்களை உள்ளடக்கியதாக மொபைல் சாதனங்களை வடிவமைத்து வருகின்றது. இந்த நிலையில் மொபைல் சாதன உலகின் ஜாம்பவானாக திகழும் அப்பிள் நிறுவனத்தின் iPhone இனை Graphics Tablet ஆக பயன்படுத்தும் வசதி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதற்கு AstroPa- எனும் அப்பிளிக்கேஷன் உதவுகின்றது. இந்த அப்பிளிக்கேஷனை 4.99 டொலர்கள் செலுத்தி iTunes தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து நிறுவிக்கொள்வதன் மூலம் iOS 8 இயங்குதளத்தைக் கொண்ட அப்பிளின் மொபைல் சாதனங்களை Graphics Tablet ஆக மாற்றிக்கொள்ள முடியும்

# வவுனியாவில் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள்

வவுனியா, ஓக.31

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு சலமுகாமைத்துவ பொருள்கள் வவுனியா பம்மைமடு வைகறை வைத்தியசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. மோற்றிவேசன் லங்கா நிறுவனத் தின் அனுசரணையுடன் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கலந்துகொண்டு அவற்றை வழங்கினார்.

வவுனியா மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் ஸ்ரீநிவாசன், மோற்றிவேசன் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சுதர்சன், பம்மைமடு வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் சர்வானந்தா, சுகாதார அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் விசேட தேவைக்குட்பட்டோர் உட்படப் பலரும் இதில் கலந்து கொண்டனர். (ற–422)



# சௌமியமூர்த்தி தொண்டமானின் 102 ஆவது ஜனன தின நிகழ்வுகள்

கொழும்பு, ஓக.31

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 102 ஆவது ஜனன தினத்தை நினைவு கூரும் முகமாக நேற்று மலையகத்தின் பல பாகங்களிலும் ஆலயங்களில் விசேட பூஜைகளும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

கொழும்பு காலி முகத்திடல் பழைய நாடாளுமன்றத்தில் அமைந்துள்ள அமரரின் உருவச் சிலைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஆறுமுகன் தொண்டமானும், தலைவர் முத்து சிவலிங்கமும் மலர் மாலை அணிவித்தனர். இதன்போது இ.தொ.காவின் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், இலங்கை– இந்திய சமூதாயப் பேரவையின் முக்கியஸ்தர்கள் மற்றும் இ.தொ.காவின் முக்கிய பிரமுகர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ற)



# உபேக்ஷாவின் தோல்வி மக்களின் துரதிர்ஷ்ட வசமாம்

கொழும்பு, ஓக:31

நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் பொதுமக்களின் துரதிர்ஷ்டம் காரணமாகவே தாம் தோல்வியடைந்ததாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் உபேக்ஷா சுவர்ணமாலி (பபா) தெரிவித்துள்ளார்.



நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தல் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

பொதுமக்களின் முன்னேற்றம் குறித்து எனக்குள் ஏராளமான திட்டங் கள் இருந்தன. ஆனால் அவற்றை நிறைவேற்றிக் கொள்ளு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலில் நான் தோல் வியுற்றுள்ளேன். அந்த வகையில் எனது தோல்வி எனக்குத் தனிப்பட்ட பாதிப்பு என்பதை விட பொதுமக்களின் துரதிர்ஷ்டமாகவே நான் கருதுகின்றேன்.

என்னைப்பொறுத்தவரை நான் மீண்டும் அரசியலில் ஈடுபடுவேனா? இல்லையா? என்பது [illegible] தற்போதைக்கு எந்த முடிவும் [illegible] வில்லை. அதற்கு இன்னும் நாள்கள் செல்லும்.

ஆனால் நான் தொடர்ந்தும் முன்பு போன்று நடிப்பில் ஈடுபடுவேன். நடிப்புத் துறையே எனக்கு ஏராளம் விடயங்களைப் பெற்றுத் தந்தது. அரசி[illegible] அதனைக் [illegible] என்றார். (ற)

# தம்புள்ளையில் விபத்து: 26 பேருக்குக் காயம்

கொழும்பு, ஓக.31

தம்புள்ளை கெகிராவை பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 26 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பஸ் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த சொகுசு தனியார் பஸ் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த 26 பேரில் 18 பேர் தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதுடன், சிறு காயங்களுக்கு உள்ளானவர்கள் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

குறித்த விபத்தைத் தொடர்ந்து பஸ்ஸின் சாரதி தப்பியோடியுள்ளார் என்று குறிப்பிடப்படுகின்றது. பஸ் அதிக வேகத்தில் சென்றமையே இவ்விபத்துக்கு காரணம் என பயணி ஒருவர் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இந்தநிலையில் குறித்த விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் 38 பெண்கள் சாவு



சுவிற்ஸர்லாந்து,ஓக.31
சுவிற்ஸர்லாந்தில் ஏற்பட்ட வீதி விபத்தொன்றில் 38 பெண்கள் உயிரிழந்ததுடன், 20 பேர் காயமடைந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.
சுவிற்ஸர்லாந்து, மன்னர் மஸ்வாதி ஆட்சியில் சில வருடங்களுக்கு ஒருமுறை புரதான விழா ஒன்று கொண்டாடப்படுகிறது. அதில் அந்த நாட்டின் அழகிய பெண்கள் கலந்துகொண்டு நடனம் ஆடுவார்கள். அந்தப் பெண்களில் ஒருவரை மன்னர் தனது புதிய மனைவியாக தேர்ந்தெடுப்பார். கடந்த வாரம் நடைபெற்ற அந்த விழாவில் பங்குபெற்ற வாகனம் ஒன்றில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட பெண்கள் சென்றுள்ளனர். அந்த வாகனம் அம்பபான் மற்றும் மஞ்சினி நகரங்களுக்கு இடையே விபத்தில் சிக்கியது. அதில் 38 பெண்கள் உயிரிழந்ததுடன், மேலும் 20 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

## உணவை திருடியதால் இளைஞனுக்குச் சிறை

அமெரிக்க நாட்டில் 5 டொலர் மதிப்புள்ள உணவைத் திருடிய குற்றத்துக்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் – சிறையில் உணவு எதுவும் உண்ணாமல் உயிர்விட்ட சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. விர்ஜினியா மாகாணத்தில் உள்ள போர்ட்ஸ்மவுத் நகரைச் சேர்ந்தவர் ஜமைசீல் மிட்செல் (வயது–24). இவர் கடந்த ஏப்ரல் மாதம்அந்தப்பகுதியில்உள்ளஉணவு விடுதி ஒன்றில் கேக் , குளிர்பானம் மற்றும் ஒரு சொக்லேட் ஆகியவைகளை திருடியதாக குற்றம் சாட்டப்பட்டது.
சிறையில் ஜமைசீல் எந்த உணவையும் எடுத்துக்கொள்ளவில்லை எனக் கூறப்படுகிறது. ஜமைசீலை பரிசோதனை செய்த மருத்துவர் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தார். (ஐ)

## துருக்கியில் முதன் முறையாக பெண் அமைச்சர் நியமனம்



அங்காரா,ஓக.31
துருக்கியில் முதன் முறையாக பெண் ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். துருக்கியில் முஸ்லிம்கள் அதிக அளவில் உள்ளனர். இருந்தாலும் அந்த நாடு மதச்சார் பற்ற நாடாகத் திகழ்கிறது. அங்கு எதிர்வரும் நவம்பர் மாதம் நாடாளுமன்றத் தேர்தல் நடை பெறவுள்ளது. தற்போது அக்மத் தவுதோக்லு தற்காலிக பிரதமராக பதவி வகிக்கிறார். அவரது அமைச் சரவையில் ஆய்சென் குர்கான் (வயது–52) என்ற பெண் அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார். துருக்கி வரலாற்றில் இதுவரை பெண் அமைச்சர் யாரும் நியமிக்கப்படவில்லை. தற்போது இவர் தான் அமைச்சுப் பதவி ஏற்றுள்ளார். இவருக்கு குடும்ப நலம் மற்றும் சமூகக் கொள்கைத் துறை ஒதுக்கப்பட்டுள்ளது. 3 பிள்ளைகளின் தாயான அவர் இளைஞர் மற்றும் கல்வி அறக்கட்டளையின் உறுப்பினராகவுள்ளார். இதன் செயல் தலைவராக ஜனாதிபதி ரீசெப் தய் யீப் எர் டோகனின் மகன் பிலால் எர் டோகன் பதவி வகிக்கிறார். அண்மைக் காலமாக துருக்கி அரசு பெண்களுக்கு விதிக்கப்பட்ட தடைகளை நீக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அழுகிய நிலையில் மனித சடலங்கள்

## சந்தேகநபர்கள் 4 பேர் கைது



வியட்நாம்,ஓக.31
ஆஸ்திரியா அருகே ஹங்கேரி நாட்டின் எல்லையோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தி ஒன்றில் 70க்கும் மேற்பட்ட அழுகிய நிலையில் மனித சடலங்கள் மீட்கப்பட்ட வழக்கில் 4 பேரைக் கைது செய்து பொலிஸார் நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியுள்ளனர். மேலும் இந்த வழக்கில் கைதானவர்களில் 3 பேர் பல்கேரியா நாட்டவரும், ஒருவர் ஆப்கான் நாட்டவரும் ஆவார். இந்தச்சம்பவம் குறித்து, கருத்து தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ–மூன், ஒட்டு மொத்த மனித குலத்துக்கே ஏற்பட்ட பெரிய கொடும் நிகழ்வுகளில் இதுவும் ஒன்று எனத் தெரிவித்துள்ளார். இதுபோன்ற நிகழ்வுகளைத் தடுக்கும் பொருட்டு, உறுதியான – அரசியல் கூட்டு முயற்சி அவசியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். உயிருக்கும் எதிர்காலத்துக்கும் பாதுகாப்பு கேட்டு மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபிரிக்காவில் இருந்து பெருவாரியான மக்கள் தங்களின் விதியை பணப்பசி கொண்ட ஆள் கடத்தல்காரர்களிடம் ஒப்படைக்கின்றனர். இந்த வருடத்தில் மட்டும் மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் ஆபிரிக்காவில் இருந்து 3 லட்சத்துக்கும் அதிகமான அகதிகள் புலம்பெயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கும், ஐக்கிய நாடுகள் மன்றம், அதில் 2 ஆயிரத்து 500 இற்கும் அதிகமானோர் மத்திய தரைக்கடல் பகுதியில் இன்னல்களில் சிக்கி உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர். இதனிடையே, பாரவூர்திக்குள், சாவடைந்த அந்த 70 பேரும் அவர்களின் ஒட்டு மொத்த பயணத்துக்காக 7 லட்சம் யூரோ வரை வழங்கியிருக்கலாம் எனத் தெரிய வந்துள்ளது. (ஐ)

## நாய் குரைத்ததால் வந்த வினை பொலிஸார் உட்பட 3 பேரைச் சுட்டுக்கொன்ற கொடூரம்

லிஸ்பான்,ஓக.31
போர்த்துக்கல் நாட்டில் நாய் ஒன்று தொடர்ந்து குரைத்ததால் ஆத்திரம் அடைந்த முதியவர் ஒருவர் இரண்டு பொலிஸார் உட்பட 3 பேரை சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனிலிருந்து 30 கி.மீ. தொலைவில் உள்ள நகரில் தான் இந்த அதிர்ச்சி சம்பவம் நிகழ்ந்துள்ளது.
அந்தப் பகுதியில் வசித்து வரும் 77 வயதான முதியவர் ஒருவர் அருகில் உள்ள வீட்டு உரிமையாளரின் வளர்ப்பு நாயால் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளார். நாய் எந்த நேரமும் குரைத்துக்கொண்டே இருந்ததால் எரிச்சல் அடைந்த அந்த முதியவர் அதன் உரிமையாளரிடம் நாயை அடக்கி வைக்குமாறு பல முறை எச்சரிக்கை விடுத்துள்ளார். ஆனால், இந்த நிலை தொடர்ந்து நீடித்ததால் ஆத்திரம் அடைந்த அவர் வேட்டைத் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு போய் நாயின் உரிமையாளரிடம் தகராறில் ஈடுப்பட்டுள்ளார். இந்தத் தகவலை விடுமுறையில் இருந்த பொலிஸார் ஒருவர் அறிந்து பிரச்சினையைத் தடுப்பதற்காகச் சென்றுள்ளார். நிலைமை கட்டுக்கடங்காமல் சென்றதால், முதியவர் பொலிஸாரை நோக்கி சுட்டதில் அவர் சம்பவ இடத்திலேயே இறந்துள்ளார். பொலிஸார் இறந்துவிட்டார் என்பதைக் கேட்டு அதிர்ச்சியுற்று மற்றொரு பொலிஸார் வந்தபோது அவரையும் முதியவர் சுட்டுக்கொன்றுள்ளார். இரண்டாவதாக வந்த பொலிஸாரின் மகன் முதியவரைத் தடுக்க சென்றதில் அவரும் முதியவரின் துப்பாக்கிக் குண்டால் உயிரிழந்தார். இரண்டு பொலிஸார் உட்பட 3 பேரைச் சுட்டுக்கொன்று விட்டு, முதியவரும் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்ய முயற்சித்தபோது அவரை மடக்கி பிற பொலிஸார் கைது செய்தனர்.
நாய் குரைத்ததற்காக முதியவர் 3 பேரின் உயிரை பறித்துள்ள சம்பவம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

## செவ்வாய்க் கிரகம் செல்வோருக்கு தனி அறைக்குள் பயிற்சி

வொஷிங்டன்,ஓக.31
செவ்வாய்க்கிரகம் செல்வோருக்கு தனி அறைக்குள் வைத்து நாஸா மையம் பயிற்சி வழங்கி வருகிறது. 2030 ஆம் ஆண்டில் செவ்வாய் கிரகத்துக்கு மனிதனை அனுப்ப நாஸா திட்டமிட்டுள்ளது. அதற்குத் தகுந்தால் போன்ற சூழ்நிலையில் மனிதர்கள் வாழப் பயிற்சி அளிக்கப்படுகிறது.
அதற்காக அமெரிக்காவில் ஹவாயில் உள்ள மவுனா லோவா



எரிமலைப்பகுதியில்கூண்டுபோன்ற பிரத்தியேக அறை உருவாக்கப்பட்டுள்ளது. அந்த அறை 20 அடி உயரம் மற்றும் 36 அடி அகலத்தில் உள்ளது. இதற்கு ஹி–சீஸ் என பெயரிடப்பட்டுள்ளது. அதில் 6 பேரைத் தங்க வைத்து, செவ்வாய்க் கிரகத்தில் வாழும் சூழ்நிலை தொடர்பான பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டது. அதில் ஜேர்மனியைச் சேர்ந்த இயற்பியல் நிபுணர், அமெரிக்காவைச் சேர்ந்த விமானி, கட்டடகலை நிபுணர், பத்திரிகையாளர், மண்ணியல் விஞ்ஞானி மற்றும் பிரான்ஸைச் சேர்ந்த நிபுணர் என 6 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
இதற்கு முன்பு 2 குழுக்களைச் சேர்ந்தவர்கள் 4 மாதம் மற்றும் 8 மாதங்கள் தங்கி பயிற்சி பெற்றுள்ளனர். தற்போதுதான் நீண்ட நாள்கள் பயிற்சி பெற 6 பேர் கொண்ட குழு கூண்டு அறைக்குள் சென்றுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானிஸ்தானில் தீவிரவாதிகள் 100 பேர் சாவு



காபூல்,ஓக.31
ஆப்கானிஸ்தான் நாட்டின்,ஹெல்மாண்ட் மாகாணத்தில் முசா காலா மாவட்டத்தில் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை அந்த நாட்டின் இராணுவம் முழு வீச்சில் மேற்கொண்டு வருகிறது.
இந்த நிலையில், கடந்த சில நாள்களாக அங்கு நடைபெற்று வரும் தாக்குதல்களில் 100 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் உயிரிழந்து விட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. அதேபோன்று இராணுவத் தரப்பிலும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகினாலும், சாவு எண்ணிக்கை பற்றி உறுதியான தகவல்கள் வெளியிடப்படவில்லை. (ஐ)

# அல்-ஜசீரா ஊடகவியலாளர்களுக்கு 3 வருடங்கள் சிறைத்தண்டனை



கெய்ரோ,ஓக.31
எகிப்தில் அனுமதியின்றி செயல்பட்ட அல்- ஜசீரா தொலைக் காட்சியின் ஊடகவியலாளர்கள் மூவருக்கு தலா மூன்று வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. எகிப்தில் கடந்த 2013 ஆம் ஆண்டு முகமது மொர்ஸி தலைமையிலான முஸ்லிம் சகோதரத்துவ ஆட்சி அகற்றப்பட்டது. அப்போது ஏற்பட்ட கலவரத்தைச் செய்தியாக வெளியிட்ட அல் -ஜசீரா தொலைக் காட்சியின் ஆஸ்திரேலிய, கனடா, டென்மார்க் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் கடந்த 2013 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கைது செய்யப்பட்டனர். அவர்கள் உரிய ஊடக அனுமதியின்றி ஒளிபரப்புக் கருவிகளை இயக்கியதாகவும், தவறான செய்தியை ஒளிபரப்பியதாகவும், அது நாட்டுக்குத் தீங்கு விளைவிக்க கூடியது என்றும் வழக்குத் தொடரப்பட்டது.
இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம், அல்- ஜசீரா ஊடகவியலாளர்கள்; மூவருக்கும் 3 வருடங்கள் சிறைத் தண்டனை விதித்து நேற்று தீர்ப்பளித்துள்ளது. தீர்ப்பு வாசிக்கப்பட்டதும் நீதிமன்ற அறையில் இருந்த ஊடகவியலாளர்கள் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் மற்றும் தண்டனை பெற்ற ஊடகவியலாளர்களின் குடும்பத்தினர் கடும் அதிருப்தியுடன் வெளியேறினர். தண்டனை பெற்ற ஊடகவியலாளர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்குவது தொடர்பாக தூதர்கள் மூலம் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

# மலேசியப் பிரதமருக்கு எதிராகப் போராட்டம்

## ஊழல் குற்றச்சாட்டின் எதிரொலி



கோலாலம்பூர்,ஓக.31
ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகியுள்ள மலேசியப் பிரதமருக்கு எதிராக பொலிஸாரின் தடையையும் மீறி அந்த நாட்டின் தலைநகரில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சில மாதங்களுக்கு முன்பு பிரதமர் நஜிப் ரஸாக்கின் தனிப்பட்ட வங்கிக் கணக்கில் பலநூறு மில்லியன் டொலர் பணம் இருப்பது தெரியவந்தது. அதனைத் தொடர்ந்து எதிர்கட்சிகள் அவரைப் பதவி விலகும் படி கூறி வருகிறார்கள். ஆனால் அவர் தனது வங்கிக் கணக்கில் இருப்பது நன்கொடைப் பணம் என்றும் தான் எந்தக் குற்றமும் செய்யவில்லை என்றும் தெரிவித் துள்ளார்.
ஆனால் நேற்று முன் தினம், அவரைப் பதவி விலகும்படி வற்புறுத்தி கோலாலம்பூரில் மக்கள் ஆயிரக் கணக்கில் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.
இந்தப் போராட்டம் மற்றும் பேரணிகள் நேற்றும் தொடர்ந்துள்ளன. போராட்டக்காரர்கள் தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்கும் பொருட்டு மஞ்சள் நிற உடை அணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ)

# நிலச்சரிவில் 15 பேர் சாவு

பீஜிங்,ஓக.31
சீனாவில் யுனான் மாகாணத்தில் உள்ள ஒரு கிராமத்தில் கடந்த வாரம் திடீர் நிலச்சரிவு ஏற்பட்டது. அதில் ஒரு வீதியின் பெரும்பகுதி மண்ணோடு மண்ணாகப் புதைந்து போனது. அதில் சம்பவ இடத்திலேயே 3 பேர் உயிரிழந்தனர். 12 பேர் மாயமானார்கள். அவர்களைத் தேடும் பணியில் மீட்புப் படையினர் 200 பேர் ஈடுபடுத்தப்பட்டனர். (ஐ)

# ஐ.எஸ். அமைப்புக்கு பாகிஸ்தான் திடீர்த் தடை

சிரியா மற்றும் ஈராக்கில் பேராதிக் கம் செலுத்திவரும் ஐ.எஸ். எனப் படும் இஸ்லாமிய அரசு தீவிரவாத இயக்கத்துக்கு பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளதாக அந்த நாட்டின் உள்த்துறை அமைச்சக உயரதி காரி ஒருவர் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானின் எல்லையோர நாடான ஆப்கானிஸ்தானிலும் தனது காலை ஊன்ற முயலும் ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தில் பாகிஸ்தானைச் சேர்ந்த தலிபான் தீவிரவாதக் குழுவினர் இணைந்து வருவதாக அண்மையில் தகவல் கள் வெளியாகியிருந்தன. அதன் விளைவாகத் தங்களது நாட்டிலும் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கம் தலைதூக்கி விடுமோ? என்ற அச்சத்தில் பாகிஸ்தான் அரசு இந்தத் திடீர்த் தடையை விதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நடுக்கடலில் படகு கவிழ்ந்து 200 பேர் சாவு






திரிபோலி, ஓக.31
லிபியாவின் நடுக்கடலில் நேற்று முன்திம் மேலும் ஒரு படகு கவிழ்ந்ததில் 200 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 200 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர். வட ஆபிரிக்க நாடான லிபியாவில் உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. அங்கிருந்தும், பிற ஆபிரிக்க நாடுகளில் இருந்தும், பாகிஸ்தான், சிரியா, மொராக்கோ, பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளில் இருந்தும் ஏராளமா னோர் அகதிகளாக ஐரோப்பிய நாடுகளுக்குச் சட்டவிரோதமாகப் படகுகளில் செல்கின்றனர். அவ்வாறு அகதிகளை அளவுக்கு அதிகமாக ஏற்றிச் செல்லும் படகுகள், நடுக்கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகி பலத்த உயிர்ச் சேதத்தை ஏற்படுத்தி வருவது தொடர் கதை ஆகி வருகிறது. கடந்த 26 ஆம் திகதி இவ்வாறு ஒரு படகு, லிபியாவின் நடுக் கடலில் கவிழ்ந்து விபத்தைச் சந்தித்ததில் 51 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் மேலும் ஒரு படகு, லிபியாவில் ஜுவாரா நகரில் இருந்து ஒரு கி.மீ. தொலைவில் நடுக்கடலில் கவிழ்ந்தது. இந்த ஜுவாரா நகர், துனிசியா நாட்டு எல்லையில் உள்ளது. இத்தாலிக்கு அகதிகளை ஏற்றிச் செல்வதற்கு மையம் போல இந்த நகரம் தான் செயல்பட்டு வருகிறது. கவிழ்ந்து விபத்துக்குள்ளான படகில் 400 இற்கும் மேற்பட்டோர் பயணம் செய்ததாகவும், அவர்கள் ஆபிரிக்கா, பாகிஸ்தான், சிரியா, மொராக்கோ, பங்களாதேஷ் நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் தகவல்கள் தெரிவித்துள்ளன.
இத்தாலிக் கடலோர காவல் படையினரும், ஐரோப்பிய யூனியன் மீட்புப் படையினரும் மீட்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். 200 பேர் பத்திரமாக மீட்கப்பட்டு விட்டதாகவும், 200 பேர் உயிரிழந்து விட்டதாகவும் முதல் கட்ட தகவல்கள் கூறுகின்றன. படகில் 40 பேரின் உடல்கள் இருந்ததாகவும், 160 பேரின் உடல்கள் கடலில் மிதந்ததாகவும் தெரிய வந்துள்ளது. சுமார் 100 பேரது உடல்கள் மீட்கப்பட்டு, ஜுவாரா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்டவர்களில் 1[illegible] பேர் திரிபோலி நகருக்கு மேற்[illegible] உள்ள சப்ரதாவில் உள்ள சி[illegible]யில் அடைக்கப்பட்டுள்ள[illegible] இந்த வருடத்தில் மட்டும் மத்[illegible] தரைக்கடல் பகுதியில் படகு[illegible] கவிழ்ந்து விபத்துக்குள்ளான[illegible] சாவு எண்ணிக்கை 2 ஆயிர[illegible] 500 ஐத் தாண்டி விட்டதாக ஐ.[illegible] சபை வெளியிட்டுள்ள புள்[illegible] விவரங்கள் தெரிவித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியை மட்டும் கவசமாகக் கொண்ட தமிழினம்

யாழ். ஆனந்தன்

தமிழர்கள் அந்நியரால் கையாடப் பெற்ற தாய்நிலத்தை மீளவும் பெறுவதற்காகப் போராடுகின்றனர். இந்தியாவில் தமிழகத்தின் விடிவு மத்திய அரசினால் அடக்கப்பட்டு விட்டது. அதேபோல் இலங்கையில் தமிழீழக் கோரிக்கையை இலங்கை அரசு இராணுவ ரீதியாக அடக்கி உள்ளது. அதனைச் சட்ட ரீதியாகவும் தடுத்து உள்ளது. தமிழர்கள் உரிமையைக் கேட்டால் அவர்களைப் பயங்கரவாதிகளாகக் கருதும் வழமை இன்றும் உள்ளது.

இந்த நிலையில் 2008 – 2009 இல், வடக்கு கிழக்கில் தமிழீழத்தை அமைத்து நிர்வகித்த தமிழீழ விடுதலைப் புலிகளை அழிக்க சர்வதேச ஒத்துழைப்புடன் இலங்கை அரசு பெரிய இனப்படுகொலையை நிகழ்த்தியது. இதில் சுமார் 140,000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பல்லாயிரக் கணக்கானவர்கள் சித்திரவதைக்கு உட்பட்டனர். பல பெண்கள் பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வழிவுகளை இனப்படுகொலை எனக் கூறுவதற்கு சர்வதேசம் தயங்குகின்றது. ஏனெனில் இனப்படுகொலை எனக் கூறின் ஈழத்தமிழர்களுக்குத் தனி நாட்டை அளிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே சர்வதேசம் போர்க்குற்ற விசாரணை என்ற பெயரில் நடந்த அழிப்புக்களை காலத்துடன் மழுங்கடிக்க முனைந்தது. அதனை இலங்கை அரசு சில சட்டவிதிகளை வைத்து



ஏற்றுக்கொள்ளவில்லை. இறுதியாக உள்நாட்டுப் பொறிமுறை எனக்கூறி உலக அரங்கில் இருந்து இன அழிப்புத் தடயத்தை அகற்ற முனைகின்றது.

அடுத்து போர்க் குற்றம் எனும்போது போர் நாடுகளுக்கு இடையே ஏற்படுவது. இதனால் போர் என்ற சொல்லையும் போர்க்குற்ற விசாரணை என்ற சொல்லையும் இலங்கை அரசு தற்போது தவிர்க்க முனைகிறது. ஏனெனில் போர் . என்றால் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்படுவது. எனவே போர்க் குற்ற விசாரணை என ஒன்று நடந்தால் தமிழரின் நாட்டை மீளவும் கொடுக்க வேண்டும் என்ற பொருள்வந்துவிடும்.

இந்த நிலையில் தென்னிலங்கை அரசு, மைத்திரி, ரணில் , மஹிந்த என்று வேறுபட்டு இருந்தாலும் ஒரே அணியாக உள்ளது. ரணிலுக்கு மேற்குலகினதும் ஐ.நாவினதும்

> சுமார் 140, 000 தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். பல்லாயிரக் கணக்கானவர்கள் சித்திரவதைக்கு உட்பட்டனர். பல பெண்கள் பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். இவ்வழிவுகளை இனப்படுகொலை எனக் கூறுவதற்கு சர்வதேசம் தயங்குகின்றது. ஏனெனில் இனப்படுகொலை எனக் கூறின் ஈழத்தமிழர்களுக்கு தனி நாட்டை அளிக்க வேண்டிய நிலை ஏற்படும்.

ஆதரவு உள்ளது. மைத்திரிக்கு இந்தியாவின் ஆதரவு உள்ளது. மஹிந்தவுக்கு சீனாவின் ஆதரவு உள்ளது. ஒட்டுமொத்த உலகமே ஈழத்தமிழுக்கு எதிராகவே உள்ளது. தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகளும் கிடைக்கவேண்டிய நீதியுமே தமிழர் மீதான கொடிய போருக்கான தமிழர் தரப்புக் கவசங்கள். தமிழர் தரப்பில் சவால்களை எதிர்கொள்ள உள்நாட்டு, புலம்பெயர், தமிழ் மக்கள் தயாராக வேண்டும். வெறுமனே அரசியல் செயற்பாட்டாளர்களை நம்பினால் தமிழர்களின் விடிவு என்பது தொடுவானத்தை அடைவது போலவே அமையும்.

# யூனியன் வங்கி டிசா சர்வதேச பற்று அட்டையை அறிமுகம்




சந்தை முதலீட்டுத் துறையில் இலங்கையின் முதன்மை ஐந்து தனியார் வங்கிகளில் ஒன்றாக திகழ்வதுடன், நாட்டில் துரித வளர்ச்சியை பெற்று வரும் வங்கிகளில் ஒன்றாகவும் விளங்கும் யூனியன் வங்கி, வேகமாக விஸ்தரிக்கப்படும் அதன் சில்லறை வங்கியியல் துறையில் மற்றுமொரு மைல் கல்லாக, யூனியன் வங்கி விசா சர்வதேச பற்று அட்டையை அறிமுகம் செய்துள்ளது.

பிளாட்டினம் மற்றும் கிளாசிக் ஆகிய பிரிவுகளில் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் யூனியன் வங்கி விசா சர்வதேச பற்று அட்டையானது, தனித்துவமிக்க, கவர்ச்சிகரமான சலுகைகள் மற்றும் ஏராளமான கட்டணக்கழிவு வழங்கல்களை அட்டை உரிமையாளர்கள் பெற்றுக்கொள்வதற்கு வழிவகுப்பதோடு, ஒன்லைன் கொடுக்கல் வாங்கல் மற்றும் பில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதையும் இலகுவாக்குகின்றது.

யூனியன் வங்கி விசா சர்வதேச பற்று அட்டையைப் பெறும் வகையில் விண்ணப்பிப்பது மிக இலகுவானது. அதற்கு நீங்கள் யூனியன் வங்கியில் நடைமுறை அல்லது சேமிப்புக் கணக்கொன்றைப் பேணுவதே போதுமானது.

இந்த அட்டையானது உங்கள் பரிவர்த்தனைகள் குறித்த இலவச எஸ்.எம்.எஸ் அறிவித்தல்கள் உள்ளிட்ட பல்வேறு பெறுமதி சேர்க்கைகளை அளிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.


இது குறித்து கருத்துரைத்த யூனியன் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி இந்திரஜித் விக்கிரமசிங்க , விசா போன்ற சர்வதேச வர்த்தக நாமத்துடன் யூனியன் வங்கி கொண்டுள்ள பங்குடமையானது, சிறப்பான பெறுமதியை அளிப்பதோடு மட்டுமல்லாமல், வாடிக்கையாளருக்கு 1 மில்லியன் [illegible] பட்ட விசா ஏ.ரி.எம்களுக்கான [illegible] கம் மற்றும் சர்வதேச ரீதியில் 29 மில்லியன் விசா வசதி கொண்ட வணிகர்களுடன் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளக்கூடிய வசதி ஆகியவற்றை அளிப்பதன் ஊடாக சௌகரியமான வங்கியியல் அனுபவத்தையும் தருகின்றது.

யூனியன் வங்கி விசா சர்வதேச பற்று அட்டையின் அங்குரார்ப்பணமானது, வாடிக்கையாளர் களின் சௌகரியத்தை மேலும் மேம்படுத்தும் நோக்கிலும், சில்லறை வங்கியியல் சேவையை வலுப்படுத்தும் நோக்கிலும் தொடர்ச்சியாக வங்கியினால் முன்னெடுக்கப்படும் மேம்படுத்தும் முனைப்புகளை வெளிப்படுத்தும் ஒரு மைல் கல்லாகவும் விளங்குகின்றது.

யூனியன் வங்கி விசா சர்வதேச பற்று அட்டையானது வெறுமனே ஒரு ஏ.ரி.எம் அட்டையாக மாத்திரமல்லாமல், பல்வேறு மேலதிக அனுகூலங்களுடன் அதிசிறந்த சலுகைகள், கட்டணக்கழிவுகள் ஆகியவற்றையும் வருடம் முழுவதும் வழங்குகின்றது என்றார்

இந்த யூனியன் வங்கி விசா சர்வதேச பற்று அட்டையானது, 2015 ஆகஸ்ட் மாதம் 3ஆம் திகதி, சினமன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்ற அங்குரார்ப்பண வைபவத்தில் வைத்து விசா சேவைகளுக்கான சிரேஷ்ட பணிப்பாளர் ராமா தடேபள்ளியால் யூனியன் வங்கியின் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான இந்திரஜித் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இலங்கையின் முன்னணி வங்கிகளில் ஒன்றான யூனியன் வங்கி, ஆசியா மற்றும் ஐரோப்பாவில் குறிப்படத்தக்க இருப்பினை பதிவுசெய்துள்ள, ஐக்கிய அமெரிக்காவைத் தளமாக கொண்டுள்ள சர்வதேச [illegible] வலையமைப்பினால் [illegible]ப்பட்டுள்ளது. (த)




## அங்கர் பேஸ்ட்ரி சவால் 2015' இல் உள்நாட்டு சமையற் கலைஞர்கள்

பொன்டெரா பிரான்ட்ஸ் ஸ்ரீ லங்கா மற்றும் இலங்கை சமையற்கலை நிபுணர்கள் சம்மேளனம் ஆகியன இணைந்து முன்னெடுத்த அங்கர் பேஸ்ட்ரி சவால் 2015 இன் வெற்றியாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வெற்றியாளர்களை அறிவிக்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்த போட்டியில் முதலாம் பரிசான 100,000 ரூபாயை, நுவரெலியா கிராண்ட் ஹோட்டலின் சமையல் நிபுணரான ஷாலித சமரவிக்ரம தனதாக்கியிருந்தார். இந்த ஆண்டின் பிற்பகுதியில் சிங்கப்பூ ரில் நடைபெறும் ஆசியா பேஸ்ட்ரி கப் போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

ஹபரன சினமன் லொட்ஜ் சமையல் நிபுணரான ஆர்.ஜி.எம்.என். ஜயரட்ன இரண்டாமிடத்தையும், பேருவளை ஈடன் ஹோட்டலின் சமையல் நிபுணரான தர்ஷினி நிர்மானிகா மூன்றாமிடத்தையும் தனதாக்கிக் கொண்டனர்.

மாபெரும் இறுதிப் போட்டியில் நாட்டின் வெவ்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஒன்பது சமையல் நிபுணர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டியிருந்தனர்.

கேக் வகைகள் மற்றும் டி.செர்ட் வகைகள் ஆகிய இரு பிரிவுகளில் இடம்பெற்ற இந்த போட்டியின் போது, சுவை, சேர்மானம், வேளையின் அளவு, தயாரிப்பு பகுதியின் தூய்மை, செயற்படும் நுட்பம், நடைமுறைச் சாத்தியமான மற்றும் நிலையான செயற்பாடுகள் போன்றவற்றின் அடிப்படையில் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தப்பட்டோரின் காதில் ஏறுமா?

நல்லூர்ப்பிரதேச சபையின் நிர்வாகப் பிரிவின் கீழ்வரும் திருநெல்வேலி கலாசாலை – வீதி 6 ஆம் ஏழாம் ஒழுங்கைகளின் ஒரு பக்க வாட்டில் முத்துத்தம்பி வித்தியாலயத்துக்கு அண்மித்ததாகக் காணப்படும் வெற்றுக் காணிப் பகுதியில் குப்பைகள் கழிவுப் பொருள்கள், சமையலறைக் கழிவுப் பொருள்கள் என்பன பெருமளவில் கொண்டு வந்து வீசப்படுவதால் அந்தப் பகுதியை அண்டிய வீடுகளில் குடியிருப்போர் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. உணவுக்காகக் கொல்லப்பட்ட கோழிகளது எச்சங்கள் மற்றும் கழிவுகள் உரப்பைகளில் கட்டிக்கொண்டு வரப்பட்டு வெற்றுக் காணியில் வீசப்படுகின்றன. அத்தோடு ஏட்டிக்குப் போட்டிபோன்று பொலித்தீன் பைகளில் நிறைக்கப்பட்ட பழுதுபட்ட மீதி உணவுகள், சமை யலறைக் கழிவுப் பொருள்கள் என்பவை மட்டு மன்றி வீட்டுச் சுற்றாடலில் உள்ள தேவையற்ற கழிவுப் பொருள்களும் குறித்த வெற்றுக் காணிப் பகுதியில் வீசப்பட்டு வருகின்றன.

பழைய சாமான்கள் சேகரிப்போர் குறித்த உரப் பைகளையும், பொலித்தீன் பைகளையும் பிரித்துப் தமக்கு தேவையானவற்றை எடுத்துக்கொண்டு மீதமுள்ள கழிவுகளை அங்கும் இங்கும் பரவும் விதத்தில் வீசிச் செல்கின்றனர். இவற்றுக்கெல்லாம் மேலாக அந்த இடத்தில் ஒன்று கூடும் கட்டாக்காலி நாய்கள் அந்தக் கழிவுகளை மென்மேலும் சேதமாக்கி பாதை உட்பட பல பகுதிகளுக்கும் பரவச் செய்யும் கைங்கரியத்தை நிறைவேற்றுகின்றன.

இதன் காரணமாக இந்த வழியில் பயணிப்போர் மூக்கைப் பொத்திக்கொண்டே அந்த இடத்தைத் தாண்டிச் செல்ல நேரிடுகிறது. அந்தப் பகுதியில் ஐதாக வசிக்கும் குடியிருப்பாளர்களும் இத்தகைய சுகாதாரச் சீர்கேட்டால் பெரும் சிரமங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.

இவை யாவற்றையும் விட மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய அம்சம் என்னவெனில், இந்த இடத்துக்கு மிக நெருக்கமாக அமைந்திருக்கும் முத்துத்தம்பி வித்தியாலயத்தின் மாணவர் விடுதிகளில் தங்கிக் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உணவு தயாரிக்கும் சமையலறை மற்றும் மாணவர்விடுதி என்பனவும் இந்த வெற்றுக் காணியின் அருகிலேயே அமைந்திருப்பதாகும். சுற்றுச் சூழல் சுகாதாரம், இளம் சந்ததியினரது உடல் சுகாதாரம் என்பன உரிய முறையில் பேணப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்படும் இன்றைய காலகட்டத்தில், இத்தகைய சுற்றுச்சூழல் சுகாதாரச் சீர்கேட்டால் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்படும் என்பதை எந்தவொரு தரப்பினரும் கணக்கில் எடுக்காது ஏனோ தானோ மனப்போக்கில் செயற்படுவது கவலை தருமொன்று. குறிப்பாக மழைகாலம் ஆரம்பிக்க உள்ள நிலையில் இத்தகைய சுற்றுச்சுகாதாரச் சீர்கேடு, நுளம்புகளின் பெருக்கத்துக்கு வழிவகுத்து மலேரியா, டெங்கு போன்ற நுளம்புகளால் பரவும் தொற்று நோய்களுக்கு வழிவகுக்கும் அபாயம் எமது கண் முன்னாலேயே தெளிவாகத் தெரிகிறது. இலையான் தொல்லைகளால் மாணவச் சமுதாயத்தினர் பாதிப்புறும் ஏது நிலை கண்முன்னே தெரிகிறது.

இத்தனைக்கும் இந்த சுகாதாரச் சீர்கேட்டைப் போக்கி, நிலைமையை நேர்சீர் செய்து தருமாறு இந்தப் பகுதி மக்கள் பொறுப்புள்ள நல்லூர்ப் பிரதேசசபை நிர்வாகத்தின் கவனத்துக்கு ஒரு முறை, இருமுறை அல்ல, பலதடவைகள் வேண்டுகோள் விடுத்தும் அவையாவும் செவிடன் காதில் ஊதிய சங்கொலி போல் ஆனதே தவிர உருப்படியான எந்த நடவடிக்கையும் பிரதேச சபை நிர்வாகத்தால் மேற்கொள்ளப்படவில்லை.

தமது நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதியில் பொது மக்களது சுகாதார மேம்பாட்டை உறுதிசெய்யும் பொறுப்புள்ள பிரசேதசபை நிர்வாகத்துக்கு அந்தப் பொறுப்பை விட வேறு பல அரசியல் பின்னணி கொண்ட விழிப்புணர்வூட்டல், அறிவுறுத்தல் என்பவற்றின் ஊடாக ஊடகங்களுக்குச் செய்தித் தீனி வழங்கி பிரபல்யம் ஈட்டிக் கொள்வது பெறுமதி மிக்கதாகத் தெரிந்திருக்கக் கூடும். ஆயினும், பிரதேச சபையின் நிர்வாக ஆயுள்காலம் முடிவடைந்துள்ள நிலையில் , அடுத்துவரும் பிரதேசசபை நிர்வாகத்தில் பதவிக் கதிரைகளைக் கைப்பற்ற மக்கள் தொண்டர்களெனத் தம்மைக் கூறிக் கொள்ளும் இவர்கள் எல்லாம் வாக்குப் பிச்சை கோரி எம்மிடம் வரத்தானே போகிறார்கள். அப்போது இது குறித்து அவர்களுடன் பேசிக் கொள்வோமே!

அடுத்த தேர்தலின் பின்னர் புதிய பிரதேசசபை நிர்வாகம் அமையும் வரை, பிரதேசசபையின் செயற்பாடுகளை முன்னெடுத்து நிறைவேற்ற வேண்டிய நிர்வாக அதிகாரியாவது இது விடயம் குறித்து கருத்தில் எடுத்து, சமூகப் பாதிப்பையும், சுற்றுச்சூழல் பாதிப்பையும் ஏற்படுத்தி வரும் இந்தக் குப்பை' விடயம் தொடர்பில் வேண்டிய உரிய நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட பகுதியில் வசிக்கும் எம் மக்களை நோய் நொடிகளில் இருந்து




காப்பாற்ற முன்வரவேண்டும் என இத்தால் வேண்டுகோள் விடுக்கின்றோம். ஏனெனில் நாம் நோய் நொடித் தாக்கத்தில் இருந்து தப்பிப் பிழைத்து மகிழ்ச்சியாக வாழமுடிந்தால் தானே எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் எமது மக்கள் சேவகர்களுக்கு வாக்களித்து மக்கள் நலனில் அக்கறை காட்டும் பிரதேசசபை உறுப்பினர்களுக்கு வாக்களித்து வெற்றி பெற வைத்து, பொறுப்புள்ள, பலம்மிக்க, பிரதேசசபை நிர்வாகம் ஒன்றை உருவாக்க முடியும். அதுவரை நாங்கள் உயிர்பிழைத்திருக்க வேண்டுமே?

எனவே தற்போதைய பிரதேசசபையின் நிர்வாக அதிகாரி இது விடயத்தில் கவனம் செலுத்தி எமது கிராம மக்களுக்கு பரிகாரம் தேடித் தருமாறு வேண்டுகின்றோம்.

***குறித்த பிரதேசத்தின்,***
***நலன்விரும்பிகள்.***

## கேலிச் சித்திரம்




நன்றி: மவ்பிம

# உள்ளூர் உற்பத்திக்கு வாய்ப்பளியுங்கள்

யாழ்.குடாநாட்டில் தற்போது மஹோற்சவ காலம். எல்லாக் கோயில்களிலும் திருவிழாக்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்தத் திருவிழாவிற்காக புலம் பெயர் தேசங்களிலிருந்தும் பலர் இங்கு வந்துள்ளனர்.

கோயில்களில் தற்போது திருவிழாக்கள் பெரும் ஆடம்பரமாக - பெரும் எடுப்பாகவே நடக்கின்றன. ஊரிலுள்ள ஒவ்வொரு திருவிழா உபயகாரர்களிடமும் முதல் திருவிழாவை விஞ்சும் வகையில் அடுத்த திருவிழா அமைய வேண்டும் என்பதில் அக்கறை காணப்படுகின்றது. அந்தளவு தூரத்துக்குப் பணம் பாடாய்ப்படுத்துகின்றது.

கொஞ்சக் காலத்துக்கு முன்னர் வரையும் ஆலயங்கள், வழிபாட்டுக்குரிய இடமாக மாத்திரமே இருந்தன. தற்போது களியாட்டங்கள் நடக்கும் அளவுக்கு நிலைமை மாறிக் கொண்டிருக்கின்றது. இரவிரவாகத் திருவிழா நடத்துவது வரையில் இது நீண்டு சென்று கொண்டிருக்கின்றது.

இவையெல்லாம் ஒரு புறம் இருக்கட்டும். ஆலயங்களில் திருவிழாவுக்குச் செல்பவர்கள் அர்ச்சனை செய்வது வழமை. அதிலும் வெளிநாட்டில் இருந்து வந்திருப்பவர்கள் அர்ச்சனை செய்யாமல் போகமாட்டார்கள். முன்னர்தான், வீட்டிலிருந்து அர்ச்சனைத் தட்டு எடுத்துச் செல்வார்கள். இப்போது எல்லாம் கோயில் வாசலில் அர்ச்சனைத் தட்டைக் காசு கொடுத்து வாங்கிச் செல்கின்றார்கள்.

கடையில் விற்கப்படும் அர்ச்சனைத் தட்டுக் கூட மாறிவிட்டது. இப்போது பிளாஸ்ரிக்காலான அர்ச்சனைத் தட்டையே கடைகளில் விற்கின்றனர். அர்ச்சனைத் தட்டில் வைக்கப்படும் பழ வகைகள் கூட மாறி விட்டன. அது ஒரு புறம் இருக்கட்டும்.

முன்னர் கோயில்களில், பனை ஓலையினாலான பெட்டிகள் இழைத்து வைத்திருப்பார்கள். அவையே அர்ச்சனைப் பெட்டியாகப் பயன்பட்டு வந்தன. பனை, யாழ்ப் பாணத்தின் வளம். யாழ்ப்பாணத்தின் அடையாளம். பனை மரத்தை நம்பி எத்தனையோ குடும்பங்கள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவர்களது வாழ்வாதாரத்தில் கை வைப்பது போல, தற்போது பிளாஸ்ரிக் அர்ச்சனைத் தட்டங்கள் கடைகளில் உலாவந்து கொண்டிருக்கின்றன.

பிளாஸ்டிக் சுற்றுச் சூழலுக்குக் கேடு என்பதற்கு அப்பால், இந்தப் பிளாஸ்ரிக் அர்ச்சனைத் தட்டங்கள் எவையுமே இங்கு உருவாக்கப்படுவதில்லை. அவை தென்பகுதியிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றன. எமது உள்ளூர் வளத்தைப் பயன்படுத்தி, உள்ளூர் உற்பத்தியாளர்கள் செய்யும் பனை ஓலையினாலான அர்ச்சனைப் பெட்டிகளைத் தற்போது எவரும் கண்டு கொள்வதில்லை.

உள்ளூர் உற்பத்தியாளர்கள் தமக்கான சந்தை வாய்ப்புக்கள் போதாமல் இருக்கின்றன என்று சொல்லிக் கொண்டிருக்கின்றனர். அவர்களுக்கு திருவிழாக் காலத்தில் கிடைக்க வேண்டிய இந்த வாய்ப்பையும் தட்டிப் பறிக்கும் விதத்தில் நாமே செயற்பட்டுக் கொண்டிருப்பது நியாயமானதா ?

வடக்கு மாகாண விவசாய மற்றும் சுற்றுச் சூழல் அமைச்சு ஆறு மாதங்களுக்கு முன்னர், பிளாஸ்டிக் பாவனையை வடக்கில் தடை செய்வது பற்றிப் பேசியிருந்தது. ஆனால் அதுவும் பேச்சோடு மாத்திரம் இருக்கின்றது. இந்தப் பிளாஸ்ரிக் அர்ச்சனைப் பெட்டிகளைத் தடை செய்தால், மீளவும் பனை ஓலை அர்ச்சனைப் பெட்டிகள் சந்தைக்கு வரும்.

இந்த வருடம் இதைச் செய்யாவிட்டாலும், இனியாவது - அடுத்த திருவிழாவிலாவது பனை ஓலை அர்ச்சனைப் பெட்டிகளைக் கோயில் கடைகளில் எதிர்பார்க்கலாம்.

மேலும் பிளாஸ்ரிக் கழிவுகளால் சுற்றுச் சூழல் பெரிதும் பாதிக்கப்படுவதோடு மனிதர்களின் ஆரோக்கியத்துக்கும் கேடுவிளைகின்றது. மண்ணுக்குள் உக்காத நிலையில் பிளாஸ்ரிக் கழிவுகள் தேங்கிக் கிடப்பதால் மண்ணின் வளமும் பாதிக்கப்படுகின்றது. இதனால் பயிர்களின் வளர்ச்சியும் குறைந்து செல்கின்றது.

மனிதர்கள் தமது இலகுவான பாவனையை மட்டுமே கருத்தில் கொள்கின்றனர். ஆனால் பிளாஸ்ரிக் பொருள்களால் தமக்கு ஏற்படுகின்ற கெடுதல் தொடர்பாகச் சிறிதளவும் எண்ணிப் பார்ப் பதில்லை.

பிளாஸ்ரிக் … இல்லாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன் நிலைப்பாட்டை விளக்குமா?

இலங்கையில் நடந்து முடிந்த போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ள போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்றுவதில் முன்னிலையில் இருந்து செயற்பட்ட நாடு அமெரிக்கா.

அந்தத் தீர்மானங்களை எவ்வாறேனும் தடுத்து நிறுத்திவிட இலங்கைத் தரப்பில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் யாவும் முறியடிக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, மனித உரிமைசபையினால் நிறுவப்பட்ட குழுவினரால் நடத்தப்பட்ட விசாரணைகளின் பயனாக உருவாக்கப்பட்டுள்ள அறிக்கை யொன்று, அடுத்த மாதம் சபையின் 30 ஆவது கூட்டத்தொடரின் போது தாக்கல் செய்யப்பட இருக்கின்றது.

அந்த அறிக்கையின் உள்ளடக்கம் எவ்வாறு இருக்கும் என்பது குறித்து பல்வேறு ஊகங்கள் வெளியாகியுள்ள போதிலும்- பெரும்பாலும் முன்னைய ராஜபக்ச அரசுக்கு மாறான அல்லது அதன் முக்கிய நபர்கள் பலரின் மீது மிகப்பெரிய அளவில், தாக்கத்தை ஏற்படுத்துவதாக இருக்கும் என்றே பொதுவாகக் கருதப்படுகின்றது.

போர்க்குற்றம் இழைக்கப்பட்டிருப்பதாகக் கண்டறியப்பட்டிருப்பின், அந்தக் குற்றங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பரிகாரம் வழங்கும் பொறிமுறைபற்றி இப்போது பெரிதாக பிரச்சினை கிளப்பட்டுள்ளது.

போர்க்குற்றம் புரிந்தவர்கள் மீது சர்வதேச விசாரணை குறிப்பாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். தண்டனைகள் விதிக்கப்பட வேண்டும். அது புலம்பெயர் தமிழர்கள் உட்பட சகல தமிழ் தரப்பினரதும் விருப்பம் மட்டுமல்ல அவர்கள் அதையே வற்புறுத்திவருகிறார்கள்.

இலங்கை அரசைப் பொறுத்தவரை, அது உள்ளகப் பொறி முறையாக மட்டுமே இருக்க வேண்டும் என்று விடாப்பிடியான ஒரு நிலைப்பாடே ஓங்கி உள்ளது.

இந்த நிலையில், அமெரிக்கா தனது முந்தைய நிலையை மாற்றிக் கொண்டு இலங்கை அரசின் விருப்பத்துக்கு ஏற்றாற்போல் ஐ.நாவால் செயற் படப் போவதாக அறிவித்திருப்பது உலகத் தமிழர்கள் அனைவரையும் ஏமாற்றத்துக்கு உள்ளாக்கி உள்ளது. தமிழ் நாட்டில் பெரும் எடுப்பில் அமெரிக்காவின் இந்தப் போக்குக்கு எதிராக போராட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கையில் ராஜபக்சவின் சீன ஆதரவு அரசு வீழ்த்தப்பட்டு மேற்கத்திய சார்பு அரசொன்று பதவிக்கு வந்திருப்பது அமெரிக்காவுக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் கூட சாதகமான நிலைமையே. அந்த வகையில் புதிய அரசையும் அதன் தலைவர்களான மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்களையும் தங்கள் அரவணைப்பில் வைத்துக்கொள்ள அவர்கள் விரும்புவதிலும் வியப்பில்லை.

ஆனால் போர் செய்த பாதகத்தால், நேரடியாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை அவர்களுக்கு நியாயம் கிடைப்பதை அமெரிக்காவும் அதன் நேச நாடுகளும் தங்கள் சுயலாபத்துக்காக ஓரம் கட்டிவிட முயல்வது நீதியாகாது. அது மாபெரும் அநீதியாகவும் அக்கிரமுமாகவுமே கருதப்பட வேண்டும்.

சீன சார்பு ராஜபக்ச அரசின் வீழ்ச்சியானது யாரோ அந்தரத்தில் இருந்து போட்ட மந்திரத்தால் நிகழ்ந்த செயல் என்று யாரும் கருதிவிடலாகாது. மாற்றப்படும் அரசும் சர்வதேசமும் தங்களுக்கு நீதி வழங்குவார்கள் என்ற பேராசையில் இந்த மக்கள் போட்ட வாக்குச் சீட்டினால் ஏற்பட்ட பலாபயன் இது என்பதை இலங்கை அரசோ அமெரிக்காவோ எந்தக் கட்டத்திலும் சந்தர்ப்பத்திலும் மறந்துவிட முடியாது.

அண்மையில் இலங்கை வந்திருந்த அமெரிக்காவின் உதவி ராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் வெளியிட்டிருந்த கருத்துக்கள், குறிப்பாக மனித உரிமைகள் சபையில் இலங்கைக்குச் சார்பாக தீர்மானம் ஒன்றை கொண்டு வரவிருப்பதாக வெளியிட்ட கருத்து, தமிழ்மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. போர்க்குற்றங்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை வேண்டும் என்பதே கடந்த தேர்தலின்போது பெரிதாக பேசப்பட்டு வலியுறுத்தப்பட்டது. தேர்தல் முடிந்தகையோடு அவசரமாக இலங்கைக்கு வந்த ராஜாங்க உதவிச் செயலர் தெரிவித்த கருத்துக்களால் அரசுத் தலைவர்களும் ராஜபக்சவினரும் கூட மகிழ்ச்சியடைந்திருந்திருக்கிறார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளும், வேறு சிவில் அமைப்பு பிரமுகர்களும் கூட உள்ளக விசாரணை என்பது வெறும் கண்துடைப்பாகவே முடியப்போகிறது என்று கண்டனம் வெளியிட்டிருக்கிறார்கள். அனைத்துலக விசாரணையையே தாங்கள் வலியுறுத்துவதாகவே அவர்கள் கூறியுள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை மக்களுக்கு அதிகாரபூர்வமாக விளக்கிக் கூறவேண்டிய அவசியமும் கட்டாயமும் ஏற்பட்டுள்ளன. இல்லையெனில் இது விடயத்தில், கூட்டமைப்பின் போக்கும் உள்ளார்ந்த உணர்வும் குறித்து மக்கள் பலத்த சந்தேகம் கொண்டு கிளர்ந்தெழும் நிலை உருவாகக்கூடும்....!

# சமஷ்டி முறையிலான தீர்வே நாட்டின் இன்றைய தேவை



● வந்தியத்தேவர்

நாட்டில் நல்லாட்சி ஒன்றை உருவாக்கும் வகையில் தேசிய அரசு அமையும் என ஜனாதிபதியும், பிரதமரும் கூறிவரும் நிலையில், பொதுத் தேர்தல் முடிந்து ஒரு வாரத்துக்கு மேலாகியும் புதிய அரசை அமைக்க முடியாத நிலை நீடிக்கிறது. ஐ.தே.கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசை அமைக்க முற்பட்ட போதும், தொடர்ந்தும் இழுபறி நிலை காணப்படுவதற்கு அமைச்சுப் பதவிகளே காரணமாகிறது. பதவிகளைப் பங்கிடுவதில் இணக்க நிலை காணமுடியாது தத்தளித்துக் கொண்டிருக்கும் ஆட்சியாளர்களால் பெரிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் எவ்வாறு ஒன்றுபட முடியும் என்பது ஒரு கசப்பான உண்மையே. பொதுத் தேர்தலில் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக் குத் தீர்வு காணப்பட வேண்டும், தேசிய அரசு அமைவதற்குத் தாங்கள் எதிரானவர்களல்ல என்ற நிஜத்தை சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தும் வகையில் மக்கள் மீண்டும் தமது வாக்குகள் ஊடாகத் தெளிவுபடுத்தியுள்ளனர். அமைச்சுப் பதவிகளுக்கு அடி படும் சுயநலப் போக்குள்ளவர்கள் நாட்டின் ஒருமைப்பாட்டுக் கான செயற்பாடுகளில் ஒன்றிணைவது சாத்தியப்படாததே.

தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்கு இந்த அரசு தீர்வு காணும் என்ற நம்பிக்கையுடனேயே தமது வாக்குகளை ஒற்றுமையுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கினார்கள். கூட்டமைப்பினர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு நம்பிக்கையான மனிதர் என்ற வகையில் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்று உறுதிபடக் கூறியிருந்தனர். தற்போது தமிழ் பேசும் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்டுவதற்கு இதுவே நல்ல சந்தர்ப்பம் அதைப் பயன்படுத்திக் கூட்டமைப்பு அரசுடன் கைகோர்க்க வேண்டும் என மாதுளுவாவே சோபித தேரர் வேண்டுகோள் விடுத்துள்ளார். தமிழர்களின் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை இந்த அரசில் அமைச்சுப் பதவிகளை ஏற்க கூட்டமைப்புத் தயாராக இல்லை. அவர்களின் இந்த அறிவிப்பு நியாயமானதே. அறுபது வருடங் களுக்கு மேலாக புரையோடிக் கொண்டிருக்கும் தமிழர்களின் பிரச்சினை களுக்கு உரிய தீர்வு கிடைக்காத பட்சத்தில் தமிழ்ப் பிரதி நிதிகள் அமைச்சுப் பதவிகளை ஏற்பதால் எந்தப் பயனும் கிடையாது. கடந்த காலங்களில் தமிழ்ப் பிரதிநிதிகள் அமைச்சுப் பதவிகளில் இருந்த போதும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் எதுவுமே தீர்க்கப்படவில்லை. வேலை வாய்ப்புக்களில்கூட அவர்கள் திறமை, தகுதிஅடிப்படையில் உள்வாங்கப் படவில்லை. ஐந்து வருடப் பதவிக்காகத் தமிழ் மக்களின் உரிமைகளைத் தட்டிக் கழித்து வருவதை தமிழ்ப் பிரதிநிதிகள் அமைச்சுப் பதவிகளைப் பெறுவதன் மூலம் தொடரக் கூடாது என்பதும் தமிழ் மக்களின் குறிக்கோளாகும். நல்லாட்சி என்ற பந்து, அனைத்து வாக்களர்களினாலும் இப்போது அரசின் பக்கம் அடிக்கப்பட்டுள்ளது. பதவி மோகத்தில் திளைப் பவர்களின் கரங்களில் அது சிக்கிக் கொள்ளாமல் பாதுகாப்பது ஜனாதி பதியினதும் பிரதமரினதும் கடமையா கும்.

எதிர்வரும் ஐந்து ஆண்டுகளுக்கு எந்த ஒரு தேர்தலும் இடம்பெற மாட்டாது என சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார். இந்த அரசு இரண்டுவருடங்களுக்கு மேல் நீடிக்க வாய்ப்பில்லை என்பது மகிந்த ஆதரவாளர்களின் கருத்து. அமைச்சுப் பதவிகளுக்கே பிடுங்குப்பாடு என்றால் முக்கிய பிரச்சினையான தமிழர்களின் பிரச்சினைகளுக்கு மட்டுமன்றி பொருளா தாரம், சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்புக்கள் போன்ற பல தரப்பட்ட பிரச்சினைகளில் இவர்களால் நாடு என்னென்ன பிச்சல் பிடுங்கல்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுமோ என்பதும் மக்கள் மனதை அரித்தெடுக்கும் கேள்வியாக உள்ளது. மக்கள் தாம் விரும்பும் மாற்றத்துக்காது வழங்கிய சந்தர்ப்பத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு உறுப்பினர்களும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்குத் தம்மிடமுள்ள இழு பறிகளைக் களைந்து தகுதியான அரசு அமைய முழுமனதுடன் ஒத்துழைப்பது அவசியம். பிரதமர் ரணில் தலைமையிலான இந்த அரசு நீண்டகாலப் பிரச்சினையான தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய நியாயமான தீர்வை வழங் கும் என்று கலைஞர் மு.கருணா நிதி நம்பிக்கை தெரிவித்துள்ளார். தமிழர்களை ரணில் காப்பாற்றுவது வெறும் கனவே. அதிகாரம் வழங்குவது குறித்து உத்தரவாத மில்லை. மழுப்பலான பதில்களே அவரிடத்தில் இருப்பதாக தமிழக பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் கூறு கிறார். தமிழக அரசியல்வாதிகள் தமது அரசியல் பிழைப்புக்காக எமது பிரச்சினைகளைக் கையில் எடுத்திருந்தாலும் கூட இலங்கைத் தமிழ் மக்கள் போன்று, இந்தியத் தமிழ் மக்களும் எமது பிரச்சினைகளுக்கான தீர்வு கிடைக்க மைத்திரி ரணில் அரசு உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்றே எதிர்பார்க்கின்றனர். சர்வதேசமும் கூட, இதனையே விரும்புகின்றது. இலங்கையில் நல்லிணக்கத்தை முன் நகர்த்த முயற்சிப்பதற்கான மாறுபட்ட தளமொன்று தற்போது கிடைக்கப் பெற்றுள்ளதால் அதனை உரிய முறையில் கையாளப் பதவிப் பிணக்குகளை ஓரங்கட்டி அனைத்துப் பிரதிநிதிகளும் ஒருங்கிணைந்து செயற்படும் பட்சத்தில் தமிழ் மற்றும் சிறுபான்மை மக்களினதும் முழு ஒத்துழைப்பும் அரசுக்குக் கிடைக்கும். சிறப்பான விதத்தில் முன்னோக்கிச் செல்வோம். இப்போது சாதகமான சூழ்நிலை, பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வு குறித்து ரணில் வேறு நம்பிக்கையூட்டியுள்ளார். வடக்கு, கிழக்குக்கென ஒரு தமிழ் அரசு, மத்திய கரையோரப் பகுதிகளுக்கான அரசுகள் என மூன்று சமஷ்டி ஆட்சி முறைகள் இங்கு ஏற்படுத்தப்பட வேண்டும் என முதன் முதலில் இதன் மூலம் அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்படுத்த விரும்பியவரும் காலஞ்சென்ற பிரதமர் பண்டார நாயக்காவே. பின்னாளில் பிரதமராவதற்காக தனது கருத்தை அவர் மாற்றியதால் ஏற்பட்டவினையே கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாகக் காணப்பட்டவை. தற்சமயம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன தமது கட்சி ஸ்தாபகரின் உண்மையான நோக்கத்தைத் தீர்வு விடயத்தில் புரிந்து கொண்டு அந்த இலக்கை நோக்கி நகர்ந்தால் நல்லாட்சி என்பது திண்ணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்தமிழ்மணி

# குழப்ப நிலைக்குள் தள்ளப்பட்டுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி

சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சி யி லி ரு ந் து பிரிந்து சென்றவரான எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கவினால் ஸ்தாபிக்கப்பட்ட கட்சியாகும். பண்டார நாயக்கவால் ஆரம்பிக் கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி இலங் கையை நீண்டகாலம் ஆட்சி செய்த வரலாற்றையும், பெருமை யையும் கொண்டுள்ளது. சிறி லங்கா சுதந் திரக் கட்சி ஆட்சி செய்த காலங் களில் இடதுசாரிக் கட்சி களோடு கூட்டுச்சேர்ந்து போட்டி யிட்டிருக் கின்றது. வெற்றியீட்டிய இடது சாரிக் கட்சிகளையும் இணைத் துக் கொண்டு ஆட்சியும் அமைத் துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு பெரும் சவாலாக இருந்த சிறிலங்கா சுதந் திரக் கட்சி 1956 ஆம் ஆண்டு நடை பெற்ற பொதுத்தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. விவ சாயிகள், தொழிலாளர்கள், ஆசிரி யர்கள் என உள்ளடக்கிய கட்சியாக வளர்ந்திருந்தது. அடிமட்ட மக்க ளின் பேராதரவு பண்டாரநாயக்க வுக்கு அப்போதைய பொதுத் தேர் தலில் கிடைத்ததால் நாட்டின் பிர தான சிங்கள தேசியக் கட்சியாக வும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சரிசமமான கட்சியாகவும் பரிணா மம் பெற்றது.

பண்டாரநாயக்கவால் தோற்றுவிக் கப்பட்ட கட்சியானது சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்றால் பண்டார நாயக்கதான் என்று மக்கள் எண் ணும் அளவுக்கு அந்தக் கட்சியில் பண்டாரநாயக்க குடும்பத்தின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. பிரதமராக பதவி வகிக்கையில் பௌத்த துறவி ஒருவரினால் பண் டாரநாயக்க சுட்டுக்கொல்லப்பட்ட பின்னர் அவரது மனைவியான சிறிமாவோ பண்டாரநாயக்க சுதந்திரக் கட்சியில் தனது அரசியல் ஆதிக்கத்தை நிலை நாட்டியதுடன் உலக வரலாற்றில் முதல் பெண் பிரதமராக தெரிவு செய்யப்பட்ட வரலாற்றுச் சாதனையையும் ஏற் படுத்தினார்.


பண்டாரநாயக்கவுக்கு ஒரு புதல் வரும் இரண்டு புதல்விகளுமாக மூன்று பிள்ளைகள் இருந்தனர். 1970ஆம் ஆண்டு நடுப்பகுதியில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் சிறிமாவோ தலைமையிலான சுதந்திரக்கட்சி மற்றும் இடதுசாரிக் கட்சிகள் ஒன்று சேர்ந்து மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலத் துடன் வெற்றியீட்டி ஆட்சி அமைத் தன. ஐந்து ஆண்டுகள் ஆட்சி செய் வதற்கு மட்டுமே மக்கள் அங்கீ கரித்த நிலையில் தொடர்ந்து சுதந் திரக் கட்சி கூட்டு முன்னணி ஏழு ஆண்டுகள் வரை நாட்டை அதி காரம் செலுத்தியது.

1977ஆம் ஆண்டு நாட்டில் நடை பெற்ற பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஐந்தில் நான்கு பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றி பெற்று ஆட்சி அமைத்திருந்தது.





மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பலமானதொரு சக்தியாக மாற்றி, ஆட்சி அதிகாரத்தைக் கைப் பற்றுவதற்கு முயன்ற சந்திரிகா கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். பதினேழு ஆண் டுகள் வரையில் பலமானதொரு ஆட்சியை இந்த நாட்டில் ஏற்படுத் தியிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆர்.பிரேமதாஸ என்பவர்களின் பிடியிலிருந்து ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்கடிக்க வேண்டிய தருணத்தை எதிர்பார்த்துக் காத் திருந்தார் சந்திரிகா. சுதந்திரக் கட் சியை ஆட்சிக்கு கொண்டு வரு வதில் உறுதியாக இருந்தார்.



1994 ஆம் ஆண்டு நாட்டில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. சந்திரிகா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடதுசாரிக் கட்சி கள் ஒன்று சேர்ந்து பொதுஜன முன் னணி என்ற அமைப்பை ஏற்படுத் திக் கதிரைச் சின்னத்தில் போட்டி யிட்டு பெருவெற்றியை ஈட்டின.

1994ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை சிறிலங்கா சுதந்திரக் கட்சி யைச் சேர்ந்த சந்திரிகா 11 ஆண்டு களும், மகிந்த ராஜபக்ச 9 ஆண்டு களும் ஜனாதிபதியாக ஆட்சியி லிருந்துள்ளனர். பின்னர் மைத்திரி பால சிறிசேன ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பண்டாரநாயக்கவின் குடும்ப அர சியலும் ஆதிக்கமும் சந்திரிகாவின் பதவிக்காலத்தோடு முடிந்திருந் தது. மகிந்த ராஜபக்ச சுதந்திரக் கட்சி சார்பில் ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக சந்திரிகாவால் நிறுத்தப்பட்டிருந்தார்.

இதன் பின்னர் பண்டாரநாயக்க வாரிசிடமிருந்து சிறிலங்கா சுதந் திரக் கட்சி மகிந்த ராஜபக்ச குடும் பத்தினரிடம் சென்றடைந்து ஓரம் கட்டப்பட்டார். ஒன்பது ஆண்டுகள் வரையில் சந்திரிகாவினால் சுதந் திரக் கட்சியில் தனது அரசியல் ஆதிக்கத்தை செலுத்த முடியா வில்லை. மகிந்தவினால் சந்திரிகா வின் கட்சியிலிருந்து மகிந்த ராஜ பக்ச அதற்கு இடம் கொடுக்க வில்லை. சந்திரிகா வெறும் ஆலோ சகராகவே இருந்து வந்தார்.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட மைத்திரிபால சிறி சேன சுதந்திரக் கட்சித் தலை மைப்பதவியை ஏற்றுக் கொண்ட பின்னர் மகிந்த தானே உண்மை யான சுதந்திரக் கட்சியை சேர்ந்த வன் என்று கூறியவாறு சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் களை தன்வசப்படுத்திக்கொண்டு வழிநடத்தி சுதந்திரக் கட்சிக்குள் மகிந்த ஆதரவு அணி என்றும் மைத்திரி ஆதரவு அணி என்றும் பிளவை ஏற்படுத்தி சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பலவீனப்படுத் தியிருக்கின்றார்.

மகிந்த ராஜபக்ச சுதந்திரக் கட்சியை மக்கள் மயப்படுத்தலிலிருந்து தமது குடும்ப ஆதிக்க மயப்படுத் தலை சுதந்திரக் கட்சிக்குள் கொண்டு வருவதை மகிந்த சிந்தனைக் குள்ளும் உள்வாங்கப்பட்டிருக்க லாம்? விடுதலைப்புலிகளுக்கு எதி ராக நடந்த போரில் கிடைத்த வெற்றி ராஜபக்சவின் செல்வாக்கை சிங் கள மக்கள் மத்தியில் அமோகமாக உயர்த்தி விட்டது. இதனால் சுதந் திரக் கட்சிக்கும் பலம் அதிகரித்தது. கடந்த ஆண்டுகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பெரும் பனிப் போர் இடம்பெற்றிருந்தது. சுதந் திரக் கட்சியின் பொதுச் செயலாள ராகவும் சிரேஷ்ட உறுப்பினராக வும் பதவி வகித்த இன்றைய ஜனா திபதியான மைத்திரிபால சிறிசேன வுக்கு ஆப்பு வைக்கப்பட்டு மகிந்த வினால் ஓரம் கட்டப்பட்டிருந்தார். மைத்திரிக்குத் தெரியாமல் பல தீர்மானங்களை ராஜபக்ச சகோ தரர்கள் எடுத்தபோது, மைத்திரி பால சிறிசேனவால் மறுத்து எதை யும் கூறமுடியாத நிலைக்குள் ளானார்.

கடந்த பொதுத்தேர்தலில் மகிந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு உள்ளிருந்தவாறு பலப்பரீட் சையை மும்முரமாக நடத்திக்கொண்டிருந் தார். தமது நெருங்கிய முன்னாள் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொகுதி, மாவட்ட அமைப்பாளர்கள் என அனேகமா னோரை தம்பக்கம் இழுத்துக் கொண் டார். மைத்திரி, ரணில் தேசிய நல் லிணக்க அரசில் அமைச்சுப் பதவி களை பெற்றிருந்த சுதந்திரக் கட்சி அமைச்சர்களையும், நாடாளு மன்ற உறுப்பினர்களையும் மகிந்த ராஜபக்ச தம்பக்கம் திருப்பிக் கொண்டார். இதனால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மகிந்தவுக்கு ஒரு அரசியல் பலத்தைக் கொடுத்திருந் தது. கட்சித்தலைவராக இருந்தும் மகிந்த பக்கம் மீது சாய்ந்த சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியாது தவித்த மைத்திரி கட்சிப் பிளவை உண்டாக்க விரும்பவேயில்லை. ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலிருந்த உறுப்பினர் கள் சுதந்திரக் கட்சிக்கு மகிந்த தலைமை தாங்க வேண்டும் என்ற கட்சிக்கு எதிரான கருத்துக்களை முன்வைத்தனர். அந்தக் கட்சிக்குள் அந்தக் கருத்து வலுத்துவந்தது.

பொதுத்தேர்தலுக்கான பரப்புரை களில் ஜனாதிபதி கட்சித் தலைவர் என்ற முறையில் நேரடியாக தமது பரப்புரைகளை மேற்கொள்வதி லிருந்து நடுநிலை வகித்தார். இது வும் மகிந்த ராஜபக்சவுக்குமேலும் பலத்தை அதிகரித்திருந்தது. தேர் தல் பரப்புரை நடவடிக்கை குழு வுக்கும் மகிந்தவே நியமிக்கப்பட் டார். தேர்தல் பரப்புரைகள் நடை பெற்றுக் கொண்டிருக்கையில் சுதந் திரக் கட்சியை தமது ஆதிக்கத்தின் கீழ் மகிந்த கொண்டு வருவதற்கு இரகசியமாக திட்டங்களை வகுத் ததாக அறிந்ததையடுத்தே ஜனாதி பதி மைத்திரி ஐக்கிய மக்கள் சுதந்திர மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரையும், சிறிலங்கா சுதந் திரக் கட்சியின் பொதுச் செயலாள ரையும் அதிரடியாக நீக்கிவிட்டார்.

பொதுத்தேர்தலில் மகிந்த ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டாலும் பிரதமராக முடியாது என ஜனாதிபதி அழுத்தம் திருத்தமாக மகிந்தவுக்கு தெரியப் படுத்தியிருந்தார். ஆனால் மகிந் தவோ கவனத்தில் எடுக்காது சுதந் திரக் கட்சி பெரிய வெற்றி பெறும் தானே பிரதமர் என்று பகற்கனவு கொண்டிருந்தார். பொதுத்தேர்த லின் முடிவுகளின் பின்னர் முடிவு கள் மகிந்தவுக்கு பாதகமாக அமைந் திருந்தது. பிரதமர் என்ற பகற் கனவும் கலைந்தது.

சுதந்திரக் கட்சியை இணைத்து ஐக்கிய தேசியக் கட்சி தேசிய அரசு அமைப்பதில் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டமையால் மகிந்த ராஜபக்ச சுதந்திரக் கட்சியை பிரிக்கின்ற உள்முயற்சியில் ஈடு பட்டுள்ளார். சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப் பினர்களை மகிந்த தமது பக்கம் வைத்துக்கொண்டு எதிர்க்கட்சி யாக நாடாளுமன்றத்தில் இருப் பதே அவரது முடிவாக உள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் மகிந்த ராஜபக்சவோ அவரது குடும் பத்தினரோ அங்கம் வகிக்கக் கூடாது என்பதே சந்திரிகா, மைத்திரியின் உறுதியான முடிவாகும். மகிந்த வுக்கு மிகவும் வேண்டிய விசுவாச மானவர்களை மைத்திரி படிப்படி யாக களையெடுத்து வருவதைப் பார்க்கின்றபோது புரிந்து கொள்ள லாம்.

மகிந்த ராஜபக்ச பதவிக்கு வந்த பின்னர் ஆறே மாதங்களில் தனது பிறந்தநாளன்று கட்சித்தலைவர் பதவியிலிருந்து தூக்கியெறிந் தவர் தான் மகிந்த ராஜபக்ச என்று சந்திரிகா பகிரங்கமாகவே முன்பு குற்றம் சாட்டியிருந்தார். 2005 ஆம் ஆண்டு பதவிக்கு மகிந்த வந்த வுடன் சிறிமாவோ பண்டார நாயக்க, எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க ஆகியோரின் நினைவு நாள்க ளுக்கு முக்கியத்துவம் வழங்கக் கூடாதென்று உத்தரவிட்டிருந்தார் என மைத்திரி கூறியிருந்தார். பண் டாரநாயக்க குடும்பத்தின் வரலா றும், சுதந்திரக்கட்சியின் வரலாறும் பின்னிப் பிணைந்திருந்தது.

இந்த நிலையில் சந்திரிகா மீண்டும் சும்மா? ராஜபக்ச பரம்பரையிட மிருந்து சுதந்திரக்கட்சி ஒன்பது ஆண்டுகளுக்குப்பின்னர் விடுபட்டு வருகின்றது. சந்திரிகாவின் கை ஓங்குகின்றது. மகிந்தவின் பிரதமர் கனவு தகர்த்தெறியப்பட்டுள்ள துடன் சுதந்திரக்கட்சி மீண்டும் பண் டாரநாயக்க மயப்படுத்தப்படலாம். சந்திரிக்காவுக்கு ஜனாதிபதித் தேர் தல் முடிவும், பொதுத்தேர்தல் முடிவும் சாதகமாக அமைந்துள்ள படியாலும், மகிந்தவினது அடுத் தடுத்து ஏற்பட்ட தோல்விகளும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பண் டாவின் வரலாறோடு மீட்சி பெற லாம். மகிந்தவின் கதி என்ன......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



✶ மரணத்தை வென்று, அதற்கு மேல் உள்ள மெய்ப்பொருள் என்ன என்பதைத் தெரிந்து கொள்ளத் துடிக்கும் துறவற வாழ்க்கையே மேல்.

✶ இந்த உலகில் மிருகங்களை மட்டுமன்றி மிருகத்தனம் கொண்ட எதையும், பயத்தை உண்டுபண்ணுகிற எதையும் எதிர்த்து நிற்க வேண்டும். அவற்றுடன் போராட வேண்டும். பயந்து ஓடலாகாது.

✶ மிருகத்தை மனிதனாக்குவதும், மனிதனைத் தெய்வம் ஆக்குவதும் மதம்.

# இவற்றைக் கண்டிப்பாகச் சாப்பிடுங்கள்

அன்றாடம் வாழ்வில் காய்கறிகளைச் சேர்த்துக் கொண்டால் ஆரோக்கியமான வாழ்வு நிச்சயம். அவ்வாறு காய்கறிகளை உணவில் சேர்த்துக் கொள்ளும் நாம் அதன் பயன்களை அறிந்து கொள்வது நல்லது.

**வாழைக்காய்**

இரும்புச்சத்து, பொஸ்பரஸ், விற்றமின் 'பி', 'சி', சத்துக்கள் அதிகம் உள்ளது. வாயுவைத் தூண்டும் குணமுள்ளதால் இதை சமைக்கும் போது அதிகளவில் பூண்டு சேர்த்துக் கொள்வது நல்லது. மலச்சிக்கலைத் தீர்க்கும்.

**மாங்காய்**

மாங்கா்யில் நார்ச்சத்து, விற்றமின் 'ஏ' உள்ளது. சரும நோய், வயிற்றுவலி உள்ளவர்கள் சாப்பிடக்கூடாது. ஏனெனில் இது சூட்டைக் கிளப்பும். மாங்காய் சாப்பிட்டால் மலக்குடல் புற்றுநோய் வராமல் தடுக்கும். செரிமானத்தைத் தூண்டி மலக்குடலைச் சுத்தம் செய்யும், பசியைத் தூண்டும்.

**பாகற்காய்**

பாகற்காயில் பொலிபெப்டுடைட் எனும் இன்சுலின் சுரப்பை அதிகப்படுத்தும் வேதிப்பொருள் நிறைந்துள்ளது. சர்க்கரை நோயாளிகளுக்கு பாகற்காய் சிறந்த உணவாகும். மருந்தின் தன்மையை முறியடிக்கும், அடிக்கடி சாப்பிட்டால் ஆண்மைக்குறைவு ஏற்படும். தொற்று நோய்களைத் தடுத்து கிருமிகளை அழிக்கும், வயிற்றில் பூச்சிகள் சேராமல் தடுக்கும்.

**பூசணிக்காய்**

பூசணிக்காயில் புரதம், கொழுப்பு உள்ளன. ஆஸ்மா, தலைவலி, நோயாளிகள், உடல் பருமனானவர்கள் இதனை சாப்பிடக் கூடாது. குழந்தைகளுக்கும், மூலச்சூடு நோய் உள்ளவர்களுக்கு மிகமிக நல்லது. நரம்புகளுக்கு வலுவூட்டும், வயிற்றுப் புண்களை ஆற்றும் தன்மை கொண்டது.

**கரட்**

விற்றமின் 'ஏ', காபோவைதரேட் தாது உப்புகள், மெலோனிசைட்ஸ் என்ற நிறமி அணுக்கள் இவற்றில் உள்ளன. குழந்தை பேறு இல்லாதவர்கள் அதிகம் சேர்க்க வேண்டாம். சர்க்கரை நோயாளிகள் சாப்பிடக்கூடாது. கண் பார்வைக்கு உகந்தது. கரட் சாறுடன் பத்து மிளகு சேர்த்து சாப்பிட்டு வர உடல் கழிவுகள் வெளியேறும்.

**சுண்டைக்காய்**

விற்றமின் 'சி' அதிகம் உள்ளது, சிறுவர்கள் வாரம் இருமுறை சாப்பிட்டால் வயிற்றில் பூச்சி சேராது. ஆஸ்மா நோயாளிகள் தினசரி சாப்பிட மூச்சுத்திணறல் குறையும். கர்ப்பிணிப் பெண்கள் மாதம் ஒருநாள் சாப்பிடலாம். கிருமிகள், வயிற்றுப் பூச்சிகளை அழிக்கும். நுரையீரலுக்கு செயற்றிறன் தரும், சளியைக் கரைக்கும் தன்மை கொண்டது.




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 40 | 60 | 60 | 80 | 50 | 30 |
| கத்தரி | 80 | 100 | 100 | 100 | 80 | 60 | 80 | 40–50 |
| கரட் | 140 | 140 | 120–200 | 100 | 140–150 | 200 | 120 | 140 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 50–60 | 60 | 60 | 40 |
| பயிற்றை | 90 | 130 | 100 | 80 | 80–100 | 120 | 100 | 80 |
| பாகல் | 100 | 100 | 100 | 100 | 120–140 | 200 | 120 | 70 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 100 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 140 | 120 | 100 | 90–100 | 140 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 60–80 | 90 | 80 | 120 | 100 | 60–70 |
| பூசணி | 40 | 30 | 40 | 30 | 30–40 | 60 | 60 | 25–30 |
| தக்காளி | 100 | 80 | 80 | 60 | 80–100 | 120 | 100 | 55 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 60 | 70–80 | 80 | 60 | 70 |
| கீரை | 25 | 30 | 30 | 10 | 20 | 40 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 25 | 20 | 40 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 120 | 100 | 80 | 120–140 | 100 | 120 | 100 |
| புடோல் | 40 | 50 | 40 | 30 | 50–60 | 80 | 80 | 40 |
| கோவா | 90 | 100 | 70 | 60 | 70–80 | 100 | 100 | 40–50 |
| வெண்டி | 40 | 40 | 40 | 30 | 60 | 80 | 60 | 25 |
| போஞ்சி | 160 | 150 | 160 | 160 | 140 | 120 | 180 | 160 |
| லீக்ஸ் | 90 | 180 | 100 | 80 | 100 | 120 | 100 | 170 |
| தேங்காய் | 50 | 50 | 50 | 50 | 40–70 | 40 | 35–45 | 35 |
| உருளைக்கிழங்கு | 100 | 90 | 90 | 90 | 80–110 | 90 | 90–100 | 100 |
| தேசிக்காய் | 60 | 120 | 80 | 80 | 60 | 150 | 140 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 40 | 30 | 20 | 08 |
| கறிமிளகாய் | 120 | 120 | 100 | 80 | 120–140 | 140 | 150 | 100 |
| இராசவள்ளி | 120 | – | – | 160 | 120 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 120 | 100 | 60 | 140 | 100 | 120 | 80–90 |




| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 550 | 800 | 800 | 700 | 600 | 600 |
| நண்டு | 300 | 600 | 400 | 300 | 300 | 450 |
| கணவாய் | 600 | 600 | 700 | 500 | 600 | – |
| பாரை | 550 | 500 | 600 | 600 | 800 | 420 |
| சுறா | 500 | 600 | 500 | 650 | 800 | 500 |
| சீலா | 250 | 400 | 400 | 400 | 150 | – |
| விளை | 600 | 450 | 450 | 450 | 400 | 350 |
| முரல் | 300 | 400 | 300 | 300 | 300 | – |
| கும்பிளா | 350 | 400 | 400 | 400 | 300 | 250 |
| கிழாக்கன் | 500 | 800 | 700 | 500 | 200 | – |
| ஒரா | 400 | 350 | 300 | 450 | 200 | – |
| திரளி | 250 | 300 | 200 | 300 | 200 | 250 |
| நகரை | 200 | 300 | 300 | 300 | 100 | 300 |
| ஆடை | 150 | 200 | 130 | 100 | 50 | 60 |
| ஒட்டி | 300 | 200 | 300 | 300 | 50 | 250 |
| திருக்கை | 150 | 350 | 200 | 280 | 300 | 130 |
| பாலை | 350 | 300 | 400 | 400 | 200 | – |
| வாளை | 100 | 200 | – | 300 | 200 | – |
| கொய் | 100 | 150 | 150 | 120 | 50 | – |
| மதனம் | 150 | 300 | 200 | 300 | 200 | 200 |

## நாளை

ஆவணி–15

செவ்வாய்க்கிழமை

01.09.2015

*திதி: திருதியை*
*மா.06.08 வரை*
*நட்சத்திரம்: உத்தரட்டாதி*
*பி.ப.12.06 வரை*
*சுபநேரம்:*
*10.35–12.05 வரை*
*இராகுகாலம்:*
*03.05–04.35 வரை*

# சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 8 | 5 | 9 | 1 | 2 | 3 | 4 |
| 9 | 5 | 3 | 2 | 4 | 6 | 1 | 7 | 8 |
| 4 | 1 | 2 | 3 | 8 | 7 | 6 | 5 | 9 |
| 1 | 4 | 7 | 6 | 5 | 2 | 8 | 9 | 3 |
| 2 | 3 | 6 | 9 | 7 | 8 | 5 | 4 | 1 |
| 8 | 9 | 5 | 4 | 1 | 3 | 7 | 2 | 6 |
| 3 | 6 | 4 | 1 | 2 | 5 | 9 | 8 | 7 |
| 5 | 8 | 9 | 7 | 6 | 4 | 3 | 1 | 2 |
| 7 | 2 | 1 | 8 | 3 | 9 | 4 | 6 | 5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | 8 | 5 | | | |
| | | | | 6 | | 8 | | 4 |
| | | | 2 | | | 9 | 5 | 7 |
| | | | | | | 7 | 8 | 1 |
| | | | | | | | | |
| 4 | 9 | 1 | | | | | | |
| 5 | 2 | 3 | | | 7 | | | |
| 1 | | 6 | | 9 | | | | |
| | | | 1 | 5 | | | 2 | |


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என் றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்

**மாறுபட்ட குணமுடையவர்கள்- O**

நாம் அனுபவிக்கும் அனைத்துப் பொருள்களும் இந்த பூமியிலிருந்து தான் விளைகின்றன. சூரியக் குடும்பத்தில் உள்ள அனைத்து கிரகங்களும் உருண்டையாகத்தான் உள்ளன. வேற்றுக் கிரகத்திலிருந்து எந்தப் பொருள்கள் வந்தாலும் அடுத்த கிரகம் அதை ஏற்றுக்கொள்வதில்லை. இது இயற்கை நியதி. தானுண்டு, தனது வேலை உண்டு, யாரையும் எந்தத் தொந்தரவும் செய்வதில்லை, பிறர் தொந்தரவையும் ஏற்பதில்லை என்றிருக்கும் O என்ற எழுத்தில் சூரியக்கதிர்கள் முற்றிலுமாக உட்புக முடியாமல் இருப்பதால் இவ்வெழுத்தில் உள்ளவர்கள் ஏனைய அனைவரிடமிருந்தும் முற்றிலுமாக மாறுபாடான குணாதிசயத்தைப் பெற்றவர்களாக இருப்பர். ஆன்மிகத் தென்றலான இவர்கள் மாபெரும் ஆராய்ச்சியாளர்கள். மந்திரம், தந்திரம், சூட்சும சக்தி, மனவசியம் போன்றவற்றில் அதிக ஈடுபாடுடையவர்கள். சாஸ்திர, சம்பிரதாயங்களில் மனம் ஓடிக்கொண்டே இருக்கும். நீதியை நிலைநாட்டுவதில் முனைப்பாக இருப்பர். இவ்வுலகத்தில் நடக்கும் அதர்மங்களை நினைத்துக் கண்ணீர் விடுவர். கானகங்களில் குடியிருக்க விரும்புவர். இருப்பினும் சோம, சுரபானங்களில் மூழ்கிவிடுவர் (போதை வஸ்துக்கள்). 50 வயதுக்கு மேல் உலக விடயங்கள் பொய்யானவை, எதுவும் நிலையற்றது என்றும் புலம்புவர். ஞான வழியைப் பின்பற்றுவர். சென்ற பிறவியில் என்ன நடந்தது, அடுத்து என்ன நடக்கும் என்ற விடயங்களை இவர்கள் மனம் அடிக்கடி அறிவித்துக்கொண்டேயிருக்கும். மனிதர்கள் மனத்துக்கு மாறுபட்ட விடயங்களை அலசுவதும், மாற்று கிரகங்கள் எப்படி இருக்கும், அதில் மனிதர்கள் வாழ்கிறார்களா என்பது பற்றியும் அனுதினமும் பேசுவர். ஆடைகள் அணிவதில் அன்னம் போன்று பிரகாசிப்பர். கண்களில் தெய்வீகம் தெரியும். மத விடயங்களில் மாபெரும் ஈடுபாடு உண்டு. உயிர்ப்பலி வேண்டாமென்பர். கடல் கடந்து சென்று ஊதியம் பெறும் வாய்ப்புகள் உண்டு. பெரும்பாலும் அமைதியுடன் காணப்படும் இவர்கள், தானும் குழம்பி அடுத்தவர்களையும் குழப்பிவிடும் குணமும் கொண்டவர்கள். கேட்டால் தத்துவம் என்பர். புலன் அடக்கம் இவர்களுக்கு அதிகம் உண்டு என்றாலும், காதல் தோல்விகளின் கதாநாயகர்களும் இவர்களே. கலைத்துறையில் மிகுந்த நாட்ட முடையவர்கள். இவர்கள் பேச்சில் மயங்கும் மனிதர்கள் ஒரு கூட்டமாக தினசரி கூடுவர். இவர்களின் கருத்தை கேட்ட வண்ணமிருப்பர். கற்பனைக் கடலான இவர்கள் வாழ்வே மாயம் என்பர். மக்களுக்காகத் தனது வாழ்வை அர்ப்பணிக்கும் இவர்கள் உலகப் புகழ் பெறும் வாய்ப்புகள் உண்டு. எதைச் சொன்னாலும் மக்கள் கேட்டுக்கொள்வர் என்பதால், தேவையற்ற (உலகுக்கு) கருத்துகளைக் கூறுவதை விட்டு விடுவது அனைவருக்கும் நலம். இவர்களின் பல கருத்துக்கள் தண்ணீரில் எழுத்துப் போன்றவையே. இவர்களுக்கு நோய் எதிர்ப்பாற்றல் சக்தி குறைவாக இருக்கும். இதைத் தவிர்க்க தூய்மையான இடங்களில் வசிப்பதும், உணவு அருந்துவதும் மிக முக்கியம். பயணக் கட்டுரை எழுதுவதில் வல்லவர். பொருள் வரவு – பல தடைகளைக் கடந்து வரும். வரவு ஆரம்பித்தால் அவ்வளவுதான். யாராலும் தடுத்து நிறுத்த இயலாது. மனோ தைரியம் அவசியம் வேண்டும். வாழ்வில் மாபெரும் நன்மைகளை இவர்களுக்கு மனமுவந்து செய்பவர்கள் R,K,B என்ற எழுத்துகளில் ஒன்றைப் பெயரின் முதல் எழுத்தாக உடையவர்களே ஆவர்.



இவர்களுக்கு சினிமா, கவிதை, புத்தகம் எழுதுவதாலும், விவசாயம், பால் பண்ணை, காகித ஆலை, இலத்திரனியல், வானசாஸ்திரம் போன்றவையும் பெரும் பொருள் தரும். நட்புக்கு விசுவாசமாக இருப்பார்கள். பிறர் கூறிக்கொள்ளும் அளவுக்கு முன்னோடியாக வாழ்ந்து காட்டுவர். அடுத்தவர் கருத்தை அன்புடன் கேட்பர். தனக்கு ஒத்துவராத காரியங்களில் இறங்கமாட்டார்கள். திடீர் அதிர்ஷ்டத்தில் அறவே நம்பிக்கை இல்லாதவர். அடிக்கடி வாகனங்களை மாற்றிக் கொள்வர். தலைவலி, தோல்நோய், மூட்டுவலி, வயிறு சம்பந்தமான வற்றை ஒடுக்கி மனச்சோர்வை விட்டு, உணவுக் கட்டுப்பாட்டுக்கு வந்தால் போதும். மதப்பற்று அதிகம் உள்ள இவர்கள் மாற்று மதத்தினரையும் மனிதர்களாகக் கருதுவது மாபெரும் மாண்பாகும். குழப்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து, குதூகலமாக வையத்துள் வாழ்வாங்கு வாழ இறை நம்பிக்கை கைகொடுக்கும். O வில் பெயர் அமைந்தோர் கூறும் கருத்துக்கள் நன்மையளிக்கும்.




# பெண்களே ஏன் தயக்கம்

தினமும் நாம் செல்லும் இடங்கள், சந்திக்கும் நபர்கள் என அனைத்து இடங்களிலும் பெண்களை மட்டுமே காண முடியாது. ஆண்களும் தான் இருப்பார்கள். எனவே அவர்களிடம் எப்படி அணுக வேண்டும், எப்படி பழக வேண்டும் என்பதை தெரிந்து கொள்வோம்.

ஆண்களின் மத்தியில், நம்முடைய நடையும், நிற்கும் ஸ்ரைலும், எந்த அளவுக்கு நாம் தன்னம்பிக்கையுடன் இருக்கிறோம் என்பதைக் வெளிக் காட்டும். எனவே எப்பொழுதும் முதுகை நிமிர்த்தி, கழுத்தை நேராக வைத்து இருந்தால், அது தன்னம்பிக்கையுடன் இருக்கும் தோற்றத்தைத் தரும்.

ஆண்களை ஈர்க்க, மற்றொரு வழி நன்றியுடன் இருத்தல். சில பெண்கள் தன்னம்பிக்கையுடன் இருக்கின்றோம் என்று நினைத்துக் கொண்டு, திமிராக நடந்து கொள்வார்கள். ஆனால் அது தேவையற்றது. ஆகவே அடக்கத்துடனும், அமைதியுடனும் நடந்து கொண்டாலே போதுமானது.

தன்னம்பிக்கையை வளர்த்து கொள்ள அனைவருடனும், அடக்கத்துடன் பழக வேண்டும். எல்லா விதமான மனிதர்களுடனும் பழக முடியும் என்ற நிலையை அடைய, அனைவருடனும் சகஜமாக பழக வேண்டும் என்பது மிக முக்கியம். பொதுவாக அனைவருடனும் பழகுவது என்பது, ஒருவரை முன்னோக்கி எடுத்து செல்லும். இதன் மூலம் ஆண்களிடையே, நன்றாகப் பழகக் கூடியவர் மற்றும் தன்னம்பிக்கை அதிகம் உடையவர் என்ற எண்ணங்கள் உண்டாகும். பல பெண்கள் வெளி இடங்களில் பேசுவதே இல்லை. முக்கியமாக ஆண்களிடம் பேசுவதே இல்லை. இது முற்றிலும் தவறு. தோழமையோடு பேசினால் தான் அனைவருடனும், முக்கியமாக ஆண்களிடம் தன்னம்பிக்கையுடன் பழக முடியும்.



# பெற்றோர் கவனிக்க வேண்டியவை



கணவன்–மனைவி சண்டை சச்சரவு குழந்தைகளுக்குத் தெரியக் கூடாது. அவர்கள் முன்னிலையில், சண்டையிட்டுக் கொள்வதை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும்.

தீய சொற்கள் பேசுவதைத் தவிருங்கள். அதிலும் குழந்தைகள் முன்னிலையில் பேசுவதை அறவே தவிருங்கள். நீங்கள் பேசுவதைக் கவனித்து, தான் உங்கள் குழந்தை பேசுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

சிறு குழந்தைகளை மிரட்டும் போது, கொன்னுடுவேன், தலையைத் திருகிடுவேன், கையை உடைப்பேன் போன்ற வார்த்தைகளை உபயோகிக்காதீர்கள்.

சில தாய்மார்கள் சில விடயங்களைத் தங்கள் கணவரிடம் இருந்து மறைக்க விரும்புவர். எனவே, குழந்தைகளிடம், அப்பாவிடம் சொல்லிடாதே என்று கூறுவர். அவ்வாறு நீங்கள் சொன்னால், உங்கள் குழந்தை தன்னை பெரிய ஆளாக நினைத்துக் கொண்டு, உங்கள் கணவர் முன்னிலையிலேயே அப்பாவிடம் சொல்லி விடுவேன் என்று மிரட்டும்.

குழந்தைக்கு எதற்கெடுத்தாலும் காசு கொடுத்துப் பழக்கக் கூடாது. கடைக்குப் போய் ஷாம்பூ வாங்கிட்டு வந்தால், உனக்கு சாக்லெட் வாங்கக் காசு தருவேன் என்பது போல பேசுவதை தவிருங்கள். இல்லா விட்டால், நாளடைவில் ஒவ்வொன்றுக்கும் காசை எதிர்பார்க்க ஆரம்பித்து விடுவர்.

குழந்தைகள் முன்னிலையில் தரமான படங்களையே பார்க்க வேண்டும். நீங்கள் வாங்கும் புத்தகங்களும் தரமாக [illegible] என்று பார்த்து வாங்கவும்.

உங்கள் குழந்தையுடன் அடுத்த வீட்டுக் குழந்தையை ஒப்பிட்டுப் பேசாதீர்கள். அப்படி பேசினால், குழந்தையின் மனதில் தாழ்வு மனப்பான்மை வளரும்.

படிப்பு விடயத்தில் குழந்தைகளைக் கண்டிக்கும் போது, நீ நன்றாக படித்தால் மருத்துவராக, ஆசிரியராக வரலாம் நன்றாக எனக் கூறி, ஊக்கப்படுத்த வேண்டும். நீ படிக்கும் படிப்புக்கு ஒரு வேலையும் கிடைக்காது, மாடு தான் மேய்க்கலாம் என்றெல்லாம் பேசி, பிஞ்சு மனதை வேதனை அடைய செய்யக் கூடாது.

குழந்தை முன்னிலையில் உங்கள் கணவர், வீட்டில் இருக்கும் பிற நபர்கள் சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது, புகையிலை போன்ற செயல்களை மேற்கொள்ள ஒரு போதும் அனுமதிக்காதீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளை யானையின் சக்தி

மகத நாட்டை விரூபசேனன் ஆண்ட போது போதிசத்துவர் ஒரு யானையாகப் பிறந்தார். அந்த யானை தேவலோக யானை ஐராவதம் போல வெள்ளையாக இருந்தது. அதனால் மகத மன்னன் தனது பட்டத்து யானையாக அதனை வைத்துக் கொண்டான். ஒருமுறை ஏதோ ஒரு விழா நடக்க மகத நாடே தேவலோகம் போல அலங்கரிக்கப்பட்டது. தலைநகரில் பிரமாண்டமான ஊர்வலம் நடக்க ஏற்பாடாகியது. அதற்காகப் பட்டத்து யானை நன்கு அலங்கரிக்கப்பட்டது. வீரர்கள் யானையின் முன்னும் பின்னுமாக நடக்க, மகத மன்னன் அதன் மீது கம்பீரமாக அமர்ந்து சென்றான். வழி நெடுகிலும் மக்கள் கூடி ஆகா! அந்த யானை எவ்வளவு அழகாக இருக்கிறது! என்ன நடை! என்ன கம்பீரப் பார்வை!! என்று அந்தப் பட்டத்து யானையைப் புகழ்ந்தார்கள். இப்படி யானையை மக்கள் புகழ்வது மன்னனுக்குப் பிடிக்கவில்லை. அவன் தனது மனதில், அரசனாகிய எனக்கு இவர்கள் மரியாதை அளிக்காமல் யானைக்கு மரியாதை அளித்து அதனைப் புகழ்கிறார்களே. இந்த யானையை ஒழித்தால் தான் இவர்கள் என்னைப் புகழ்வார்கள் என்று தீர்மானித்துக் கொண்டான். அவன் யானைப் பாகனை அழைத்து இந்தப் பட்டத்து யானை நன்கு பழக்கப்பட்டது தானா? என்று கேட்டான். அவனும் இதனைப் பழக்கி இதன் மீது அம்பாரியை வைத்தவன் நானே என்றான். மன்னரோ இந்த யானை கட்டுக்கு அடங்காமல் இருக்கும் போலிருக்கிறது. இது நன்கு பழக்கப்பட்ட யானை என்பதில் எனக்குச் சந்தேகமே என்றான். யானைப் பாகனும் அப்படி இல்லை என்று சொல்ல மன்னனும்




அப்படியானால் இதனைப் பரீட்சித்துப் பார்ப்போம் என்றான். உன் னால் இதை அந்த உயரமான மலை மீது ஏறச் செய்ய முடியுமா? என்று கேட்டான் அரசன். யானைப் பாகனும் ஓ! முடியும் என்று கூறி யானையை அம்மலை மீது ஏறச் செய்து விட்டான். அரசனும் சில உதவியாளர்களுடன் அந்த மலையின் உச்சிக்குப் போனான். ஓரிடத்தில் செங்குத்தான பாறையும் மேலே மிகச் சிறிய இடம் சமதளமாகவும் இருந்தது. மன்னன் யானைப் பாகனிடம் எங்கே இதனை அந்த இடத்தில் மூன்று காலில் நிற்கச் செய் பார்க்கலாம் என்றான். யானைப் பாகனும் யானையிடம் அவ்வாறு செய்யும் படி கூற, அதுவும் அவ்வாறே செய்தது. பின்னர் யானைப் பாகனிடம் அதனை இப்போது அதன் இரு பின் கால்களில் நிற்கச் சொல் என்றான். யானைப்பாகனும் யானையிடம் அரசனின் கட்டளையைக் கூற, அதுவும் தனது பின்னங் கால்கள் இரண்டால் மட்டும் நின்று காட்டியது. அடுத்து மன்னன் யானையை முன்னங் கால்கள் இரண்டில் மட்டும் நிற்க வைக்கச் சொல்ல, யானைப் பாகனும் சற்றுத் திகைத்து அரசனின் கட்டளையை யானைக்குக் கூறினான். யானையும் அந்த அபாயகரமான இடத்தில் தனது முன்னங் கால்கள் இரண்டில் நின்றது. இதைக் கண்ட யாவரும் ஆகா என வியந்து யானையைப் பாராட்டினார்கள். மன்னனுக்கோ ஒரே எரிச்சல். அவன் யானைப் பாகனிடம் இப்போது அதை ஒற்றைக் காலால் நிற்கச் சொல் பார்ப் போம் என் றான். யானைப் பாகனுக்கு மன்னன் மனதில் என்ன நினைக்கிறான் என்பது தெரிந்து விட்டது. யானையிடம் அரசனின் அந்தக் கட்டளையைக் கூறவே, யானையும் ஒற்றைக் காலில் நின்றது. அது கண்டு மன்னன் இவற்றையெல்லாம் எந்தச் சாதாரண யானையும் செய்யும். ஆனால் இதனால் தரையில் நடப்பது போல ஆகாயத்தில் நடக்க முடியுமா? அங்கே நடக்கச் சொல் பார்க்கலாம் என்றான். அப்போது யானைப்பாகனுக்கு மன்னன் யானையைக் கொல்லவே விரும்புகிறான் என்பது உறுதியாகத் தெரிந்து விட்டது. அவன் யானையிடம் அரசனின் கட்டளையைக் கூறி உன் மதிப்பை அறியாத மூடன் இந்த மன்னன். நீ உனது மகத்தான சக்தியால் இவன் விரும் புவது போல ஆகாயத்தில் உயரச் சென்று நடந்து காட்டு என்றான். யானையும் கம்பீரமாக அந்த மலை உச்சி மீது நடந்து அங்கிருந்து ஆகாயத்திலும் தரை மீது நடப்பது போலவே நடந்து போகலாயிற்று. அப்போது யானைப் பாகன் மன்னனே! நீ இந்த யானையை எப்படியாவது கொல்ல வேண்டும் என்று முயன்றாய். ஆனால் இதன் மகத்தான சக்தியை அறியாத நீ அதனிடம் தோற்றுப் போனாய். அந்த யானை உன்னி டம் இருக்கத் தகுந்ததே அல்ல. வேறு நல்ல இடத்தில் இருக்க வேண்டியது. நீ இனி அதனை அடைய முடியாது. நானும் அந்த யானை செல்லும் இடத்துக்கே போகிறேன் எனக் கூறிச் சென்று விட்டான். ஆகாயத்தில் நடந்து சென்ற யானை காசி நகரை அடைந்தது. அந்த நகர மக்கள் ஒரு யானை வான வீதியில் நடந்து வந்து தமது நகரில் இறங்குவதைக் கண்டனர். ஒரே உற்சாகத்துடன் அதனை அவர்கள் வரவேற்றார்கள். காசி மன்னனும் அந்த யானையின் முன் போய் கைகூப்பி நின்று கஜராஜனே! வருக! வருக!! உமது வரவால் எனது நாடே செழிப்புற்று சுக வாழ்வு பெறப் போகிறது என்றான்.

இதே சமயம் அந்த யானையை மகத மன்னனிடம் இருந்து ஓட்டிய யானைப் பாகனும் வந்து சேர்ந்தான். அவன் காசி மன்னனிடம் யானையுடனும், தன்னுடனும் மகத மன்னன் எவ்வாறு நடந்து கொண்டான் என்று நடந்த அனைத்தையும் கூறி அந்த யானையின் மகத்துவத்தை எடுத்து உரைத்தான். காசி மன்னனும் அந்த யானை போதிசத்துவரின் அவதாரமே என அறிந்து தனது நாட்டை மூன்று பாகங்களாக்கி ஒரு பாகத்தை அந்த யானையின் ஆட்சியிலும் மற்றயதை யானைப் பாகனின் ஆட்சி யிலும் மூன்றா வது பகுதியைத் தானுமாக ஆட்சி புரிந்து வர ஏற்பாடு செய்தான். காசி நாடும் அந்த யானை வந்ததில் இருந்து சுகவாழ்வு பெற்றது.

# வர்ணம் தீட்டலாம் வாங்க





# மகிழ்ச்சியாக வாழ்வதற்கான மந்திரங்கள்





1. தினமும் உடற்பயிற்சி செய்யுங்கள்

2. ஒவ்வொரு நாளும் நிம்மதியாக ஆழ்ந்து தூங்குங்கள். (அதற்கு ஏற்ப உங்கள் எண்ணம், செயல் இருக்க வேண்டும்.)

3. எதிலும் நல்லதையே கேளுங்கள். (உங்களுக்கு பிடித்தப் பாடல்களை, இசையை அடிக்கடிகேட்டு உடலையும் உள்ளத்தையும் ஆறுதல் படுத்திக்கொள்ளுங்கள்.)

4. எப்போதும் இயற்கையோடு இணக்கமாக வாழுங்கள். (தோட்ட வேலைகளில் ஈடுபடுக, கடற்கரைக்குச் செல்க.)

5. உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக் கொள் [illegible] வீசாமல் பார்த்துக் கொள்ளுங்கள், சில நிமிடங்கள் தியானம் செய்து உள்ளத்தை தூய்மைப்படுத்திப் புதுப்பிக்கவும்.)

6. குப்பைகளை உடனுக்குடன் அப்புறப் படுத்துங்கள். (உங்கள் மனதிலும் வெறுப்பு, பொறாமை என்பவற்றைக் குடிகொள்ள விடாது தூக்கி எறிந்துவிடுங்கள்.)

7. கோபம் பலவீனத்தின் அடையாளம் அதை விலக்குங்கள்.

8. ஒவ்வொரு நிமிடத்தையும் மகிழ்ச்சியாகக் கழிக்க உங்கள் கடமைகளை மிகுந்த விருப்பத்துடன் செய்து வாருங்கள்.

9. உங்கள் பிரச்சினைகளை ஊர்முழுவதும் விளம்பரம் செய்து அனுதாபம் தேடாதீர்கள்.

10. மற்றவர்களின் திறமைகளைச் சரியாகக் கண்டறிந்து அவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்துங்கள்.

பி.நிதூசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடுத்து

முன்னிலையாகாமையால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தே, பொலிஸார் ஒரு மணி நேரம் அவரைத் தடுத்து வைத்துள்ளனர். பின்னர் சட்டத்தரணிகளின் தலையீட்டை அடுத்து அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மீள் உருவாக்கத்துக்கு உதவி செய்தார் என்று தெரிவித்து, கடந்த வருடம் மார்ச் மாதம், ஜெயக்குமாரி மற்றும் அவரது மகளான விபூசிகா ஆகியோர் கைது செய்யப்பட்டிருந்தனர். இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பிலான வழக்கிலிருந்து கடந்த மார்ச் மாதம் 13 ஆம் திகதி ஜெயக்குமாரி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

ஒவ்வொரு மாதத்தின் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையில் அவர் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அதற்கமைய அவர் வழமை போன்று நேற்றும் கையெழுத்திடச் சென்றுள்ளார். இதன் போது பொலிஸார், வெலிஓயா நீதிமன்றத்தில் இடம்பெற்று வரும், தமிழீழ விடுதலைப் புலிகளை மீளுருவாக்கினர் என்ற குற்றச்சாட்டில் கொல்லப்பட்ட அப்பன் – தேவிகன் தொடர்பான வழக்கில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்துள்ளனர்.

இதனையடுத்து ஜெயக்குமாரி தனது சட்டத்தரணிகளுக்கு விடயத்தை தெளிவுபடுத்தியுள்ளார். இதனையடுத்து, சட்டத்தரணிகள், குறித்த வழக்கு தொடர்பில் ஜெயக்குமாரிக்கு எந்த அழைப்பாணையும் வரவில்லை என்பதுடன், அவர் தொடர்ச்சியாக பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட்டமையையும் சுட்டிக்காட்டினர். அத்துடன் இது தொடர்பில் வெலிஓயா நீதிமன்றில் முன்னிலையாகி பிடியாணையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் சட்டத்தரணிகள் குறிப்பிட்டனர்.

அதையடுத்து, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஜெயக்குமாரி, ஒரு மணி நேரத்தின் பின்னர் விடுதலை செய்யப்பட்டார். (ற–5)

## ஐ.நாவில்

உரையாற்றியிருந்தார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் மகிந்த ராஜபக்ச ஆங்கிலத்தில் உரையாற்றிவிட்டுத் திரும்பிய போது, அவருக்கு வாழ்த்துக் கூறிய மாலைதீவு ஜனாதிபதி அடுத்த முறை சிங்களத்தில் உரையாற்றுமாறு கேட்டுக் கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற–ரி)

## தேசிய அரசுக்கு

திகதி நடைபெறவுள்ளது. இதன்போது 225 உறுப்பினர்களும் பதவிப் பிரமாணம் செய்துகொள்ளவுள்ளனர். அன்றைய தினத்தில் சபாநாயகர் தெரிவும் இடம்பெறவுள்ளது. சபாநாயகராக ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான கரு ஜயசூரிய நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர் கள் சபாநாயகர் பதவிக்குப் பரிந்துரைக்கப்படுமானால், இரகசிய வாக் கெடுப்பு நடத்தப்படும்.

முதலாவது அமர்வின்போது, அமைச்சரவை அதிகரிப்புத் தொடர்பில் ஜே.வி.பி. விவாதம் கோரியுள்ளது. அது நடைபெறுவதற்கான சாத்தியம் காணப்படுகிறது. அதன்பின்னரே பிரதமர் மேற்படி யோசனையை முன்வைக்கவுள்ளார்.

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட்டத்தின்படி அமைச்சரவை எண்ணிக்கை 30ஆக இருக்கவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. எனினும், தேசிய அரசொன்று அமைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தின் ஒப்புதலோடு அதில் தளர்வுபோக்கைக் கடைப்பிடிக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சுப் பட்டியல் இன்று இறுதிப்படுத்தப்படவுள்ளது. முக்கிய சில அமைச்சுப் பதவிகளுக்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இதற்கமைய பிரதமரின்கீழ் பொருளாதாரம், மனிதவளத்துறைகள் கொண்டுவரப்பட்டுள்ளன.

நிதி அமைச்சராக ரவி கருணா நாயக்கவும், உள்நாட்டு வர்த்தகம், முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மலிக் சமரவிக்கிரமவுக்கும், வீடமைப்பு அமைச்சு சஜித் பிரேமதாஸவுக்கும், சுகாதார அமைச்சு ராஜித்த சேனாரத்னவுக்கும், உள்நாட்டலுவல்கள் அமைச்சு ரஞ்சித் மத்துவ பண்டாரவுக்கும், சட்டம், ஒழுங்கு அமைச்சு திலக் மாரபனவுக்கும், பௌத்த விவகார அமைச்சு எம்.கே.டி.எஸ். குணவர்த்தனவுக்கும் வழங்கப்படவுள்ளன.

அதேபோல் துறைமுகம் அமைச்சு அர்ஜுன ரணதுங்கவுக்கும், பௌத்த விவகார அமைச்சு எம்.கே.டி. எஸ். குணவர்த்தனவுக்கும், உள்துறை அமைச்சு ஜோன் அமரதுங்கவுக்கும், மகளிர் விவகார அமைச்சு சந்ராணி பண்டாரவுக்கும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு தலதா அத்துகோரளவுக்கும், நெஞ்சாலைகள் அமைச்சு லக்ஷ்மன் கிரியெல்லவுக்கும், சுற்றுலாத்துறை அமைச்சு கயந்த கருணாதிலக்கவுக்கும், கல்வி, கலாசார அமைச்சு அகில விராஜ் காரியவசத்துக்கும், பெருந்தோட்டத்துறை அமைச்சு நவின் திஸாநாயகவுக்கும், ஊடகத்துறை அமைச்சு சகால ரத்நாயக்கவுக்கும், உள்ளூராட்சி, மாகாணசபை அமைச்சு வஜீர அபேவர்தனவுக்கும், வர்த்தகத்துறை அமைச்சு றிசாத் பதியுதீனுக்கும், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு பழனி திகாம்பரத்துக்கும், தபால் அமைச்சு எம்.எச்.ஏ. அலீமுக்கும் வழங்கப்படவுள்ளன.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தேசிய தொழில்முயற்சி ஊக்குவிப்பு அமைச்சு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரான கபீர் ஹாசிமுக்கும், வெஸ்டன் மெகா பொலிஸ், நகர அபிவிருத்தி அமைச்சு சம்பிக்க ரணவக்கவுக்கும் வழங்கப்படவுள்ளன.

தேசியமொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சராக மனோ கணேசன் நியமிக்கப்படுவதற்குரிய வாய்ப்பிருக்கின்றது. கிராமிய அபிவிருத்தி, கால்நடைவளத்துறை அமைச்சராக பீ.ஹரிசன் நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. (ற–சி)

## பாதுகாப்பு

என்று தெரிவிக்கப்பட்டது.

இருநாள்கள் இடம்பெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் முன்னாள் ஆப்கான் ஜனாதிபதி ஹமீட் கர்ஷாய், இலங்கை பாதுகாப்புச் செயலாளர் பீ.எம்.யு.டி.பஸ்நாயக்க, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஜஷ்வர்தன குமார சிங், பாகிஸ்தான் தூதுவர், சீனத் தூதுவர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அதேவேளை, இலங்கை இராணுவத்தினர் மீது சர்வதேசம் தொடர்ச்சியாக சுமத்திவரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேசத்துக்கு உண்மை நிலையை எடுத்துக் கூறுவதற்கான சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்திக்கொள்ளவுள்ளதாக அண்மையில் இராணுவத் தளபதி தெரிவித்திருந்தார்.

2011ஆம் ஆண்டுமுதல் நடத்தப்பட்டு வருகின்ற இந்தக் கருத்தரங்கானது இம்முறை 6ஆவது தடவையாகவும் இடம்பெறவுள்ளது. அடுத்த மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை இராணுவத்தினர் மீது எதிர்ப்பலைகள் வரும் என எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் சர்வதேச ரீதியில் பல முக்கியஸ்தர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்ளவுள்ளனர்.

குறிப்பாக ஐக்கிய இராச்சியத்தின் பாதுகாப்பு இராஜாங்க மற்றும் பாதுகாப்புக் கருத்தரங்கின் முன்னாள் அதிகாரி ஒல்கா மெண்டலண்ட போன்றவர்கள் கலந்துகொள்ளவுள்ளமையானது, இலங்கை இராணுவத்தின் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளையும் அழுத்தங்களையும் குறைப்பதற்கான முயற்சியாகும் எனக் கருதப்படுகின்றது. (ற–சி)

## சர்வதேச

சர்வதேச காணாமல் ஆக்கப்படுதலுக்கு எதிரான தினமான நேற்று, மன்னாரில் கூடிய காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களே ஜனாதிபதிக்கு இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பான மனு ஒன்றையும் அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும், போர்ப் பாதிப்புள்ளாக்கப்பட்டு உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த நாம் எமது துயரங்களை, இழப்புக்களை, துன்பங்களை தங்களின் மேலான கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம். நாட்டின் புதிய தலைமை, புதிய நாடாளுமன்றம் என்பன எமது துயரங்களை கருணையோடு புரிந்துகொண்டு எமக்கு ஆவன செய்யும் என்ற நம்பிக்கையுடன் இந்த மனுவைக் கையளிக்கின்றோம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:!

ஓர் உள்நாட்டு பொறிமுறையோ அல்லது உள்நாட்டின் கூட்டுப்பொறிமுறையோ பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நியாயமான ஒரு தீர்வைத் தரும் என்பதில் நம்பிக்கையில்லை என்பதைத் தங்களுக்கு பொறுப்போடு தெரிவிப்பதற்காகவே இந்த அறிக்கையைச் சமர்ப்பிக்கின்றோம். சர்வதேச பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு பொறிமுறையின் மூலமே இதற்கான ஒரு தீர்வை எட்ட முடியும்.

2011ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கையின் நிகழ்வுகளுக்கு பொறுப்புக்கூறல் சம்பந்தமாக ஐ.நாவின் விற்பனர்கள் குழு அறிக்கையானது, நாட்டு மக் களின் உரிமைகள் மீறப்படுவதில் அந்த நாட்டு அரசின் பொறுப்பு, செயற்பாடு என்பவற்றை ஏற்றுக்கொள்ளல், அந்நிகழ்வுகளுக்கு பொறுப்புகூறலுக்கு அவசியம் என்கிறது.

ஒரு நாடு தானே சர்வதேச ரீதியிலான குற்றங்களை அரங்கேற்றும் போது, அந்நாடு அக்குற்றங்களுக்காக நீதி கோரப்படும் சந்தர்ப்பங்களில் நீதி வழங்கும் நிர்வாக அமைப்பில் அங்கம் பெற முடியாது. ஏற்றுக்கொள்ளப்பட்ட சட்ட நீதி நியமங்களுக்கு அமைவாக குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் தன் சொந்த வழக்கில் நீதிபதியாக இருக்க முடியாது.

ஒரு நாடு அதன் இனம் சார்ந்த தீர்மானங்களை நிறைவேற்றும் போது பாகுபாடற்றதாகச் செயற்பட வேண்டும். ஆனால் இலங்கை வரலாற்றுப் பதிவுகளின்படி இலங்கை சுதந்திரம் அடைந்த நாளிலிருந்து இன்றுவரை நீதித்துறையும் சேர்ந்து பாகுபாடற்ற தன்மையை தோற்றுவிப்பதில் தவறியுள்ளன. தமிழர்களுக்கெதிரான குற்றங்கள் இழைக்கப்படும் போது நீதித்துறை எப்போதும் அரசியல் தலைமைகளுக்கு துணைபோவதாக இருந்துள்ளது. இது கடந்தகால ஆணைக் குழு விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஓ.ஐ.எஸ்.எல் அமைப்பின் செயற்பாட்டு வரம்பு, போர்க்குற்றங்களோடு மட்டும் எல்லைப்படுத்தப்படவில்லை. பிற சர்வதேச குற்றங்களுக்கும் விரிவு படுத்தப்பட்டுள்ளது. சர்வதேச குற்றவியல் நீதிமன்ற உப விதி 5 இன் படி இன அழிப்பு, மனிதத்துக்கு எதிரான குற்றங்கள், ஆக்கிரமிப்புக்கள் என்பனவற்றுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இலங்கை என்ற நாடு முற்றுமுழுதாகச் சிங்கள இனத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றது. இவர்களால் இழைக்கப்படுகின்ற தமிழர்களுக்கு எதிரான எந்த இன அழிப்புக்களோ வேறு எந்த குற்றங்களோ உள்ளூர் பொறிமுறையினாலோ அல்லது இனங்களின் கூட்டுப் பொறிமுறையினாலோ தீர்த்து வைக்க முடியாதவை. எனவே உள்நாட்டை சாராத சுதந்திரமான சர்வதேச பொறிமுறை ஒன்றே நியாயமான தீர்வு ஒன்றை அடைவதற்கான வழியாகும். புதிய நிர்வாக, அரசியல் தலைமை மாற்றம் தண்டனைகளிலிருந்துது தப்பிக்கொள்ள வழியாக்கித் தந்துவிடலாம் என்ற எண்ணக்கருவும் சில பகுதிகளில் நிலவுகின்றது. தமிழர்கள் பல ஆட்சி மாற்றங்களைக் கண்டுள்ளனர். ஆனால் எந்த ஆட்சியும் தமிழர்களின் துன்பம் கலந்த நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற எந்த முயற்சியையும் இதய சுத்தியோடு மேற்கொள்ளவில்லை.

இராணுவத் தலைமை அதிகாரியாயிருந்த சரத் பொன்சேகாவுக்கு பாதுகாப்பு படைகளின் அதிஉயர் பதவி வழங்கப்பட்டதும் மிகமோசமான 57 ஆவது படைப்பிரிவின் படைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் டயஸுக்கு படைத்தரப்பினரின் தலைமைப் பதவி வழங்கப்பட்டதும் (இருவரும் மிகப் பயங்கரமான சர்வதேச குற்றங்களை புரிந்தவர்கள்) பாதிக்கப்பட்டோரின் கன்னத்தில் அறைந்தது மட்டுமல்ல ஓ.ஐ.எஸ்.எல் இன் கன்னத்தில் அறைந்ததற்குச் சமனாகும்.

தமிழர் செறிந்து வாழும் வடக்கு கிழக்கில் இன்னும் நிலை கொண்டிருக்கும் இராணுவ மையங்கள் தமிழர்களுக்குப் பயத்தையும், அச்சுறுத்தலையும் வழங்கிக்கொண்டேயிருக்கும்.

கடந்தகால நாட்டின் வரலாற்றையும் அரசியலையும் நோக்கும் போது நாட்டில் ஏற்படுத்தப்படும் உள்வாரியான அல்லது இரு பகுதியினரும் இணைந்த பொறிமுறை ஒன்று எந்த வகையிலும் எதிர்பார்க்கின்ற தரத்தை எட்டமுடியாது. ஆகவே ஐ.நாவால் ஒழுங்கு படுத்தப்படும் ஒரு பொறிமுறையே பொருத்தமானதாக அமையும்.

பிரச்சினைகளை தீர்க்கும் ஆவல் கொண்ட ஒரு தேசம் தன்னிடம் நீதி வழங்கக் கூடிய தகுதி நிலை அற்றிருக்கும் போது இனம் சார்ந்த பிரதிநிதிகளை உள்ளடக்கிய நீதிமன்று ஒன்று பயனுடையதாக இருக்காது. இலங்கையில் அரசியற் தலைமைகளை குற்றஞ்சுமத்தவோ அல்லது தழிழர்களுக்கு நீதியை வழங்கும் ஆர்வமோ அரசியல் ரீதியாக இல்லை. இலங்கையில் இயங்கும் மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பு நடத்திய ஆய்வின்படி 84 வீதமான தமிழர்கள் சர்வதேச விசாரணையே வேண்டும் என கோருகின்றனர்.

இலங்கையில் உள்ளக விசாரணை அல்லது இணைந்த பொறிமுறை இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கு, போர் குற்றங்களுக்கு, மனித உரிமை மீறல்களுக்கு மற்றும் காணாமற்போன எமது உறவுகளுக்கு நீதியையோ, தீர்வையோ பெற்றுத்தர முடியாது. ஆகவேதான் சர்வதேச தரத்திலான விசாரணையே எங்களுக்கு வேண்டும் எனக் கோருகிறோம். தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதி என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.– என்றுள்ளது. (ற–4,21)

## காணாமல்

செய்யப்பட்டிருந்தபோதும் தவிர்க்க முடியாத காரணத்தால் தலைமன்னார் வீதியில் அமைந்துள்ள டிலாசால் கிட்ஸ் கெம்பஸ் பாடசாலையில் காலை 10 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை குறித்த நிகழ்வு நடைபெற்றது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்பணி செபமாலை அடிகளாரின் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் காணாமற்போனோர் தொடர்பில் சர்வதேச விசாரணை வலியுறுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் மன்னார் பிரஜைகள் குழுவால் தயாரிக்கப்பட்ட ஆவணப்படம் காண்பிக்கப்பட்டது. தமது கணவரை இழந்த பெண்கள், தமது பிள்ளைகளை இழந்த தாய்மார்கள், தந்தையர்கள் தமது கவலையை அடக்கிக்கொள்ள முடியாமல் குமுறி அழத் தொடங்கியதால் சிறிதுநேரம் நிகழ்வை நடத்துவதில் சிக்கல்நிலை ஏற்பட்டது.

இந்த நிகழ்வில் அரசியல்வாதிகள், கல்விச் சமூகத்தினர், சிவில் சமூகத்தினர் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள காணாமல் ஆக்கபட்டவர்களின் உறவுகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் காணாமல் ஆக்கப்பட்டுள்ள குடும்பங்களின் பாடசாலை மாணவ, மாணவிகளின் தற்போதைய மனநிலையைப் பிரதிபலிக்கும் வகையில் நடைபெற்ற சித்திரப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியோருக்குப் பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

அதேவேளை, காணாமல்போன உறவுகளின் உள்ளத்தின் வேதனைகளை வெளிப்படுத்தும் வகையிலான நாடகமும் அங்கு அரங்கேற்றப்பட்டது.

மேற்படி நிகழ்வு நடைபெற்ற பகுதியில் அதிக எண்ணிக்கையிலான இராணுவ, பொலிஸ் புலனாய்வாளர்கள் உலாவித் திரிந்தனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ற–21,4,சி)

## தமிழ்க்

ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் கொழும்பில் நேற்றுச் சந்தித்து 4 மணி நேரம் கலந்துரையாடின. அதில் மூன்று கட்சிகளின் தலைவர்களான சுரேஷ் பிரேமசந்திரன், செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்த்தன் உட்படப் 15 பேர் வரையில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பில், நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னரான கள நிலைமைகள் தொடர்பில் ஆரம்பத்தில் பேசப்பட்டது. அதன் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான இலங்கை தமிழ் அரசுக் கட்சி, கூட்டமைப்பினுள் எதேச்சதிகாரப் போக்கில் செயற்படுவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. எதேச்சதிகாரப் போக்கை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அதற்காக மூன்று கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தற்போதைய சூழ்நிலையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை விட்டுப் பிரிந்து மூன்று கட்சிகளும் தனித்துப் பதிவு செய்வது பொருத்தமற்றது என்ற கருத்து முன்வைக்கப்பட்டதுடன், கூட்டமைப்பை பலப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இறுதியில் தீர்மானிக்கப்பட்டது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறையை அமெரிக்கா ஏற்றுக் கொண்டுள்ளது. அத்துடன் உள்ளக விசாரணைப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதை வரவேற்கும், தீர்மானத்தையும் நடைபெறவுள்ள மனிதஉரிமைகள்சபையின்அமர்வில் அமெரிக்கா முன்வைக்கவுள்ளது.

அமெரிக்காவின் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், சர்வதேச பொறிமுறையினூடாகவே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், அதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடமே வலியுறுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பில், போர்க் குற்றங்களையோ, மனித குலத்துக்கு எதிரான குற்றங்களையோ விசாரணை செய்வதற்குரிய சட்ட ஏற்பாடுகள் எதுவும் இல்லை. இவ்வாறான நிலையில், உள்ளக விசாரணை எவ்வாறு நடத்த முடியும் எனவும், இதனூடான தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பதையும் குறிப்பிட்டே, சர்வதேச விசாரணையைக் கோரும் தீர்மானத்தை மூன்று கட்சிகளும் கூட்டாக எடுத்துள்ளன. (ற–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணம் இளங்கதிர் வசம்





வடமராட்சி, ஓக 31
பரபரப்பான ஆட்டத்தில் வல்வை றெயின்போய்ஸ் அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கியது வல்வை இளங்கதிர் விளையாட்டுக்கழகம் .

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும் நேற்று முன்தினம் கழக மைதானத்தில் இடம்பெற்றன.

இவ்விறுதியாட்டத்தில் வல்வை றெயின் போய்ஸ் விளையாட்டுக் கழகமும் வல்வை இளங்கதிர் விளையாட்டுக்கழகமும் மோதின. மிகவும் பரபரப்பாக ஆரம்பமான இவ்வாட்டத்தின் முதல் பாதியில் இரு அணியினரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல என்பதனை நிரூபிக்கும் வகையில் முட்டி மோதினர். இதனால் இரு அணியாலும் இலகுவில் கோல் போடமுடியவல்லை .

இச்சூழ்நிலையில் இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்துவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் போது இளங்கதிர் அணியின் முன்கள வீரர் பிரசாந்த் அற்புதமான கோல் ஒன்றைப் போட்டு தமது அணியை முன்னிலைப்படுத்திபடுத்தினார்.

இடைவேளையின் பின் ஆட்டம் ஆரம்பமாகி விறுவிறுப்பாக இடம்பெற்ற போதும் ஆட்டத்தின் 14 ஆவது மற்றும் 20 ஆவது நிமிடங்களில் இளங்கதிர் அணியின் மற்றொரு வீரன் ஜெகதாஸ் இரு கோல்களைப் போட்டு அசத்த வெற்றிக் காற்று இளங்கதிர்ப் பக்கமாக வீசத்தொடங்கியது. இறுதியில் றெயின்போய்ஸ் அணியினர்கோல் போடுவதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிவடைய 3:0 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியன் கிண்ணத்தை தனதாக்கிக் கோண்டது இளங்கதிர் அணி.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இளங்கதிர் அணியைச் சேர்ந்த பிரசாத்தும் தொடர்ஆட்ட நாயகனாக அதே அணியைச் சேர்ந்த ஜெயதாஸும் சிறந்த பேற்றுக் காப்பாளராக விஜிதரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(த-108)

## கண்ணீர் அஞ்சலி



இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

எமது வித்தியாலய அதிபர்
தி.கா.ரவீந்திரராஜா
அவர்களின் அன்பு மாமனார்
வைரமுத்து சபாரத்தினம்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/கலட்டி மெ.மி.த.க. பாடசாலை.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
21.05.1950



இறப்பு
10.09.2014

### திருமதி குலசிங்கம் வசந்தாதேவி

பக்குவமாய் பாசத்துடன் எமை வளர்த்து
பாரினிலே நிமிர்ந்து நிற்க செய்துவிட்டு
பாதி வழியில் எமைப் பிரிந்து எங்கு சென்றீரோ
நிதமும் வாடுகின்றோம் தாயே உமை எண்ணி
நீர் எமை அணைத்து நிற்க ஓடி வரமாட்டீரோ என
உங்கள் பிரிவை எண்ணி
ஒவ்வொரு மணித்துளியும் வாடுகின்றோம் அம்மா

உங்கள் பிரிவால் வாடும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# கிரிக்கெட் சம்பியனானது வல்வை றெயின்போய்ஸ் அணி



வடமராட்சி, ஓக. 31
வல்வை சைனிங்ஸ் விளையாட்டக் கழகத்தின் அமரர் நடராசா வைத்திலிங்கத்தின் கிரிக்கெட் வெற்றிக் கிண்ணத்தை தமதாக்கியது வல்வை றெயின் போய்ஸ் விளையாட்டுக் கழகம்.

அமரர் வைத்திலிங்கம் ஞாபகார்த்தமாக வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய 12 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி யின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நேற்று நடைபெற்றன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய றெயின்போய்ஸ் அணி 12 பந்துப்பரி மாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்றது.அந்த அணியில் சிறீகரன் 49 ஓட்டங்களையும் கவிதன் மற்றும் ஜெகன் ஆகியோர் தலா 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அபிதன், மோகனகாந் தலா இலக்குகளைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங் கிய சைனிங்ஸ் வி.ளையாட்டுக் கழகம் 12 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களைப் பெற்று வெறும் 10 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. அந்த அணியில் துளசிராம் 37 ஓட்டங்களையும் சதீஸ் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பிரணவன் ஜெகன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக றெயின்போய்ஸ் அணியின் சிறிகரனும் தொடர் ஆட்ட நாயகனாக ஜெகனும் தெரிவு செய்யப்பட்டனர்.

(த-108)

## வென்றது சென்.தோமஸ் யுத்

யாழ்ப்பாணம்,ஓக. 31
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன்
நடந்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித்த தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இதில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை, 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் மாதகல் சென். தோமஸ் யுத் அணியை எதிர்த்து உரும்பிராய் சரஸ்வதி அணி மோதிக் கொண்டது. இதில் மாதகல் சென். தோமஸ் யுத் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(த-23)

## இன்றைய மோதல்

மாங்குளம், ஓக. 31
வவுனியா உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வவுனியா முன்னணி அணிகளுக்கிடையே நடத்தப்படும் பண்டார வன்னியன் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடர் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்று வருகின்றது. இதில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு ஈகிள்ஸ் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் அணி மோதவுள்ளது.

(த-422)

■ ■ ■

யாழ்ப்பாணம்,ஓக. 31
வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன்
நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இதில் இன்று திங்கட்கிழமை மாலை, 5 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

(த-23)

■ ■ ■

யாழ்ப்பாணம், ஓக. 31
அராலி ஏ.எல் விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல் இளைஞர் கழகமும், இணைந்து யாழ்.உதைபந்தாட்ட லீக் மற்றும், வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை, தீவக உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரின் ஆட்டங்கள் கழகமைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. அதில் இன்று திங்கட்கிழமை மாலை 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து பாசையூர் சென்.அன்ரனிஸ அணி மோதவுள்ளது
தொடர்த்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் அணி மோதவுள்ளது.

(த-23)

க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி

எதிர்வரும் டிசம்பர் மாதம் அரச பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் பரீட்சைக்கு எதிர்பார்க்கப்படும் சில தரமான வேறுபட்ட கோணங்களிலான வினாக்கள் (கொழும்பு, யாழ்ப்பாணம், திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, ஆகிய மாவட்டங்களில் உள்ள பிரபல ஆசிரியர்களால் புதிதாகத் தயாரிக்கப்பட்டது) செப்டெம்பர், ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் விடைகளுடன் 'ஒளி அரசி' எனும் மாதாந்த அறிவியல் சஞ்சிகையில் வெளிவரவுள்ளது.
(சந்தேகங்கள் T.P.மூலம் தெளிவுபடுத்தும் வசதியுடன்).

அரசியல், பாலியல் கலக்காது நல்லதொரு குடும்பம் எனும் நோக்கில் வெளிவரும் இந்தச் சஞ்சிகையை உங்கள் வீட்டு மாத சஞ்சிகையாக்கி, உங்கள் வீட்டு சாதாரணதரப் பரீட்சைப் பெறுபேற்றையும் உயர்த்துமாறு மாணவர்கள் அன்புடன் வேண்டப்படுகிறார்கள்.

பிரதிகளுக்கு 'உதயன்', 'சுடர் ஒளி' முகவர்களிடம் முற்பதிவு செய்யவும்.

OLIARAZI மாத சஞ்சிகை
ஒளி அரசி
இல்லத்தரசிகளின் தோழி

மேலதிக தொடர்புகளுக்கு
வடக்கு : 0776569617
கொழும்பு : [illegible]
[illegible] : [illegible]
கிழக்கு : 0718724057
வவுனியா : 0772772726

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்ட அணி 3 இலக்குகளால் வெற்றி




யாழ்ப்பாணம்,ஒக்.31

வவுனியா,கிளிநொச்சி மாவட்ட 15 வயதுப்பிரிவு அணிகளுக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட பயிற்சி கிரிக்கெட் ஆட்டத்தில் வவுனியா மாவட்ட அணி 3 இலக்கினால் வெற்றி பெற்றது.

கடந்த புதன்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெற்ற பயிற்சி ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி மாவட்ட அணியினர் முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தனர். அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மாவட்ட அணியினர், 49 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்கினையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் தஜீகன் 39 ஓட்டங்களையும், யுகேந்திரன் 21ஓட்டங்களையும், கனோஜன் 14ஓட்டங்களையும், சிவானுஜன் 13ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் வவுனியா மாவட்ட அணி சார்பில் பானு 10பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 4 இலக்கினையும், பசிந்தன்,10 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 33 ஓட்டங்களுக்கு 2 இலக்கினையும், டனுஸ் 8பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 42 ஓட்டங்களுக்கு 3 இலக்கினையும் வீழ்த்தினர்.

180 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய வவுனியா மாவட்ட அணியினர் 43.5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்கினையும் இழந்து 181 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அஸ்வித 52 ஓட்டங்களையும், பிரவின் 44 ஓட்டங்களையும் தமது அணிக்கு சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கிளிநொச்சி மாவட்ட அணியினர் சார்பில் பானுசன் 8.5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 31 ஓட்டங்களுக்கு3இலக்கினையும், பிரதிசன் 10பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 2 இலக்கினையும், சிவானுஜன் 7 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு ஓர் இலக்கினையும் வீழ்த்தினர். (த-23)

# இலங்கை சொதப்பல்; இந்தியா முன்னிலை

கொழும்பு, ஓக.31

இலங்கை, இந்திய அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் 3ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின், 3ஆம் நாள் முடிவில், இந்திய அணி முன்னிலையிலுள்ளது.

கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் இடம்பெற்றுவரும் இப்போட்டியில், 8 விக்கெட்டுகளை இழந்து 292 ஓட்டங்களுடன் 3ஆவது நாளை ஆரம்பித்த இந்தியா, சகல விக்கெட்டுகளையும் இழந்து 312 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் புஜாரா ஆட்டமிழக்காமல் 145, அமித் மிஷ்ரா 59 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் இலங்கை சார்பாக தம்மிக்க பிரசாத் 4, ரங்கன ஹேரத் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இலங்கை அணி, சகல விக்கெட்டுகளையும் இழந்து 210 ஓட்டங்களையே பெற்றது.

ஒரு கட்டத்தில், 6 விக்கெட்டுகளை இழந்து 47 ஓட்டங்களுடன் இலங்கை தடுமாறியது. எனினும், அறிமுக வீரர் குசால் பெரேராவும் ரங்கன ஹேரத்தும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

துடுப்பாட்டத்தில் குசால் பெரேரா 55, ரங்கன ஹேரத் 49, தம்மிக்க பிரசாத் 27 ஓட்டங்களைப் பெற்றனர்.பந்துவீச்சில் இஷாந்த் ஷர்மா 5, அமித் மிஷ்ரா, ஸ்டுவேர்ட் பின்னி தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

111 ஓட்டங்களால் முன்னிலை வகித்த நிலையில் தனது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, நேற்றைய நாள் முடி வில் 3 விக்கெட்டுகளை இழந்து 21 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. விராட் கோக்லியும் ரோகித் சர்மாவும் ஆட்டமிழக்காமல் களத்தில் காணப்படுகின்றனர்.

பந்துவீச்சில் நுவான் பிரதீப் 2 விக்கெட்டுகளையும் தம்மிக்க பிரசாத் ஒரு விக்கெட்டையும் கைப் பற்றினர்.

இதன்படி, 7 விக்கெட்டுகள் கைவசமுள்ள நிலையில், 132 ஓட்டங்களால் இந்தியா முன்னிலை வகிக்கிறது. நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும். (த)

## தொடர்ச்சி....

### எதிர்க்கட்சித்

பதவியை வழங்க வேண்டும் என்று வலியுறுத்த அக்கட்சியின் முக்கியஸ்தர்கள் தீர்மானித்துள்ளனர் என சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தகவல்கள் தெரிவித்தன.

எனினும் தற்போது அமைக்கப்படவுள்ள தேசிய அரசில் இரண்டு வருடங்களுக்கு மாத்திரமே இணைந்திருக்கவும், அதன் பின்னர் நாடாளுமன்ற பிரதான எதிர்க்கட்சியாக செயல்படவும் சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது.

இந்தநிலையில் குறித்த இரண்டு வருடங்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்குவது குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடனும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடனும் ஆலோசித்துள்ளனர் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.(ற-ரி)

### கதிர்காமரின்

துப்பாக்கிதாரி ஒருவரால், 2005 ஓகஸ்ட் 12ஆம் திகதி தந்தை படுகொலை செய்யப்பட்டார். விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச அளவில் பரப்புரைகளை மேற்கொண்டு, பல்வேறு நாடுகளில் புலிகள் இயக்கத்தை தடை செய்வதற்கு காரணமாக இருந்தவர் என்பதால், அவர் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

எனினும், எல்லாவற்றுக்கும் விடுதலைப் புலிகள் மீது குற்றம்சாட்டி விடுவது இலகுவானது. இதில் வேறு காரணிகளும் தொடர்புபட்டிருக்கலாம். கொலைக்கான உத்தரவு எங்கிருந்து வந்தது என்ற கண்டுபிடிக்கப்பட வேண்டும். கடந்த பத்தாண்டுகளில் நடந்த பல கொலைகள், சம்பவங்கள் தொடர்பாக முழுமையான விசாரணைகள் நடத்தப்படவில்லை.- என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, வலிகாமம் வடக்கில் கதிர்காமரின் குடும்பத்துக்குச் சொந்தமான காணிகள் முன்னைய அரசால் சுவீகரிக்கப்பட்டது குறித்தும் அஜிதா கதிர்காமர் விசனம் வெளியிட்டுள்ளார்.

காணிகள் தொடர்பான சட்டரீதியான ஆவணங்கள் அனைத்தும் எம்மிடம் உள்ள போது, அவை கதிர்காமர் குடும்பத்துக்குச் சொந்தமானவை என்று தமக்குத் தெரியாதென்று எப்படிக் கூற முடியும்?. இப்போது எமது குடும்பத்துக்குச் சொந்தமான நிலம் ஜனாதிபதி மாளிகையாக்கப்பட்டுள்ளது -என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ற-ரி)

### ஐ.நா. அறிக்கை

விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் உள்நாட்டு பொறிமுறைக்கு ஆதரவளிக்கப் போவதாக அமெரிக்காவின் தெற்காசிய பிரதிச்செயலாளர் நிஷா பிஸ்வால் கடந்த வாரம் கொழும்பில் வைத்து தெரிவித்திருந்தார்.

எனினும் அமெரிக்காவின் புதிய கொள்கை தொடர்பில் அவர் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை அமெரிக்கா எப்போதுமே உள்நாட்டு மற்றும் சர்வதேச விசாரணை தொடர்பிலேயே பேசி வந்தது. 2014ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா சர்வதேச விசாரணையை கோரியிருந்தது. எனினும் கடந்த வாரம் அதற்கு சமாந்தரமாக அமெரிக்கா உள்ளக விசாரணையை கோரியுள்ளது.

இந்த நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அதற்காக அதிகாரங்கள் பகிரப்பட வேண்டும். இது மைத்திரி – ரணில் ஆட்சியில் எதிர்ப்பார்க்கப்படுகிறது என்று சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

இந்திய நாளிதழ் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற-ரி)

### முறைசாராக்

தலைமையகத்தில் இந்தக் கூட்டம் இடம்பெறும் என்று ஜெனிவாவுக்கான அமெரிக்க தூதுவர் கீத் ஹாப்பர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் புதிய அரசின் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் தீர்மானம் ஒன்றை முன்வைப்பதற்கு, அங்கத்துவ நாடுகளின் குழுவின் சார்பாக அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகவும், கீத் ஹாப்பர் ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு அறிவித்துள்ளார். இந்த விடயத்தில், இலங்கையின் புதிய அரசு மற்றும் முக்கிய பங் காளர்கள் இணைந்து செயற்படுவர் என்று நம்புவதாகவும் அவர் ஐ.நா மனித உரிமைகள் சபை ஒழுங் கமைப்புக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (ற-ரி)

# அச்சங்குளம் ஐக்கியம் சம்பியன்

மன்னார் உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் பி பிரிவு அணிகளுக்கு இடையிலான, 9 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் மன்னார் நகர சபை மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. அதில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அச்சங்குளம் ஐக்கிய அணியை எதிர்த்து விடத்தற்தீவு ஐக்கிய அணி மோதிக் கொண்டது. இதில் அச்சங்குளம் ஐக்கிய அணி 3:0என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இறுதியாட்ட நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் குணசீலன் கலந்து கொண்டார். (த-23)

## மரண அறிவித்தல்கள்

### இளையதம்பி குமரவேல்

(இளைப்பாறிய தபாலதிபர்)



கரம்பனை பிறப்பிடமாகவும், காரைநகரை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி குமரவேள் நேற்று (30.08.2015) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - பார்வதி தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான பரமநாதர் - சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் இராசலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செவ்வேள் மற்றும் ஞானவேள், தேவகுஞ்சரி (பிரான்ஸ்), முருகவேள், தேவமனோகரி (ஆசிரியை, யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), தேவ லோசனி (ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும்சிதம்பரப்பிள்ளை (பிரான்ஸ்), குணவதி, உருத்திரசிங்கம் (ஆசிரியர், யா/யாழ்ற்றன் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் விக்னசாயியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2015) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் இல, 629/1 காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல, 629/1 காங்கேசன் துறை வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல் :-
குடும்பத்தினர்.

### திருமதி சின்னம்மா நடராசா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னம்மா நடராசா நேற்றுமுன்தினம் (29.08.2015) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கமுத்து தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - அன்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா, பொன்னம்பலம் மற்றும் மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் பூமணி, பாக்கியநாதன் (பூசணி- France), இராசேந்திரம் (ரிசி - London), காலஞ்சென்ற பத்மாவதி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இலங்கைநாயகி, சாந்தினி, கந்தசாமி, கமலாதேவி (பிரான்ஸ்), கீதா (லண்டன்) ஆகியோரின் மாமியாரும் சதீஸ்குமார் (லண்டன்) பாமினி, தர்சினி, ஜெயந்தினி, சாந்தகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சுரேஷ்குமார், சிவகுமார் (லண்டன்), பத்மப்பிரியா, ஜிற்றேந்திரா (பிரான்ஸ்), றேனுகா (பிரான்ஸ்), சாள்ஸ் (பிரான்ஸ்) றெபேக்கா (பிரான்ஸ்), அருண்றோய் (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், யனோஸ் (லண்டன்), டேனுசா (லண்டன்), சாருஜா, கபிசன், அபிநயா, பிந்துஜா, பிரவீன், சஸ்மிதா, டிலக்சனா, விதுசன், கோபிகா, கிருஜன் (லண்டன்), தனுஜன் (லண்டன்), ஜனிஸ்கா (பிரான்ஸ்), செலியான் (பிரான்ஸ்), நிலான் (பிரான்ஸ்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2015) திங்கட்கிழமை பி.ப 4.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :-
குடும்பத்தினர்.

### சிவலிங்கம் சியாமினி



சாவகச்சேரியைச் சேர்ந்த சிவலிங்கம் சியாமினி நேற்று (30.08.2015) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் சீதாலட்சுமி தம்பதிகளின் புதல்வியும் சிவாஜினி (தாதிய உத்தியோகத்தர் - யாழ் போதனா வைத்தியசாலை), சுகந்தினி (பிரான்ஸ்), சுதாஜினி (அமெரிக்கா), ஸ்ரீறஞ்சினி, சங்கர் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவராஜா (ஆசிரியர், சாவ.இந்து ஆரம்ப பாடசாலை), உருத்திரா (பிரான்ஸ்), கரிகால்வளவன் (அமெரிக்கா), ரகுபதி (ஸ்ரீகோணேஸ்வரா புத்தகசாலை - சாவகச்சேரி), மீரா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் கதம்பவியின் (மாணவி - சாவ.இந்துக் கல்லூரி) சிறிய தாயாரும் தமீரா, சஞ்சய் (அமெரிக்கா), நிஜங்கன், திருமதி தர்சிகா, சரண்யா ஆகியோரின் பெரிய தாயாரும் சர்மிலன், சர்வஜன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு அத்தையும் அகிலனின் மாமியாரும் ரித்திகாவின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.08.2015) திங்கட்கிழமை பி.ப 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :- குடும்பத்தினர்.

கல்வயல் வீதி,
சாவகச்சேரி.

0775755015,0778756754,
0776701277

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதநிலா அணி வெற்றி

மாங்குளம், ஓக. 31
பண்டார வன்னியன் வெற்றிக் கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத் தொடரில் மருதநிலா அணி வெற்றி பெற்றுள்ளது.
வவுனியா உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வவுனியா முன்னணி அணிகளுக்கிடையே நடத்தப்படும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து மருதநிலா அணி மோதியது. ஆட்டம் தொடங்கிய திலிருந்து மருதநிலாவின் ஆட்டம் மேலோங் கிக் காணப்பட்டது. இதனால் முற்பாதியாட்டத்தில் மருதநிலாவின் ஆட்டத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் ஈகிள்ஸ் அணியினர் திணறினர். மருதநிலா அணியினர் ஆட்டம் தொடங்கி 10ஆவது நிமிடத்தில் வேணுகரன், 13ஆவது நிமிடத்தில் செல்வகாந்தன், 18ஆவது நிமிடத்தில் பிரதீப் என அடுத்தடுத்து கோல்களைப் போட்டு ஈகிள்ஸ் அணியினருக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தனர். இருந்த போதும் போராடிய ஈகிள்ஸ் அணியினர் 38ஆவது நிமிடத்தில் பிரான்சிஸ் கோலைப் போட முற்பாதியாட்டத்தில் 3:1 என மருதநிலா அணியினர் முன்னிலை வகித்தனர்.
இடைவேளையின் பின்னர் ஆட்டம் தொடங்கிய போது தமது ஆட்ட வியூகங்களை மாற்றிக் களம் இறங்கிய ஈகிள்ஸ் அணியினர் 64ஆவது நிமி டத்தில் தமிழ்ச்செல்வன், 67ஆவது நிமிடத்தில் அசங்க அடுத்தடுத்து இரு கோல்களைப் போட்டு கோல்களின் எண்ணிக்கையை சமப்படுத்தினர். இதனால் ஆட்டம் விறு விறுப்பின் உச்சக் கட்டத்தை எட்டியது. இதன் பின்னர் இறுதி நேரத்தில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய மருதநிலா அணியின் வீரர்கள் 78 ஆவது நிமிடத்தில் வேணுகரன், 86ஆவது நிமிடத்தில் பிரசாந் ஆகியோர் கோல்களைப் போட ஆட்ட நேர முடிவில் 5:3 என்ற கோல் கணக்கில் மருதநிலா அணியினர் வெற்றி பெற்றனர்.
(த-422)

சிங்களம்
O/L Past Paper Class and Oral Class
O/L Past paper Class
சனி மற்றும் ஞாயிறு நாட்களில்
ஆரம்பம்:- 05.09.2015 (மகளிர் கல்லூரி சொல்லளவில்)
ORAL (பேச்சுப் பயிற்சி)
திங்கள் மற்றும் வெள்ளி (அரச ஊழியர்கள் மட்டும்)
ஆரம்பம்:- 31.08.2015 -- பி.ப. 6.00 - 7.00 வரை
ஸ்ரீ மாஸ்டர்
ஸ்ரீ இரண்டாம் மொழிக் கல்வி நிறுவகம்
72, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். (சிவன்கோவில் அருகில்)
41, றக்கா லேன், கண்டிக்குளி,யாழ்ப்பாணம்.
விவரங்களுக்கு:-0777 053729

IIS இடமாற்ற அறிவித்தல்
இல 100 மணிக்கூட்டு வீதியில் இயங்கி வந்த IIS நிறுவனம் தற்போது புதிய பல தொழில்நுட்ப சேவை / அறிமுகங்களுடன் தனது 20ஆம் வருடத்தில் இல 209 மானிப்பாய் வீதி (வைத்தீஸ்வராக் கல்லூரிச்சந்தி அருகில்) யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு தனது சேவையினை மாற்றியுள்ளது என்பதனை மாணவர்கள்,பெற்றோர்கள், நலன்விரும்பிகளுக்கு அறியத்தருகின்றோம்.
"IIS என்றும் உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி"
IIS இல 209 மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்
021 222 2831 / 071 777 4 555

பணியாளர் தேவை
முன்னணி தனியார் கல்வி நிறுவனம் ஒன்றின் பரீட்சைப் பகுதிக்கு பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.
1) எழுதுவினைஞர் (கணினி அறிவுள்ள ஆண்கள்)
2) சிற்றூழியர்கள் (ஆண்கள்)
*நேர்முகத் தேர்வு : 09.09.2015 முற்பகல் 11.00மணி
NEW SCIENCE WORLD

20ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர் முருகேசு கனகசபை
(ஆசிரியர்)
திதி: ஆவணி மாத அபரபக்க துதியை
மண்ணில் 26.10.1942
விண்ணில் 11.09.1995
கற்க வழிகாட்டி கனவுடனே பார்த்திருந்து
நற் தவத் தந்தையாய் ஞாலத்தில் வழிகாட்டி
உற்ற மனையாளிற்கு உறுதுணையாய் வாழ்ந்திருந்த
உற்றவர்க்கும் மற்றவர்க்கும் நாயகனாம் நம் பிதா
கண்ணயர்ந்து பாதமதிற் கலந்து வருடம் இருபது
கண்ணீருடன் காத்திருப்போம் யாம்
என்றுமே உங்கள் ஆசி வேண்டி
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்
கைதடி - நுணாவில்,
சாவகச்சேரி.

# உலக தடகளப் போட்டிகளில் கென்யா முதலிடம் பிடித்தது




பீஜிங், ஓக.31
உலக தடகளப் போட்டிகளில் முதல் முறையாக கென்யா 7 தங்கம் அடங்கலாக 16 பதக்கங்களுடன் பதக்கப் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
இரண்டாவது இடத்திற்கு வந்துள்ள ஜமைக்கா 7 தங்கம் அடங்கலாக 12 பதக்கங்களை பெற்றுள்ளது. அமெரிக்கா 6 தங்கம், 6 வெள்ளி அடங்கலாக 18 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திற்கு வந்துள்ளது.
இம்முறை சீனத் தலைநகர் பீஜிங்கில் 9 நாட்களாக நடந்துவந்த உலக தடகளப் போட்டிகள் நேற்று நிறைவடைந்தன.
இறுதியாக நடைபெற்ற போட்டியான ஆடவர்களுக்கான 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் டிரினிடாட்-டொபாகோ அணியை முந்தி அமெரிக்கா தங்கத்தை வென்றுள்ளது. பிரிட்டன் வெண்கலப் பதக்கத்தை வென்றது. மகளிருக்கான 400 மீற்றர் அஞ்சல் ஓட்டத்தில் ஜமைக்கா முதலிடத்தை பெற்றது.
இம்முறை உலக தடகளப் போட்டிகளில் இந்தியா, இலங்கை உள்ளிட்ட தெற்காசிய நாடுகள் எந்தப் பதக்கத்தையும் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# பொய்யான தகவல்



மன்செஸ்டர் யுனைடெட் அணியில் தான் சேரப் போவதாக வெளியான தகவல் முற்றிலும் வதந்தி என்று பிரேசில் நாட்டின் நட்சத்திர வீரரான நெய்மர் தெரிவித்துள்ளார்.
கடந்த சில தினங்களாக நெய்மர், 250 மில்லியன் யூரோவுக்கு மன்செஸ்டர் யுனைடெட் அணிக்கு ஒப்பந்தம் செய்யப்படப் போவதாகச் செய்திகள் வெளி வந்தன. இதனால் நெய்மர் ரசிகர்களும் மன்செஸ்டர் ரசிகர்களும் பெரும் குழப்பத்திற்கு உள்ளானார்கள்.
மேலும், நெய்மரின் முகாமையாளர் ரிபேரோ, மன்செஸ்டர் யுனைடெட் அணியின் பயிற்சியாளர் லூயீஸ் வான் காலுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதாக இங்கிலாந்து ஊடகங்களில் செய்தி வெளியானது.
இந்நிலையில் இது தொடர்பாக கருத்து தெரிவித்த நெய்மர், மன்செஸ்டர் யுனைடெட் அணியில் நான் சேரப் போவதாக வெளியான தகவல் உண்மை இல்லை. மன்செஸ்டர் யுனைடெட் அணிக்காக விளையாட 250 மில்லியன் யூரோ வரை பேசப்பட்டது.
ஆனால் பார்சிலோனா அணிக்காகவே தொடர்ந்து நான் விளையாட விரும்புகிறேன். மன்செஸ்டர் யுனைடெட் அணிக்காக நான் ஒரு போதும் விளையாட விரும்பியதில்லை. இது போன்ற வதந்தி எனக்கு மன வேதனை அளிக்கிறது என தெரிவித்துள்ளார்.
நெய்மரின் பார்சிலோனா அணியுடனான ஒப்பந்தம் 2016ஆம் ஆண்டுடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (த)

# சென்னை, ராஜஸ்தானுக்கு பதிலாக புதிய 2 அணிகள்?

2013ஆம் ஆண்டு ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் நடந்த சூதாட்டம் குறித்து கொல்கத்தாவில் நடைபெற்ற லோதா குழு தீர்மானத்தில், சென்னை, ராஜஸ்தான் அணிகளுக்கு பதிலாக புதிதாக 2 அணிகளை தற்காலிகமாகச் சேர்ப்பது பற்றி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மேலும், ஐ.பி.எல் தொடரை 10 அணிகள் கொண்டதாக மாற்றி 2018 முதல் ஐ.பி. எல். போட்டிகளை 10 அணிகள் கொண்டதாக மாற்றி நடத்தலாம் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.
2013ஆம் ஆண்டு ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டியில் நடந்த சூதாட்டம் குறித்து விசாரித்த லோதா குழு சென்னை சுப்பர் கிங்ஸ், ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகளுக்கு 2 ஆண்டுகள் தடை விதித்தது.
இந்தத் தடை உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மனு தாக்கல் செய்துள்ளது.
ஆனால் த்டை உத்தரவுக்கு உடனடியாக இடைக்காலத் தடை விதிக்க சென்னை உயர் நீதிமன்றம் மறுத்து விட்டது. இந்த வழக்கில் பதில் மனு தாக்கல் செய்யுமாறு இந்திய கிரிக்கெட் சபைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
இந்நிலையில் கொல்கத்தாவில் நடைபெற்ற ஐ.பி.எல் நிர்வாகக் குழுக் கூட்டத்தில் 2 முக்கிய பரிந்துரைகளை கிரிக்கெட் வாரியத்திற்கு அனுப்பி வைக்க தீர்மானிக்கப்பட்டது.
1) சென்னை, ராஜஸ்தான் ஆகிய இரு அணிகளுக்கும் தடை விதிக்கப்பட்டு விட்டதால் அவற்றுக்குப் பதில் புதிதாக 2 அணிகளை தற்காலிகமாக சேர்ப்பது.
2) ஐபிஎல் தொடரை 10 அணிகள் கொண்டதாக மாற்றி 2018 முதல் ஐ.பி.எல் போட்டிகளை 10 அணிகள் கொண்டதாக மாற்றி நடத்தலாம்.
இந்த முடிவுகளை ஐ.பி.எல் நிர்வாகக் குழு, இந்திய கிரிக்கெட் சபைக்குப் பரிந்துரைத்துள்ளது.(த)

# ஐக்கியம், காளியம்பாள் ஆட்டங்களில் அசத்தல்

அராலி ஏ.எல் விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல். இளைஞர் கழகமும், இணைந்து யாழ்.உதை பந்தாட்ட லீக்மற்றும், வலிகாமம், வடம ராட்சி,பருத்தித்துறை,தீவக உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வைகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.
அதில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி சில்வெஸ்ரார் அணியை எதிர்த்து யாழ். ஐக்கிய அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததினால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது. இதில் யாழ். ஐக்கியம் அணியினர் 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றனர்.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளி அம்பாள் அணியை எதிர்த்து அராலி மாவத்தை அணி மோதிக் கொண்டது. இதில் தாவடி காளி அம்பாள் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org